இனிய

# நந்தவனம்

மக்கள் மேம்பாட்டு இதழ்

ஜூன் 2010 விலை ரூ.10/-

## இலங்கைச் சிறப்பிதழ்



சவால்களுக்கிடையே
வாழும் சமூகம்
-செங்கை ஆழியான்



பிரபாகரனை
சந்தித்த வேளை.
இயக்குநர் சீமான்



நல்லெண்ணம் படைத்த
நாடகப் புரட்சியாளர்
-பராக்கிரிம நிரியல்ல



பாரம்பரியக் கலை
பரதநாட்டியம்



## தாய்மொழி தமிழல்லாத தமிழ்த் தொண்டர்

-புரவலர் ஹாசிம் உமர்

1986 Silver Jubilee Year 2011
17-01-2010 to 17-01-2011

# 24 Hrs 365 Days

**All Domestic & International**
**Air Tickets Available Across the Counter**

## madura travel service (P) Ltd.

11-3, Gandhi Irwin Road (Opp. Egmore Railway Station), Egmore, Chennai - 600 008, Tamilnadu, India.
Ph : +91 98416 91234, Fax : +91 44 2819 1813
Email : india@maduratravel.com, Web : www.maduratravel.com

IATA IAAI TAFI

Inbound & Outbound Tours | IRCTC Tours | Forex | Money Transfers | Hotel bookings | Insurances | Railway Tickets | Vehicle Rentals

madura WELCOME

TAMILNADU
No.1 Tourist Guide
Quarterly Magazine

TNENG/2000/01867 RNI
MEMBER INS

More than 1000 colour pages with maps Rs. 100/- Call : 98414 99000

தமிழ்க்குரல்
www.worldtamilnews.com




**First Internet Radio initiative**
*Worldtamilnews.com* is the first Internet radio which was inaugurated by CM of Tamil Nadu Dr. Kalaignar Karunanidhi on July 15, 2001 with his own speech.



உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க உறுப்பிதழ்

ஆசிரியர்
நா. சந்திரசேகரன்
பேச : 94432 84823/96003 63511

கௌரவ ஆசிரியர்
கலாநிதி கல்லாறு சதீஷ், சுவிட்சர்லாந்து
பேச: 0041787045518

நிர்வாக ஆசிரியர்
சி. சங்கீதா சந்திரசேகரன்

இணையாசிரியர்
தன்னம்பிக்கை லெனா
பேச: 98431 91648

உதவியாசிரியர்
வெற்றித்தமிழன்
டாக்டர் எஸ். செந்தில்குமார்

சிறப்பாசிரியர்
மதிருவள்ளுவர்

ஆலோசகர்கள்:
புலவர். தியாசாந்தன், மங்களா பழனியப்பன்
வழக்கறிஞர் மு. சித்ரா, B.A., B.L.,

ஆலோசனைக் குழு
வண்ணை தெய்வம், பிரான்ஸ்
அந்தனி ஜீவா, இலங்கை
பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா, ஆஸ்திரேலியா
தலைநகர் கூ. கண்ணன், மலேசியா
சிங்கை தமிழ்ச்செல்வம், சிங்கப்பூர்
வேலணையூர் பொன்னண்ணா, டென்மார்க்
தம்பி புவனேந்திரன், ஜெர்மனி
வவுனியூர் உதயணன் இலண்டன்

அனைத்துத் தொடர்புக்கும்
**இனிய நந்தவனம்**
எண்.18, பெரிய செட்டித்தெரு, உறையூர்
திருச்சி - 620 003

**INIYA NANDAVANAM**
18, Periya Chetti Street? Woraiyur? Trichy - 620003
Tamil Nadu, South India


## நுழைவாயில்... கொடி:7 மலர்:9

உலகச் செம்மொழி மாநாட்டுக் கொண்டாட்டங்கள் தொடங்கியாயிற்று. இந்த மாத இறுதியில் கோவையில் நடைபெறும் செம்மொழி மாநாட்டால் கோவை மாநகரமே விழாக்கோலம் பூண்டிருக்கிறது.

உலகத்தமிழர்கள் அனைவரும் ஒன்று கூடும் இம்மாநாடு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாய் அமையும் என்பதில் எள்ளளவும் அய்யம் இல்லை. இம் மாநாடு பற்றி நிறைய சர்ச்சைகள் இருந்தபோதும் தமிழ்ச் செம்மொழி என்பதை உலகுக்கு பறை சாற்று வதற்காக கிடைத்த வாய்ப்பாக இதை நாம் நோக்கலாம்.

அரசியல் முரண்பாடுகளுக் கிடையே இம்மாநாடு நடைபெற்றாலும், நாம் தமிழர்கள் நம்முடைய தாய்மொழிக்கு நாமே எடுக்கும் விழா என்ற அடிப்படையில் பார்ப்பதுதான் சாலச்சிறந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வேற்று மொழிக்கான மாநாடு அல்ல இது நம்முடைய தாய் மொழிக்கான விழா. இதை விமர்சித்துக் கொண்டிருப்பதைவிட, ஆதரவு கொடுக்காவிட்டாலும் அமைதியாக இருந்து விட்டுப் போவதே சாலச் சிறந்தது என்பது எனது கருத்து.

இச்செம்மொழி மாநாட்டுக் கொண்டாட்டங்களோடு இனிய நந்தவனமும் இலங்கைப் படைப்




email: nandavanam04@rediffmail.com
nandavanam10@gmail.com

பாளி களின் படைப்புகளைச் சுமந்து இந்த இதழை இலங்கைச் சிறப்பிதழாக கொண்டு வருவதில் பெருமையடை கிறது.

இந்த இதழ் செம்மொழி சிறப் பிதழாக வெளிவரும் என்று நீங்கள் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் இலங்கைப் படைப்பாளி களை சிறப்பிக்க வேண்டும் என்பதற் காக இந்த இதழை இலங்கைச் சிறப்பித ழாக கொண்டு வந்திருக்கி றோம்.


நந்தவனம் சிறப்பிதழ்கள் வரிசை யில் இது முக்கிய இடத்தை பிடிக்கும் என்றும் நம்புகிறோம். மேலும் இச்சிறப்பிதழ் வரலாற்றுச் சிறப்பு மிக்க பதிவாக இருக்கும் என்ற நம்பிக்கையில் மிக நேர்த்தி யாக தயாரித்து இருக்கிறோம் என்ற பெருமையுடன் உங்களின் கருத்துக் களுக்காக காத்திருக்கிறோம் நன்றி.

-ஆசிரியர்.

---

அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் இவற்றைப் பின்பற்ற வேண்டும். அது பழைமையானதாக, புதியவையாக, தமிழர்களுடையதாக ஆரியருடையதாக, அய்ரோப்பியருடையதாக இருந்தாலும் இருந்து விட்டுப் போகட்டும்.

-பெரியார்






கோபத்தோடு எழுகிறவன் நட்டத்தோடு உட்காருவான். - பெரியார்

இனிய
# நந்தவனம்
2009 இதழ்களின் தொகுப்பு



**இனிய நந்தவனம் 2009**

இதழ்கள் அழகிய வடிவில் தொகுப்புச் செய்யப்பட்டு
தற்போது விற்பனைக்கு உள்ளது. விலை ரூ.75/-

அஞ்சலில் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் :


இனிய நந்தவனம், எண். 18, பெரியசெட்டித் தெரு, உறையூர்,
திருச்சி-620 003. பேச: 94432 84823, 96003 63511



கொஞ்சம் கொடுங்கள்; நெஞ்சங்கள் வாழ்த்தும், இரத்ததானம். - அசென்

# தாய்மொழி தமிழல்லாத தமிழ்த் தொண்டர்

-புரவலர் ஹாசிம் உமர்-



இனிய நந்தவனம் இலங்கைச் சிறப்பிதழ் வெளியிடவேண்டும். என்று முடிவு செய்தவுடன் நான் முதலில் ஆலோசனை கேட்டது இனிய நந்தவனம் இலங்கைப் பொறுப்பாளார் அந்தனி ஜீவா அவர்களிடம் தான். மலேசியா எழுத்தாளர் மார்கரெட் செல்லதுரை அவர்களின் நூல் வெளியீட்டு விழாவுக்காக சென்ற வருடம் 2009 அக்டோபர் மாதம் நான் இலங்கை சென்றிருந்தபோது இலங்கைச் சிறப்பிதழ் பற்றி அந்தனி ஜீவாவிடம் ஆலோசித்தேன் முதலில் அவர் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்த நபர் கலைஞர் கலைச்செல்வனைத்தான் இலங்கை நாடகக் கலைஞரான இவரைப் பற்றி நந்தவனத்தில் ஏற்கனவே அறிமுகப்படுத்தி நேர்காணல் வெளியிட்டிருக்கிறோம், இவர் மூலமாகவும் நல்ல ஆலோசனைகளும் பல எழுத்தாளர்களின் தொடர்பும் கிடைத்தது. நந்தவனம், இலங்கைச் சிறப்பிதழில் இலங்கையின் முக்கிய பிரமுகர் ஒருவரின் நேர்முகம் அவசியம் இருக்க வேண்டும் என்றார். "யார்" என்று நான் கேட்ட போது என்னுடன் வாருங்கள் என்று என்னை அழைத்துப் போய் அந்த முக்கியமான நபரான புரவலர் ஹாசிம் உமர் அவர் களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவரை அறிமுகம் செய்துவைத்து இவரை நீங்கள் நேர்காணல் செய்ய வேண்டும் என்றபோது எனக்கு ஒன்றுமே புரியவில்லை, பின்பு கலைச்செல்வனே புரவலர் பற்றி நிறைய விடயங்களை பகிர்ந்து கொண்ட போது ஓரளவுக்கு புரவலர் பற்றி புரிந்து கொள்ள முடிந்தது.

புரவலர் ஹாசிம் உமர் இவர் தாய் மொழி தமிழல்லாத மேமன் சமூகத்தில் பிறந்தவர். ஆனால் தமிழ் படித்து தன்னை ஒரு தமிழ் ஆர்வலராய் உருவாக்கிக் கொண்டவர். இவரைப் பற்றி இலங்கை "தினகரன்" முன்னால் ஆசிரியர் குறிப்பிடும்போது பண்டைக் காலத்தில் ஒவ்வொரு புலவனுக்கும் ஒவ்வொரு வள்ளல் பக்கபலமாக இருந்து உதவுவர். ஆனால் இன்று எல்லாப் புலவர்களுக்கும் (நூலாசிரிய ருக்கும்) ஒரே யொரு புரவலர் ஹாசிம் உமார்தான்



விழுவது இயற்கை; எழுவதே வாழ்க்கை -கன்பூசியசு.

என்று குறிப்பிடுகிறார் அந்தளவுக்கு இவர் இலக்கியவாதிகளுக்கும், இலக் கிய நிகழ்வுகளுக்கும் நிறைய உதவி வருகிறார்.

இலங்கையில் நூல் வெளியீட்டு விழாவுக்கு இவரை அழைத்தால் இவர்தான் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வார். இப்படி இவர் 500க்கு மேற்பட்ட முதல் பிரதிகளை வாங்கி சாதனை நிகழ்த்தியிருக்கிறார், இதற் காக இவர் பல இலட்சம் ரூபாயை செலவு செய்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்ட போது ஆச்சரியமாக இருந்ததோடு உண்மையிலேயே இவர் கொடை வள்ளல்தான் என்பதை உணர முடிந்தது.

கடந்த இரண்டு வருடமாக இலங்கையில் படைப்பாளிகள் தங்களின் படைப்புகளை நூலாக வெளியிட முடியாத சூழ லில் இருப்பவர்களின் படைப்புகளை வாங்கி புரவலர் அவர்களே தனது சொந்தச் செலவில் புத்தக மாக்கி அவர் செலவு லேயே வெளி யிட்டு விழாவும் வைத்து அதில் கிடைக்கும் தொகையை அந்தப் படைப்பாளிக்கே கொடுத்து உதவு கிறார் இப்படி மாதம் ஒரு நூல் வெளியிட்டு இதுவரையில் 20 நூல்கள் புரவலர் புத்தகப் பூங்கா வெளியீடாக வெளிவந்திருக்கின்றன. தமிழைத் தாய் மொழியாகக் கொள் ளாத ஒருவர் தமிழுக்கு செய்துவரும் பணிகளை பாராட்டு வதோடு நின்று விடாமல் நந்தவனம் வாசகர்களுக்கும் அவரை அறிமுகப் படுத்த வேண்டும் என்ற நோக்கில் புரவலருடன் ஒரு நேர்காணல்.

➲ **எத்தனை ஆண்டுகளாக இலங்கையில் வாழ்ந்து வருகிறீர்கள்?**

நான் ஒரு மாதக்குழந்தையாக இருக்கும் போதே இந்தியா விலிருந்து இங்கு வந்துவிட்டேன்.


➲ **தாய்மொழி தமிழல்லாத மேமன் சமூகத்தைச் சேர்ந்த தங்களுக்கு எப்படி தமிழார்வம் வந்தது.**



இந்த ஆர்வம் எப்படியோ என் இரத்தத்தோடு கலந்து விட்டது. இலங்கை கேகாலை சென், மேரீஸ் கல்லூரியில் நான் கல்வி பயின்ற அந்தச் சிறுவயதுக் காலத்திலேயே தமிழ் பத்திரிக்கைகள், சஞ்சிகைகள் என்று நிறையவே வாசித்து வந்தேன். அந்த வாசிப்பு எனக்குள் இலக்கிய ஆர்வத்தை விதைத்து விட்டிருக் கலாம். உண்மையிலேயே இவ்வாறான விடையங்களின் மீதான ஆர்வம், ஆசை என்பவற்றை வலிந்து உண் டாக்கி விட முடியாது. அவை



நடுக்கடலில் கப்பல் மாலுமிக்குத்தான் சொந்தம்.



தானாகவே உண்டாக வேண்டும்.

➲ **எழுத்தாளராக வரவேண்டும் என்று ஏதேனும் முயற்சி செய்தீர்களா?**

இதுவரைக்கும் இல்லை எழுத்தாளர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள், அவர்களுக்கு உதவினால் போதும் என்று நான் எழுதுவதில்லை.

➲ **நீங்கள் நிறைய இலக்கிய வாதிகளுக்கும், இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும் உதவிவருகிறீர்கள் இந்த எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது.**

நான் சேவை செய்வதற்கு ஒரு வழிவேண்டும் அதற்கு நான் இந்த வழியைத் தேர்ந்தெடுத்தேன். எனக்கு இருக்கும் வசதிக்கு நான் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம். ஆனால் நான் செய்யும் செலவில் அர்த்தம் இருக்க வேண்டும். ஆகையால் தான் இலக்கியத்திற்காக செலவு செய்கிறேன்.

➲ **கிட்டத்தட்ட 500 நூல்களை முதல் பிரதியாக வாங்கியிருக்கிறீர்கள் இது எப்படி சாத்தியமானது.**

இதை நான் பெருமையாக நினைக்கிறேன். இதில் எனக்கு எந்த விதமான சலிப்போ, வெறுப்போ இல்லை. ஆறம்பத்தில் நூறு நூல்கள் தான். வாங்கவேண்டும் என்ற இலக்கு வைத்திருந்தேன் ஆனால் போகப்போக அது போய்க்கொண்டே இருக்கிறது.

➲ **உங்களின் இந்த ஆர்வமும், பங்களிப்பும் உங்கள் வியாபார நடவடிக்கைகளை பாதிப்பதில்லையா?**

இறைவன் அருளால் எனது தொழில் நிறுவனம் வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆரம்பத்தில் கஷ்டங்களுடன் நான் முயற்சி செய்து தொழிலை விருத்தி செய்தேன். இப்போது அந்தத் தொழில் தானாகவே தன்னை விருத்தி செய்து கொண்டிருக்கிறது. எனவே ஆண்டவன் கருணையால் எந்தப் பிரச்சனையுமில்லை.

➲ **உங்களின் கலை, இலக்கிய ஈடுபாடுகளைப் பற்றி உங்கள் குடும்பத்தினர் கொண்டிருக்கும் அபிப்பிராயம் என்ன?**

என்னிடம் எந்தவிதமான கெட்டப் பழக்கங்களும் இல்லை, கெட்டப் பழக்கங்கள் இருந்தால்தானே எனது நடவடிக்கைகளில் அவர்களுக்கு அய்யம் வரும். மாறாக என்னுடைய நல்ல பணிகளின்மேல் அவர்களுக்கு நிறையவே நம்பிக்கையும் அபிமானமும் இருப்பதால் அவர்கள் தமது பூரண ஒத்துழைப்பை எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

➲ **தற்போது இலங்கை இலக்கிய உலகில் நூல்வெளியீடுகள் அதன் வளர்ச்சிகள் எப்படி இருக்கிறது.**

சுமார் பத்து வருடங்களுக்கு முன் நான் இலக்கியத்துறையில் மாதம் 3,4 என்று குறைந்த அளவில்தான் நூல்கள் வெளிவந்தன. இப்போது மாதத்திற்கு 15க்கு மேற்பட்ட நூல்கள் வெளிடப் படுகின்றன. இந்த வளர்ச்சியில் எனது பங்கும் உண்டு.

➲ **ஒரு சிறந்த படைப்பு என்பது எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.**

சாகித்திய விருது கிடைக்கும்



அச்சமும் அறியாமையும்தான் பக்தியின் தாயும் தந்தையும். - பெரியார்.

அளவுக்கு இருக்க வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் சாகித்திய பரிசு பெற்றால் அது சிறந்த படைப்பாகப் பார்க்கப்படுகிறது

➲ **உங்களது புரவலர் புத்தகப் பூங்கா வெளியீட்டகம் மூலமாக தமிழ் நூல்களை மட்டுமே வெளியிட்டு வருகிறீர்களா?**

இல்லை ஆங்கில நூல்களையும் சிங்கள நூல்களையும் வெளியிட்டு வருகிறோம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனச் செய்திப் பிரிவுத் தயாரிப்பாளராக இருந்த திரு.லால் ஹேமந்த்த மாவலகே என்பவர் கிறிஸ்மஸ் பற்றி சீக்மேவும், சிங்களத்தில் எழுதிய "உபத" என்ற நூலையும் வெளியிட்டுள்ளேன்.

➲ **இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை மட்டும்தான் வெளியிடுவீர்களா?**

இப்போதைக்கு இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை மட்டும் தான் வெளியிடுவதாக தீர்மானித்துள்ளேன்.


➲ **தமிழ் நாட்டில் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட அனுபவம் உண்டா?**

தமிழ்நாட்டில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நூல் வெளியிட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு முதற் பிரதியை பெற்றிருக்கிறேன்.

➲ **இந்த நேர்காணலின் கடைசியாக என்ன கூறவிரும்புகிறீர்கள்.**

விட்டுக்கொடுப்பவன் கெட்டுப் போவதில்லை. கெட்டுப் போகிறவன் விட்டுக் கொடுப்பதில்லை. இதைத் தான் நந்த வனம் வாசகர்களுக்காக இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**-சந்திப்பு: நந்தவனம்** ●



# புரவலர் சில பதிவுகள்


புரவலர் ஹாசிம் உமர் அவர்கள் இலக்கியத்திற்காக அவர் ஆற்றிய பணிகள், அவர் செய்துள்ள சமூக சேவைகள், அவரது நேர்காணல்கள் அவர் சந்தித்த முக்கிய பிறமுகர்களின் புகைப்படங்கள் இவை அனைத்தையும் உள்ளடக்கி ஒரு வரலாற்றுப் பொக்கிசமாக "புரவலர் சில பதிவுகள்" என்ற நூல்வெளியிடப் பட்டிருக்கிறது. இதன் தொகுப்பாசிரியர் கலைஞர் கலைச்செல்வன், வெளியீடு இலக்கிய முற்றம் இல.46. பிரட்கா ரோட், கொழும்பு - 06. இலங்கை.



மூடருள் மூடன் எனப்படுவான் - தாய்மொழி வாடக் களிக்கும் மகன் - வ.சுப. மாணிக்கனார்.

# யாழ்ப்பாண நூல் நிலையத்தின் இன்றைய நிலை

■ பெரிய ஐங்கரன்



ஆசியாவிலே புகழ் பூத்து விளங்கிய நூல் நிலையங்களில் யாழ் நூல் நிலையமும் ஒன்றாகும். பல இலட்சம் நூல்கள், ஓலைச்சுவடிகள், பெருந் தொகையான பத்திரிகை சஞ்சிகைகள் ஆகியவற்றோடு, யாழ் குடாநாட்டின் மூளையென விளங்கிய அந்நூல் நிலையம் 80 களில் உக்கிரமடைந்த வன்முறையால் தீக்கிறையானது. அது மீண்டும் மெல்ல மெல்ல உயிர் பெற்று பெருங் கட்டிடத்தோடு எழுந்து நிற்பது நெஞ்சிற்கு நிம்மதி தருகிறது.

ஒரு லட்சத்திற்கும் மேற்படாத நூல்களைக் கொண்டு விளங்கும் இன்றைய யாழ் நூலகத்தில் 11000ம் பேர், இதுவரை வாசகர்ளாகத் தம்மைப் பதிவு செய்துள்ளனர். நூல்களை இரவல் வாங்கும் பகுதியில் 2000ம் பேர் வரை பதிவு செய்துள்ள தாகக் கூறும் யாழ் நூலகர், முன்னர் நாள் ஒன்றிற்கு 300 பேர் வரை நூலகத்தைப் பயன்படுத்திய தாகவும் தற்போது வாசகர்களின் தொகை 150 ஆக குறைந்துள்ளதாகவும் குறுப்பிடுகிறார்.



மகிழ்ச்சி இல்லாதவர்களை விட்டு விலகும் கடைசிப் பொருள் நம்பிக்கையே.

உள்ளூர் ஆட்சி சபை அதிகாரி ஒருவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டேன்.

வீதித்தடைகள் முற்றாக நீக்கப் பட்டு மக்கள் அனைவரும் மீள் குடியமர்த்தப்பட்டால் யாழ் நூலகத் தின் வாசகர் தொகை பெருந் தொகை யாக அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக நூலகம் அடிக்கடி மூடப்படுவதனாலும்,

நூலகம் உயர்பாதுகாப்ப வலயப் பகுதியை அண்மித்திருப்பதனாலும் நூலகத்தின் வாசகர்கள் குறைந்து வருகிறார்கள் என்று அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்காலத்தைப் போன்று, எதிர் காலத்திலும் முன்னெடுக்கப்படும் என்று இன்னொரு அதிகாரி கருத்துக் கூறினார்.

"கணினி வளங்களோடு கூடிய நவீன வசதிகளை பெருக்குவதும், அதன் மூலமாக மக்களின் மொழி அறிவை விரித்தி செய்வதுமே" தங்களின் அபிவிருத்தியின் முக்கிய நோக்கம் என்று அவர் மேலும் கூறினார்.

யாழ் நூலகத்தில் மட்டுமன்றி வட மாகாணத்தில் உள்ள 110 நூலகங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் உதயன், வலம்புரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகள், கொழும்பில் வெளியாகும் தமிழ் ஆங்கில தேசியப் பத்திரிகைகள் அனைத்தையுமே நூல் நிலையத்தில் காண முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் சிறு சஞ்சிகைகள், கொழும்பு, மட்டக்களப்பு போன்ற இடங்களில் வெளிவரும் சஞ்சிகைகள், இந்தியாவில் இருந்து வெளி வரும் இலக்கியச் சஞ்சிகைகள், வணிகச் சஞ்சிகைகள், சர்வதேச ரீதியாக வெளிவரும் தமிழ் மற்றும் ஆங்கிலச் சஞ்சிகைகள் என பலவற்றையும் அங்கு காணக்கூடியதாக இருந்தன.

மொத்தமாக 180 சஞ்சிகைகள் வரை தமக்கு கிடைப்பதாக நூலகர் கூறினார்... அதில் சில சிறு சஞ்சிகைகள் காலதாமதமாகவும் பழுதடைந்த நிலையிலும் கிடைப்பதாகவும் அவர் சொன்னார். யுத்த காலங்களில் பல சஞ்சிகைகள் கிடைப்பதில்லை என்றும் இனி சம்மந்தப்பட்டவர்கள் நூலகத்திற்கு சஞ்சிகைகளை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

யாழ் நூலகரின் பெயர் : தனபால சிங்கம். முகவரி: நூலகர். யாழ் பொதுவான நூலகம், யாழ்ப்பாணம். இலங்கை. தொலைபேசி இலக்கம்: - 0212226028


**படைப்பாளர்கள் கவனத்திற்கு**

உங்களின் சிறந்த படைப்புகள் அனைத்தையும் மிக அழகாக வடிவமைத்து அச்சாக்கி புத்தகமாக்கித் தருகிறோம், தொடர்பு கொள்ளுங்கள்

**9600363511**




லாட்டரி என்பது முட்டாள்களுக்கு விதிக்கப்படும் ஒரு வகை வரி - என்றி பீல்டிங்.

கவிதைகள்

# ஆராதனை!

என்னை
ஆரத் தழுவி
அரவணைத்த அன்புத் தாயே!
நீ பிரிந்து
யாருமற்ற அநாதையாய் என்னை
அழ வைத்தாயே!
துடுப்பிழந்த படகாய்
துயரக் கடலில்
தத்தளிக்கும் என்னை
கரைசேர்ப்பார் யாருண்டு?
தாயன்புக்கு ஈடாக
தரணியிலே ஏதுண்டு?
உன் பிரிவுத் துயர் தாளாமல்
ஓயாது புலம்பும் எனக்கு...
ஒத்தடம் தர
உனை அன்றி
யார் வருவார் துணைக்கு?
உன்னை எண்ணியே
உயிர் சுற்றுது
ஒவ்வொரு திக்கும்!
உனக்காக
என்னுள்ளம்
ஓயாது ப்ராத்திக்கும்!!!

வெலிகம ரிம்ஸா முஹம்மத்,
இலங்கை.

# அனலிடை வாழ்தல்

அனலிடை வாழ்தல்
அறுபதின் பின்பும்
அடைகாக்கும்.
புனலிடை நனைதல்
புதினத்தில் பின்பும்
பூப்படையும்.
மழையினில் குளித்தல்
மேதையின் பின்பும்
மயக்கும்.
போரினில் சாய்தல்
போட்டியின் பின்பும்
புகழாகும்.
கடலினில் நுழைதல்
களரியின் பின்பும்
கனியாகும்.
சுடலையில் நுழைதல்
சுதந்திரத்தின் பின்பும்
தொடராகும்

-தமிழ்மானக் கவிராயர்-

# பிணமும் மணக்கும் அதன் மனமும்!

ஓவியமாய் என்னில்
நீ இருப்பதனால்
காவியம் படைக்க
நினைத்ததும் சரியே!

பிறரிடம்
காட்டுகிறாய்
மனித நேயம்... ஏனோ
எனக்கு மட்டும் தருகிறாய்
வார்த்தைகளால் காயம்!

எளிமையை விரும்புபவளாய்
நீ இருக்கிறாய்...
தனியாய் நான்
தவிப்பது கண்டு சிரிக்கிறாய்!

அருகிலிருக்கும்
என் இதயத்தை
மிதித்துக் கொண்டு
தூர இருக்கும்
மனிதர்களை நீ
மதிப்பது பற்றி
பெருமை படுகிறாய்!

உன் கண்ணீர்!
அது வெந்நீராய்
எனை சுட்டது பற்றி
உனக்குக் கூட
தெரியாது தான்!

இரட்டை வேஷம் போட்டது
உனை படுகுழியில்
தள்ளிடவல்ல...
வேஷத்தில்
மறைந்துள்ள
உன் மீதான பாசத்தை
நீ புரிந்திடு மெல்ல!

அரக்கன் போல்
நான் இருந்தாலும்...
உன் மீது கொண்ட இரக்கம்
வற்றாது ஒரு நாளும்!

தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா,
இலங்கை.



வாங்கிய கடனும், தேங்கிய பணமும் பெருகப் பெருக வாழ்வைக் கெடுக்கும் - வேதாத்திரி

## இனிய நந்தவனம் இலங்கை சிறப்பிதழுக்கு நல்வாழ்த்துக்கள்...

ஈழத்து
தமிழ் இலக்கிய உறவுகளே
உங்களோடு நாங்கள்
எங்களோடு நீங்கள்
என்னென்றும்
இனிய தமிழோடு
இணைந்திருப்போம்



அன்புடன்

**தலைநகர் க.கண்ணன், மலேசியா**

**K. Kannan**
"Anna Illam", No. 240-A, Jalan Pinggiran 2/7,
Pinggiran, Battu Caves, Selangor Darul Ehsa Malaysia

## இலங்கைச் சிறப்பிதழ் சிறக்க வாழ்த்துகிறோம்...




"கொழுந்து"
கலை இலககிய
இதழ்

**ஆசிரியர்**
**அந்தனி ஜீவா**




தொடர்புக்கு
கொழுந்து 57. மகிந்தபிளேஸ். பொழும்பு - 06. இலங்கை
0776612315
Kolumbu@gmail.com




அறிவை உணர்ச்சி வெல்வது இயல்பு. அறிவால் உணர்ச்சியை வெல்வது உயர்வு. - வேதாத்திரி

**நந்தவனம் சந்திரசேகரன்-**

உலகிலேயே ஒரு இனம் நாடற்ற சமூகமாக இருக்கிறது என்றால் அது தமிழினம் மட்டுமே, ஒரு நெடிய போராட்டத்திற்கு பின்னும் தனக்கென ஒரு தளத்தை அமைத்துக் கொள்ள முடியாத இனமாக இருப்பதும் தமிழினமே.

தனி ஈழப்போராட்டம் சென்ற வருடம் மே மாதத்துடன் முடிவுக்கு வந்துவிட்டது என்ற நிலைக்குப்பின் சரியாக ஆறுமாதம் கழித்து நான் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டேன். இந்தப் பயணம் மறக்கமுடியாத பயணமாகவும் எனக்கு அமைந்தது.

# இலங்கைப் பயணமும் சில பதிவுகளும்




"தினக்குரல்" அலுவலகத்தில் (இடமிருந்து வளமாக) தலைநகர் கண்ணன், கந்தசாமி, செல்லத்துரை, கவிஞர் மார்கிரேட் செல்லத்துரை, நந்தவனம் சந்திரசேகரன்.




வெறுங்கை என்பது மூடத்தனம். உன் விரல்கள் பத்தும் மூலதனம். - தாராபாரதி.

மலேசியக்கவிஞர் மார்க்ரெட் செல்லதுரை அவர்களின் நூல் வெளியீட்டு விழாவுக்காக இலங்கைச் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டது. இனிய நந்தவனம் இலங்கைக்கான பொறுப்பாளர் அந்தனி ஜீவா அவர்கள்தான் இந்த விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார். விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் மிகச் சிறப்பாக நடை பெற்றது. இந்த விழாவில் மலேசிய தமிழறிஞரும் நந்தவனம் பொறுப்பாளருமான தலைநகர் க. கண்ணன் அவர்களும், நந்தவனம் வாசகர் கந்தசாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த விழாவை முன்னிட்டு நந்தவனம் வாசகர்கள், மட்டுவில் ஞானகுமாரன், நிவாஸ், த். சிவசுப்பிரமணியம், கண்டியில் நித்தியானந்தன், இராமன் "நீங்களும் எழுதலாம்" இதழாசிரியர் தனபால சிங்கம், ஆகியோரை சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்ததோடு மேலும் பொன்னுதுரை, கலைஞர் கலைச் செல்வன், மனா மக்கி, போன்றவர்களின் தொடர்பும் கிடைத்தது.

இலங்கையைப் பொறுத்தவரையில் படைப்பாளிகளுக்கு நல்ல வரவேற்பும் மரியாதையும் இருக்கிறது என்பதை நான் அங்கு சென்றபோது உணர முடிந்தது. அதேபோல ஒரு படைப்பு என்பது தரமானதாக இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள் என்பதையும் அறிய முடிந்தது.

நண்பர் கலைச்செல்வன் அவர்கள் எங்களை அங்குள்ள 'தினக்குரல்' பத்திரிகை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றபோது அந்த பத்திரிகையின் ஆசிரியர் எங்களை வரவேற்ற விதத்தைப் பார்த்து நான் வியந்து போனேன் தமிழகத்தில் ஒரு பத்திரிகையின் பெயர் இன்னொரு பத்திரி



மட்டுவில் ஞானகுமாரனுடன்
நந்தவனம் சந்திரசேகரன்

கையில்ல் வந்து விடக் கூடாது எனப் போட்டியும் போறாமையுமான சூழல் இருக்கிறது அங்கே துளியும் இது இல்லை, நான் இன்னொரு பத்திரிக்கையின் ஆசிரியர் என்று பார்க்காமல், 'தினக்குரல்' ஞாயிறு பதிப்பு ஆசிரியர் பாரதி அவர்கள் என்னை நேர்காணல் செய்து முதல் பக்கத்திலேயே அதை வெளியிட்டு



த.சிவசுப்பிரமணியத்துடன்
நந்தவனம் சந்திரசேகரன்

என்னை கௌரவப் படுத்தியதை என்னால் இன்றளவும் மறக்க முடியாத நிகழ்வாகவே இருக்கிறது.

இதேபோல அங்குள்ள அரசுத் தொலைக்காட்சியான ரூபவாகினி தொலைக்காட்சி நிலையத்திற்கும் கலைச் செல்வன் அவர்கள் என்னையும் கவிஞர் மார்கரெட் செல்லதுரை அவர்களையும் அழைத்துப் போனார். அங்கே தமிழ் நாட்டில் இருந்தும் மலேசியாவில் இருந்தும் படைப்பாளர்கள் வந்திருக்கிறார்கள் என்று அறிமுகப்படுத்தியவுடன் நல்ல வரவேற்புக் கொடுத்ததோடு மார்கரெட் செல்லதுரை அவர்களின் நேர்காணலையும் நேரலையாக ஒளி பரப்பி சிறப்பித்தார்கள். பெரிய எழுத்தாளரா? சிறிய எழுத்தாளரா? என்கிற பாகுபாடு பார்க்காமல் நாங்கள் எழுத்தாளர்கள் என்ற அடிப்படை யில் அவர்கள் எங்களை கௌரவப் படுத்தியதை மிகப் பெருமையாகவே நினைக்கிறேன்.

இலங்கையில் அரசியல் நிலைபாட்டில் முரண்பாடுகள் இருந்த போதும் இலக்கிய அடிப்படையிலேயே எங்களுடைய பயணத்தை அமைத்துக் கொண்டோம் மூன்று நாட்கள் கொழும்பில் தங்கி இருந்து நிறைய நண்பர்களை சந்திக்க முடிந்தது எனது நெருங்கிய நண்பர்கள் அந்தனி ஜீவாவும் கலைச்செல்வனும் தான் எங்களுக்கு நல்ல வழி காட்டிகளாக இருந்தார்கள். இந்தப் பயணத்தை யொட்டி கண்டிக்கும் செல்லக்கூடிய வாய்ப்பும் கிடைத்தது.



தினக்குரல் இராமன், நித்தியானந்தன், நந்தவனம் சந்திர சேகரன்.

கண்டித் தமிழ்ச்சங்கம் சார்பில் மாக்கரெட் செல்லதுரையின் நூல் அறிமுகமும், நந்தவனம் அறிமுகமும் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில்



சிந்தனைதான் அறிவை வளர்க்கும்; அறிவுதான் மனித வாழ்வை உயர்த்தும். - கன்பூசியாஸ்

நானும் தலைநகர் க.கண்ணன் அவர்களும் கலந்து கொண்டோம். இந்த சந்திப்புக்கான ஏற்பாடுகளை நண்பர் நித்தியானந்தனும், "தினக்குரல்" இராமன் அவர்களும் ஏற்பாடு செய்திருந்தனர். இங்கு நடந்த கலந்துரையாடலில் நிறைய விடயங்களை விவாதிக்க முடிந்தது தமிழகம், மலேசியா இலக்கிய சூழல் பற்றியும் விவாதம் நடந்தது. ஒருநாள் பயணமாக கண்டி சென்றதால் நிகழ்ச்சியில் மட்டுமே கலந்து கொள்ள முடிந்தது. வேறு எங்கும் சுற்றிப் பார்க்க முடியவில்லையே என்ற கவலையுடன் திரும்ப வேண்டியதாகிவிட்டது.

மறு நாள் காலை நாங்கள் ஊருக்கு திரும்பவேண்டி இருந்ததால் இரவே கொழும்பு திரும்பி விட்டோம். நண்பர் நித்தியானந்தன் அவர்கள் இவ்வளவு தூரம் வந்து விட்டு வீட்டுக்கு வராமல் போகிறீர்களே என்று வருத்தத்துடன் எங்களை வழியனுப்பிவைத்தார் குறுகிய கால பயணம் என்பதால் யாழ்ப்பாணம், வவுனியா மட்டங்கிளப்பு, குறிப்பாக நான் பிறந்த இடமான வவுனியாவில் உள்ள கோவில் புதுக்குளம் இங்கெல்லாம் போக முடியாமல் திரும்பு கிறோமே என்ற வருத்தத்துடனேயே திரும்ப வேண்டியதாகி விட்டது.

மீண்டும் இலங்கை பயணத்திற்கான சூழல் அமையும் என்ற நம்பிக்கையை அசைபோட்டபடி இந்த இலங்கைச் சறிப்பிதழை என்னால் முடிந்த அளவில் சிறப்பாக தயாரித்திருக்கிறேன் என்ற நம்பிக்கையுடன் உங்கள் கருத்துக்களுக்காக காத்திருக்கிறேன். ●


தாரை சிட்ஸ் (பி) லிமிடெட், தாரை சிட்ஸ் & பைனான்ஸ்
சேலம்-4. (அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள்) சென்னை-17.

"தாரை புள்ளிக்காரர் இல்லம்"
பிருந்தாவனம் 7வது தெரு, வசந்தம் ஓட்டல் அருகில்,
பேர்லேண்ட்ஸ், சேலம் - 636 004.
✆ 0427-4042845, 4042846.

எண் 2, டாக்டர்சிங்கார வேலர் தெரு,
பாண்டி பஜார், தி.நகர், சென்னை - 17.
✆ 044-42126649, 24346649.

❖ வைப்புத் தொகை வாங்குவதில்லை. ❖ எல்லாருடைய வசதிக்கேற்ப தினசரி வசூல். ❖ 30 ஆண்டுகால நம்பிக்கையும், சேவையும்

ரூ.10,000 முதல் 1,00,000 வரை ஏலம் நடைபெறும்

மேலாண்மை இயக்குனர் பாவலர் Rtn. MPHF. P.P. தாரை கு. குமரவேலு, M.A., M.Phil.,
சேலம் நிர்வாகி — தாரை கு. இராஜகணபதி, B.E., M.B.A.,
சென்னை நிர்வாகி — தாரை கு. திருஞானசம்பந்தம், B.E., M.B.A.,
இயக்குனர் — தாரை கு. தமிழ்ச்செல்வம், B.E.,

தாரை மெடிக்கல் ஏஜென்சி (THARAI MEDICAL AGENCY)
(உலக தரம் வாய்ந்த மருந்து மொத்த விற்பனை நிறுவனம்)
எண் : 30, அத்வைத ஆஸ்ரமம் சாலை, புதிய பஸ் நிலையம் எதிர் சாலை, சேலம்-4.
எங்களிடம் சர்வதேச தரம் வாய்ந்த மருந்துகள் (MNC) கிடைக்கும்
தேவைக்கு தொலைபேசியில் ஆர்டர் தரவும் தொலைபேசி எண்கள் : 0427-4042847, 97900-19861, 97900-19862, 97900-19863.

விரைவில் தொடங்கப்பட உள்ளது.
தாரை டிராவல்ஸ் (A/C கோச் பஸ்)
& பார்சல் சர்வீஸ்
சுகமான பயணத்திற்கும். துரித சேவைக்கும்.
தினசரி இரவு
சேலம் to சென்னை
சென்னை to சேலம்



"தாரை திரு டவர்ஸ்" பழைய எண் 28, புதிய எண் : 36, எல்.ஐ.சி. காலனி,
வசந்தம் ஹோட்டல் வழி, சேலம்-636 004.




பணத்தின் உண்மையான மதிப்பு, பிறரிடம் கடன் கேட்கும் போதுதான் தெரியும்.

# நல்லெண்ணம் படைத்த நாடகப் புரட்சியாளர்

## பராக்கிரம நிரியெல்ல



இலங்கையின் நாடகத்துறை வரலாற்றிலே புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தவர் எமது சகோதர இனத்தவரான பராக்கிரம நிரியெல்ல என்றால் அது மிகையாகாது. இலங்கையின் மிகப் புகழ் பூத்த நாடகக் கலைஞர். மக்கள் களரி (ஜன ஹரலிய) என்ற அமைப்பினூடாக இலங்கையின் நாடகக் கலையின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாகச் செயற்பட்டு வருகின்றார். 1960களில் ஆரம்பிக்கப்பட்ட இரவது நாடகப் பயணம், நவீன மாற்றங்களையும் இணைத்துக் கொண்டு இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மக்கள் களரி அமைப்பின் ஸ்தாபகராகவும், அதன் பிரதம நிறைவேற்றுப் பணிப் பாளராகவும் கலைத்திறன் இயக்குநராகவும் இருக்கும் இவர் 'நாடகமும் அரங்கியலும்' என்னும் கற்கை நெறியை 1976இல் நிறைவு செய்திருந்தார். 'லயனல் வென்ற் ஆர்ட் கலரியில் பணியாற்றும் வேளையில்தான், மக்களை நோக்கி அரங்கைக் கொண்டுசெல்ல வேண்டுமென்ற எண்ணம் அவர் மனத்தில் உதயமாகிறது. அவருடைய எண்ணக் கருக்களை இங்கே தருகின்றோம்.

★ நீங்கள் ஒரு சிறந்த கலைஞர். அதேவேளை கலைகளின் ஊடாக மக்கள் மனங்களை வெல்லலாம் என்ற கொள்கையில் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றீர்கள். அதன் பயன்பாடு எவ்வகையில் அமைந்துள்ளது?

★ இனங்களுக்கிடையிலான ஒற்றுமை பற்றிய சிந்தனை அரசியல் வாதிகளின் வார்த்தைகளில் அதாவது சொல்லளவில் மாத்திரமே இருக்கின்றது. நாடகக் கலையின் ஊடாக சமூக ஒருமைப்பாட்டையும், இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நாங்கள் வளர்த்து வருகின்றோம். நேரடியாகச் சமாதானத்தை நாடகத்தினூடாக சொல்வது எமது பணியல்ல; ஆனால் எமது செயற்பாடுகள் மூலம் நாடகக் கலையை வளர்ப்பதுடன், இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும் வலுப்படுத்திவருகின்றோம்.

★ உங்கள் நாடகத்துறை ஆரம்பம் பற்றித் தெரிந்து கொள்ளலாமா?

★ 1960களில் ஆரம்பிக்கப்பட்ட எனது நாடகப்பயணம் நவீனத்துவமான மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு இன்றுவரை



பள்ளியில் போய் முட்டுவதால் படிப்பு வருவதில்லை.

தொடருகின்றது. மக்கள் களரி என்னும் அமைப்பின் ஊடாக நாடகங்களை அவ்வப்போது மேடையேற்றி வருகின்றோம். நான் லயனல் வென்ற் ஆர்ட் தியேட்டரில் கடமையாற்றும் போதுதான், மக்களை நோக்கி அரங்கை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் காரண மாகத் தெருக்கூத்துக்களில் கவனத்தைச் செலுத்தலானேன். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப் பட்டபோது பல தொலைக் காட்சி நாடகங்களை எனது இயக்கத்தில் உருவாக்கினேன்.

★ இலங்கையில் ஜன ஹரலிய (மக்கள் களரி) என்னும் அமைப் பை நிறுவி, நாடகக் கலைக்கான புதிய செல்நெறியை உருவாக்கி அதில் வீறுநடை போட்டுவரும் தாங்கள், மக்கள் களரியின் பணிகள் பற்றியும், அதனூடாக மக்கள் பெற்ற நன்மை குறித்தும் நீங்கள் கூறிவருவது என்ன?

★ மக்கள் களரி தனது செயற்பாடு களை இரண்டு முனைகளில் முன்னெடுத்துச் செல்கின்றது. முதலாவது நடமாடும் நாடக அரங்கம். இரண்டாவது பாரம் பரிய முறையில் நாடகத்தை மேடையேற்றி பார்வையாளர் களை மகிழ்விப்பது. அந்தவகை யில் அரங்கைத் தூக்கிக்கொண்டு, ஒரு நாடகக்குழு தூரப்பிர தேச நகரங்களுக்கும், கிராமங்களுக் கும் சென்று, அங்கு அசௌகரி யங்களுடன் வாழ்ந்து கொண்டி ருக்கும் மக்களுக்கு, நவீனங்கள் உட்சேர்க்கப்பட்ட, தரமான பாரம்பரிய நாடகங்களை மேடை யேற்றி அந்த மக்களை மகிழ்விப்பதுடன் நாடகக் கலை யையும் வளர்த்து வருகின்றோம். ரக்வண்டிகளில் ஏற்றிச் சென்று வேறு ஓர் இடத்தில் பூட்டக் கூடிய கூடாரங் களைப்போல் அரங்கு இருக்குமேயானால் கிராமிய மக்களை தரமான நாடகங்கள் சென்றடைய முடியு மென்ற எண்ணக் கரு என்னு டைய மனதில் உதயமாகியதைத் தொடர்ந்தே என் நண்பரும் சிறந்த சினிமா, நாடக, தொலைக் காட்சி நடிகருமாகிய எச்.ஏ. பெரேராவுடன் இணைந்து நடமாடும் அரங்குத் திட்டத்தை முன்னெடுத்துச் செயற்பட் டேன். இச் செயற்பாடானது மக்களைச் சென்றடையும் போது, அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட் டார்கள்.

★ தங்கள் நடமாடும் அரங்கப் பயணம் எவ்வாறான முறையில் செயலூக்கம் பெற்றிருந்தன? அதன் பலாபலன்கள் எவ்வகை யில் அமைந்திருந்தன?

★ நடமாடும் அரங்கப் பயணம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு மாதம் வரையில் தங்கியிருந்து செயற்படும். தரத்தில் உணர்ந்த நாடகப் படைப்புகளை ரசிப்ப தற்குச் சந்தற்பம் கிடைக்காத மக்களுக்காக, நவீன உத்திகள், நவீன தொழில் நுட்ப ஒளி, ஒலி நுணுக்கங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி நாடகங்களை அரங்கேற்றி அப்பகுதி மக்களை



போர்க்கலத்தில் வாளை இரவல் வாங்க முடியாது.கோபத்தோடு எழுகிறவன் நட்டத்தோடு உட்காருவான். - பெரியார்கொஞ்சம் கொடுங்கள்; நெஞ்சங்கள் வாழ்த்தும்,

மகிழ்விப்போம். மாணவர்களுக்காகப் பாடசாலை பாட விதானத் திற்குள் அடங்கக் கூடியவாறு நாடக அரங்கங் கலைச் செயலமர்வுகளை, இரசனை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, நாடகங்களையும் மேடையேற்றுவதன் மூலமாக மாணவர்களின் தன்னம்பிக்கையையும், ஆளுமை விருத்தியையும், கூட்டுச் செயற்பாட்டு அனுபவங்களையும் மேம்படுததக் கூடியதாகவும் இருந்தது.

★ நீங்கள் உங்கள் மக்கள் களரி உருவாக்கிய நாடகங்களை மட்டும்தானா மேடை ஏற்றுவீர்கள்; அல்லது பிரதேசத்திற்குப் பிரதேசம் காணப்படும் நாடகமரபுகளையும் சேர்த்துக் கொள்வீர்களா?

★ பிரதேசவாசிகளினால் உருவாக்கப்பட்டுள்ள நாடகங்களை நடமாடும் அரங்கில் மேடை ஏற்றுவதற்கும், புதிய நாடகங்களைத் தயாரிப்பதற்கும் பிரதேச நாடகக் கலைஞர்களுக்கு சந்தற்பம் வழங்கப் படும். முக்கியமாகப் பிரதேச மரபு பேணும் கிராமிய நாடகக் கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுப்போம். மேலும் நாடக அரங்கக்கலைமீது ஆர்வம் கொண்ட பிரதேச இளைஞர் யுவதிகளின் சிருஷ்டித்திறன் உட்பட மற்றும் தறிமைகளை இனங்கண்டு அவற்றை மேம் படுத்தும் செயலமர்வுகளையும் நிகழ்த்திவருகின்றோம். இவற்றில் வடக்கு, கிழக்கு மாகாணங் களைச் சேர்ந்த சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்களை எனது மக்கள் களரிக்குள் உள் வாங்கிக்கொள்ள ஆர்வமாக இருக்கின்றேன்.

★ தேசிய இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பேணும் வகையில் தங்கள் செயற்பாடுகள் அமைந்திருப்பதாக அறிகிறோம். அவை பற்ற சற்று விளக்குவீர்களா?

★ மக்கள் களரியின் அனைத்துத் தொழிற்பாடுகளின் போதும் சிங்கள, தமிழ் அனைத்து இனங் களுக்கும் சமமான சந்தற்பமும் மதிப்பும் வழங்கப்படுகிறது. யுத்தம் காரணமாகப் பிரிந்து வாழும் சகோதர இன மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்து வதற்கு நாங்கள் விசேட கலா சாரப் பணிகளைச் செய்து வருகிறோம். முக்கியமாக மக்கள் களரியினால் தயாரிக்கப்படும் சிங்கள நாடகங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டு சகல மக்கள் பிரிவினரும் ரசிக்கக் கூடியவாறு மேடை யேற்று கின்றோம். இதன்போது சிங்கள நாடகத்தில் தமிழ்க் கலைஞர் களுக்கும் தமிழ் நாகடத்தில் சிங்களக் கலைஞர்களுக்கும் சந்தற்பம் வழங்குவதை முக்கிய மான அடிப்படையாகக் கொண்டுள்ளோம். இங்கே தமிழ்க் கலைஞர்களின் திறமை மற்றும் அரங்காற்றுகைகளை சிங்கள



எதுவும் தெரியாதவனுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

ரசிகர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இதேபோல் தமிழ் நாடகத்தில் சிங்களக் கலைஞர்களின் திறமை, அரங்காற்றுகைகளை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இனப் புரிந்துணர்வுக்கு அடிப்படையில் இது முக்கியமான விடயம். இந்த அடிப்படையில்தான் நாங்கள் எங்கள் நாடகக் கலையினூடாக சமூக ஒருமைப் பாட்டையும், இனங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் வளர்க்க முயற்சிக்கின்றோம்.

★ உங்கள் மக்கள் களரியினால் பல நாடகங்கள் மேடையேற்றப் பட்டுள்ளன. எமது சுவைஞர் களும்அவற்றைத் தெரிந்து கொள்வதற்காக அத்தகவல் களைத்தந்துதவ முடியுமா?

★ மக்கள் களரி பின்வரும் நாடகங் களை மேடையேற்றி வருகின் றது. 'சரன்டாஸ்', 'மகர ராஜ்ய' (தமிழில் - மகர ராஜ்யம்), 'செக்குவ' (தமிழில் -செக்கு); சீத்தாம்பரப்பட்டய' (தமிழில் - மாயப்பட்டாடை), 'சந்தரமல்' (தமிழில் - எருக்கலம் பூ), 'சொருப்பவில' (தமிழில் - திருடன் வந்தான்), 'தெவுலு கமன' (தமிழில் - தேவலோக பயணம்) ஆகிய நாடகங்கள் உட்பட பதினைந்திற்கும் மேற்பட்ட குறுநாடகங்களையும் மக்கள் களரி, தனது நிரந்தரக் கலைஞர்களைக் கொண்டு மேடையேற்றி வருகின்றது. ஜன கரலிய நாடக அமைப்பில் பதினேழு நிரந்தர நடிகர், நடிகைகள்

## "ஈழத்தமிழினமே எழு"

ஈழத்தமிழினமே
ஈழத்தமிழினமே எழு
முட்டும் வானம் உடையட்டும்
முகிலும் பகையும் விலகட்டும்
கட்டும் கடலும் கடந்து நீ
காதையொன்று பாடவேண்டும்.
கொட்டும் முரசொலி
கொட்டட்டும்
உன் வேட்கை விடியலாகட்டும்
தட்டும் கைகள் எல்லாமே -
நாளை
நம் தமிழன் ஓசை எழுப்பட்டும்.

உன் அன்பு மட்டும் ஆள
வேண்டும்
நீ பண்பை மட்டும்
பாடவேண்டும்
பாடறிந்தும் ஒழுக வேண்டும்
பல்லாண்டும் இங்கே
வாழவேண்டும்
உலகம்
உன்னதும்ஆகவேண்டும்
அது உன்னால் உன்னதமும்
ஆகவேண்டும்
வையத்தில் வாழ்வாங்கு
வாழ்வதற்காய்
ஈழத்தமிழினமே
"ஈழத்தமிழினமே எழு."

**தில்லை நாதன் பவித்ரன்**
**திருகோணமலை.**



உங்களுடைய அனுமதி இல்லாமல் உங்களை யாரும் தாழ்வாக நடத்த முடியாது.

# சுதந்திர தேசமொன்றில்...

கொட்டாவி விடக்கூட
வாயைத்திறக்க
பயமாகவிருக்கும் ஓர்
கணப்பொழுதில்...
என் உயிர் தொண்டைக்
குழிக்குள் சிக்கித்
திணறிக் கொண்டிருக்கிறது.
ஒரே ஒரு முடக்கு தண்ணீர்
கிடைத்தாலும் போதுமெனக்கு,
ஊசலாடிக்கொண்டிருக்கும்
என் உயிரை உடலில்
தக்க வைத்துக் கொள்ள!
ஆனாலும் எப்போதும்
மரணத்தோடு
போராடிக் கொண்டிருக்கும்
என்னால், பக்கத்திலிருக்கும்
நண்பனோடு கூட
வாய் திறந்து பேச முடிவதில்லை
நானும் தமிழனென்பதால்!
இப்போது...
உயிர்வாழும் உரிமையும்கூட
எனக்கில்லாமல் போய்விட்டது
எனவேதான் இதோ...
எதுவும் பேசாமலேயே
மெல்ல மெல்ல... மெல்ல

திருகோணமலை அன்பு நிலா.
செல்: 0779328450

இருக்கின்றார்கள். மேடையேற்றப்படும் நாடகங்கள் அரங்குகளிலும் நடமாடும் அரங்குகளிலும் கண்டுகளிக்கச்செய்கின்றோம்.

★ *மக்கள் களரி மூலம் பெற்ற அனுபவங்கள் பற்றியும் அதன் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றியும் உங்கள் அபிலாசைகள் பற்றியும் நாம் தெரிந்து கொள்ளலாமா?*

★ இலங்கை நாடகத்துறை எனும் போது எம்மக்களில் பெரும் பாலானோர் சிங்கள நாடகங்களையே சிந்திக்கிறார்கள். அவர்களுக்குத் தமிழ் நாடகங்களைப் பற்றி அறிமுகப்படுத்தப் படவில்லை. 1976இல் எனது முதல் நாடகம் தேசிய நாடக விழாவில் பங்கு பற்றியபோது எட்டுக்கும் மேற்பட்ட தமிழ் நாடகங்கள் மேடையேறியிருந்தன. இப்பொழுது அந்தநிலை இல்லை. 1983ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கை நாடகத்துறையின் பயணம் இருவேறு வழிகளில் பயணிக்க ஆரம்பித்தது. கலைஞர்களில் தமிழர்கள் தமிழ்ச் சமூகத்திற்கான நாடகங்களை மேடையேற்றிய அதே வேளை சிங்களக் கலைஞர்கள் சிங்கள சமூகத்திற்கு மாத்திரம் நாடகங்களை மேடையேற்றினர். இதனால் இனங்களுக்கிடையே பாரிய இடைவெளி ஏற்பட ஆரம்பித்தது. எனவே தான் நாடகக் கலையினூடாக இரு இனங்களுக்கிடையில் ஏற்பட்ட இடைவெளியைக் குறைத்து சகல இன மக்கள் மத்தியிலும் ஒற்றுமையை ஏற்




பெரிய சிக்கல்களுக்கு எளிய வழிகள் இருக்கும்.

படுத்த முயற்சிக்கின்றேன். மீண்டும் தமிழ் சிங்களக் கலைஞர்கள் இணைந்து பணியாற்றும் காலம் விரைவில் உதயமாகும் என நம்புகின்றேன். வடக்கு கிழக்கில் இருபதுக்கும் மேற்பட்ட மக்கள் களரி கலைஞர்களை உருவாக்கும் எண்ணத்துடன் இருக்கிறோம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்கலுக்குச் சென்று முகாமிட்டு நடமாடும் மக்கள் களரி செயற்பாடுகளை மேற்கொள்ள உள்ளோம், இந்தப் பிரதேசத்துக்குரிய தனித்துவம்மிக்க நாடகங்களை சிங்கள மொழியில் மொழி மாற்றம் செய்ய உள்ளோம். மக்கள் களரியின் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழுவில் நடராஜ சிவம், கமலினி செல்வராஜன், நிஹால் ரூபசிங்க, உடல பண்டார, எச்.எ. பெரேரா ஆகியோர் அங்கும் வகிக்கின்றனர். மேலும் நான்கு பேர் கொண்ட இயக்குநர் குழுவும் சிறப்புடன் செயலாற்றுகின்றது. சமூக ஈடேற்றத்திற்கு நாடகக் கலையைப் பல்வேறு வடிவங்களில் பயன்படுத்த முடியும். கல்விக்கும் தனிநபர் முன்னேற்றத்திற்கும் இக்கலையைப் பயன்படுத்தக் கூடிய புதிய வழிமுறைகளை நாங்கள் பயன்படுத்தி வருகின்றோம்.

சந்தித்தவர் - பி.ஜோ. க.கேசரி.

ஆக்கம் - தசி.




மதுரையில் நடந்த இலக்கிய விழாவில் சிறப்புரை ஆற்றிய வித்தகக் கவிஞர் பா. விஜய்க்கு கவிஞர் இரா.இரவி பொன்னாடை பொர்த்தி சிறப்பிக்கிறார்.



உன்னை ஒருவர் வணங்கும்போது, அவரைவிட ஒரு மடங்கு பணிவாக வணங்கு. -குர்ஆன்

த. சிவசுப்பிரமணியம்

# பாரதிக்குப்பின் இலங்கையின் கவிதை வளர்ச்சி:

மக்கள் இலக்கியக் கோட்பாடு ஊற்றெடுக்க முனைந்த காலகட்டத்தில், தீவிர சமூக சிந்தனைகளை அவதானத்தோடும் அர்த்தத்தோடும் கவிதைக்குள் உள்ளடக்கிய இருபதாம் நூற்றாண்டின் முதற்கவி மகாகவி சுப்பிரமணிய பாரதி என்று பலரும் இயம்பியுள்ளனர். தமிழகத்தின் இலக்கியப் போக்குகளில் நிகழும் மாற்றங்கள் உடனுக்குடன் உணரப்பட்டு வந்துள்ளமையை இலங்கையிலும் காணமுடிந்துள்ளது.

பாவலர் துரையப்பாப்பிள்ளை பாரதியார் காலத்தில் சமாந்தரமாக இலங்கையின் கவிதைத்துறைக்கு தமது பங்களிப்பை வழங்கியுள்ளார். சமூக சீர்திருத்தம், மதுவிலக்கு, பெண்கள் கல்வி ஆகிய முற்போக்கான கருத்துக்களை முன்நிறுத்தித் தமது கவிதைகளை யாத்துள்ளார். பாவலர் துரையப்பாப்பிப்ளையோடு திருப்பமடையும் இலங்கைக் கவிதைத்துறை ஐம்பதினை அண்மிக்கும் போது செழுமை பெற்றது. கவிதைத் துறையில் ஆளுமை மிக்கவர்களான சுவாமி விபுலாநந்தர், சோம சுந்தரப் புலவர், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, சுாவமி விபுலாநந்தரின் மாணாக்கரான புலவர்மணி அ.மு. ஷரிபுத்தீன், பேராசிரியர் கணபதிப் பிள்ளை, பண்டிதர் சச்சிதானந்தன், முத்தமிழ்ப் புலவர் நல்லதம்பி ஆகியோர் மதிக்கப்பட்டனர்.

1930இல் தொடங்கப்பட்ட 'ஈழ கேசரி', 1946இல் கொழும்பிலிருந்து வெளிவந்த 'பாரதி', யாழ்ப்பாணத்திலிருந்து உருவாகிய 'மறுமலர்ச்சி' என்பன இலங்கையின் நவீன இலக்கிய வளர்ச்சிப் போக்கில் முக்கியமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. ஈழ கேசரி பல எழுத்தாளர்களை, கவிஞர்களை உருவாக்கி நின்றது.


"பாரதி" அணுசக்தி யுகத்தின் சிருஷ்டி. விஞ்ஞானமுடிவுகளின் புரட்சி ஏற்படுத்திய அணுசக்திபோல, தமிழ் மொழிக்குப் புதுமைப் போக்களித்த மகாகவி பாரதியாரின் பெயர் தாங்கி வருகின்றது. அவர் தமிழுக்குப் புது வழி காட்டியது போலவே 'பாரதி'யும் இன்றைய தமிழிலக்கியப் போக்குக்குப் புதுவழி காட்டும். தமிழைச் சிறை மீட்ட பாரதியார் செய்த சேவையே 'பாரதி'யின் இலட்சியமுமாகும். ஏகாதிபத்தியத்தை அழிக்க கவிபாடிய பாரதியார்... பொதுவுடைமையான ஒப்பில்லாத சமுதாயத்தை ஆக்கவும் கவி பாடினார்" என்று 'பாரதி' சஞ்சிகையின் ஆசிரியருரையில் தெரிவிக்கப்பட்டது.

'பாரதி' இதழ் இலட்சியப் போக்குடனான இலக்கியத் தளத்தில் நின்று கவிதைத்துறைக்குப் பணியாற்றியுள்ளது. அ.நா கந்தசாமி, கவீந்திரன் என்ற புனைபெயரில் கவிதைகளைப் 'பாரதி'யில் தந்துள்ளார். அதில் தோட்டத் தொழிலாளர்களின் துன்ப துயரங்களை எடுத்துக் காட்டும் 'தேயிலைத் தோட்டத்திலே' என்னும் கவிதை குறிப்பிடத்தக்கது.



வரவுக்கு மேல் செலவு செய்பவன் விபச்சாரிக்குச் சமமானவன். -தந்தை பெரியார்

‘எங்கள் இலங்கை’ என்ற தலைப்பில் ‘கலா தேவன்’ என்னும் புனை பெயரில் கே.கணேஷ் கவிதை வரைந்துள்ளார். மேலும் மொழிபெயர்ப்புக் கவிதைகளும் ‘பாரதி’யை அலங் கரித்து நின்றன. ‘பண்டிதர்’ என்ற புனை பெயரில் மஹாகவி ‘மாரி’ என்னும் கவிதையை எழுதியுள்ளார். பேச்சுத் தன்மையைத் தனித்துவமான அச்சமாக ‘மாரி’ கொண்டிருந்தது.



கவிதைத்துறையின் வளர்ச்சிக்கு முன்மாதிரியான பங்களிப்பினை அ.ந. கந்தசாமி, கே.கணேஷ், மஹாகவி ஆகியோர் ‘பாரதி’ சஞ்சிகையின் ஊடாக வழங்கியுள்ளனர். மேலும் கே. ராமநாதன் எழுதிய ‘கவிதையின் வரு காலம்’ பற்றிய கட்டுரையும் தேடலுக்கு ஊக்கங் கொடுத்தன. இவ்வாறு நோக்கும்போது, ‘பாரதி’ பரந்த அறிவையும் சர்வதேச விவகாரங்களில் நாட்டத்தையும் பெறச் செய்யும் நோக்குடன் செயலாற்றியது. இந்தியா வின்’மணிக் கொடி’ யோடு தோன்றிய இலங்கையின் ‘மறுமலர்ச்சி’, பழைய செய்யுள் மரபில் நவீன கவிதைக்குரிய இயல்புகளை உருவம், நடை, உள்ளடக்கம் எனக்கொள்கின்றது. மறுமலர்ச்சி ஊடாக வரதர், சோதி, விஜயன், தங்கம் முதலான ஈழத்துப் புதுக் கவிதை மரபினர் நாற்பதுகளின் நடுவில் அரங்கேறுகின்றனர்.

“என்னுடைய கருத்துப்படி எல்லாச் சிறந்த எழுத்தாளர்களுக்குள்ளும் ஒரு கவிஞன் இருக்கின்றான். நல்ல எழுத்தாளர்களின் எழுத்து நடையிலும் கருத்திலும் ஒரு கவிதை நயம் இருக்கும். அப்படி இல்லாதவை இலக்கியம் ஆகா என்று நினைக்கிறேன். ‘கவிதை என்பது எதுகை, மோனை, சீர், தளை எல்லாம் சரியாக அமைந்து ஓசை நயத்தை எழுப்ப வேண்டும்; ஓசை நயம் இல்லாமல் கவிதை இல்லை’ என்று தான் நானும் - இன்னும் பலரைப் போல முன்பு நினைத்துக் கொண்டிருந்தேன். இந்த நிலையில் ‘கவிதை’ என்றால் என்ன?’ என்று நான் சிந்தித்தபோது ‘கவிதை நயம்’ என்று ஒரு பண்டம் இருப்பதை நான் உணர்ந்தேன். ஒரு கவிதையை எந்த உருவத்தில் படைத்த போதிலும் அதில் ‘கவிதை நயம்’ என்ற பண்டம் இல்லாமல் போகுமானால் அது கவிதை ஆகாது” என்று ‘மறுமலர்ச்சி’ ஆசிரியர் வரதர் கூறியுள்ளார்.

“இந்தக் கவிதை நயத்தை ரசிக்கிற இயல்பு என்னுடைய சிறுவயதி



கோபம் அன்பை அழிக்கிறது. செருக்கு அடக்கத்தை அழிக்கிறது. - மகாவீரர்.

லேயே - நான் எழுத ஆரம்பித்த காலத்திலேயே எனக்குண்டு. என்னுடைய முதல் கவிதை ஈழகேசரியில் வெளிவந்தது. அந்தக் காலத்தில் புதுமை இலக்கியம் படைக்க முனைந்த இளைஞர்களுக்கு 'ஈழகேசரி' தான் ஒரு நல்ல களமாக அமைந்திருந்தது. சோ. சிவ பாதசுந்தரம் அப்பொழுது ஈழகேசரியின் ஆசிரியராக இருந்து புதுக்கவிதைகளைப் பிரசுரித்து வந்தார்" என்று வரதர் குறிப்பிடுகின்றார்.

ஈழகேசரியில் தொடங்கி மறுமலர்ச்சியில் முகிழ்ந்து பல கவிதைகளைப் படைத்த வரதர் வீரகேசரியிலும் கவிதைகளை எழுதியுள்ளார். மஹாகவி, சில்லையூர் செல்வராசன், நாவற்குழியூர் நடராசன், புதுவை இரத்தினதுரை ஆகிய கவிஞர்களை இனிய நண்பர்களாகவும் வரதர் கொண்டிருந்தார்.

இலங்கை விடுதலை பெற்றபிறகு வந்த கவிஞர்களுள் முக்கியமானவராக பண்டிதர் சச்சிதானந்தன் முன்நிற்கின்றார். நாற்பதுகளிலேயே இலங்கைத் தமிழ்க் கவிதை இலக்கியம் முக்கிய பரிமாணங்களை எட்டியதாக இருக்கின்றது. ஆனால் 1956இல் ஏற்பட்ட தேசியம் தொடர்பான எழுச்சி இலக்கியத்தில், கணிசமான அளவு தமிழ் இலக்கியத்திலும் பிரதிபலிக்கின்றது.

இந்தத் தேசியம் தொடர்பான சிந்தனையை இயக்க ரீதியில் எழுத்துத் துறைக்குள் பொருள் பொதிந்த முறையில் வெளிப்படுத்தியது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம். சங்கத்தின் செயற்பாடுகள் கவிதைத் துறையிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே இலங்கைத் தமிழ்க் கவிதை இலக்கியத்தின் விழிப்புணர்ச்சிக் காலமாக இதனைக் கொள்ளலாம். பாரதிக்கப்பி னதமிழ்க் கவிதைக்கு புது அர்த்தம் கொடுத்த பெருமையை இதற்குப் பின்னரே இலங்கை பெற்றுக் கொள்கின்றது. சமகால அன்றாட வாழ்வினை ஆதார சுருதியாகக் கொண்டு, சமுதாய வாழ்வின் சகல முனைகளையும் முனைப்பு களையும் கலாபூர்வமாகப் பதிவாக்குகின்ற கவிதைகள் இலங்கைக் கவிதை வரலாற்றின் புதிய அத்தியாயத்தை உருவாக்கியுள்ளன.

சமூகப் பொருளாதார அடிமைத்தனங்களால் கட்டுப்பட்டிருக்கின்றமை குறித்தும் சாதியம், தீண்டாமை, போலி ஆசாரம் என்பவற்றைச்சாடி கவிதைகள் பேசத் தொடங்கின. உள்ளடக்கச் செறிவில் ஏற்பட்ட மாற்றங்களோடு பேச்சோசை கொண்ட வசனத்தின் உச்ச நிலையே செய்யுள் என்பதைப் புரிந்து கொண்டு, வடிவம் தொடர்பான அழுத்தம் கொடுக்க முற்பட்டனர். இத்தகைய காலகட்டத்தில் முகிழ்ந்த கவிஞர்களை நவீன தமிழ்க் கவிதைகளின் முன்னோடிகள் என அழைக்கலாயினர்.

**"இன்னல் உழைப்பு - ஏழ்மை உயர்வு என்பவற்றைப் பாருங்கள்"**

என்று அறைகூவல் விடுக்கிறார் மஹாகவி. இன்றைய ஈழத்துக் கவிதைக்கு அம்சப்பங்களிப்புகளை மஹாகவி வழங்கியுள்ளார். மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகிய மூன்று கவிஞர்களும் நவீன கவிதை வரலாற்றில் பேசப்பட்டவர்களாவர். தமது சமகால வாழ்வில் ஏற்பட்ட



ஓர் ஆண்டு குடிப்பதும், ஓர் ஆண்டு முழுவதும் சிந்திப்பதும் ஒன்றே - சார்லசு கார்டன்

அகப்புறத்தாக்குதல்கள் சமுதாயத்தைப் பலவாறாகப் பாதிக்கும் விதத்தை புதிய பார்வையில் சிந்திக்கும் வகையில் முருகையனுடைய கவிதைகள் காட்டி நின்றன. கிராமிய வரையறுக்குள் மக்களின் சிந்தனைக் கோலங்களைத் தரும் நீலாவணனின் பாவரவங்களும் மிகவும் முக்கியம் பெற்றவையாக அமைந்தன.

இவர்களைத் தவிர தான் தோன்றிக் கவிராயரான சில்லையூர் செல்வராசன், வேந்தனார், நுஃமான், ஈழவாணன், காசி ஆனந்தன், புரட்சிக்கமால், அன்ன ஏ. இக்பால், இ. சிவானந்தன், பசுபதி ஆகியோர் கவிதைத் துறைக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளனர். கவியரங்குக் கவிதைகளில் முனைப்புடன் செயற்பட்டவர் சில்லையூர் செல்வராசனாவார்.

இலங்கைத் தமிழ் மக்களிடையே, தமிழகத் திராவிட இயக்கச் செல்வாக்குத் தாக்கத்தை ஏற்படுத்திய காலத்திலே பிறிதொரு கவிஞர் கூட்டம் உருவாகத் தொடங்கியது. இலங்கையில் முனைப்புற்றிருந்த தமிழர் உணர்வு வலுவடைந்து பிரச்சாரத்தன்மை கொண்ட கவிதைகள் உருவாக்கம் பெறலாயின. காசி ஆனந்தன், கரவைக் கிழார், பரமஹம்சதாசன் ஆகியோர் தமிழ் உணர்வு ஊட்டத்தக்க உணர்ச்சிமயமான ஓசைப் பாங்கான கவிதைகளை ஏட்டிலும் அரங்கிலும் மக்கள் முன் வைத்தனர்.

ச.வே. சஞ்சாட்சரம், கரவை செ. சுந்தரம்பிள்ளை, ந. பார்வதிநாத சிவம், ஆகியோர் காவியங்கள் படைத்துப் பரிசுபெற்ற கவிஞர்களாவர். உபநிட

# பூமியிலே...

இறைவனும் மனிதனும்
கதைப்பது பூமியிலே...
போரும் சமாதானமும்
கரைவது பூமியிலே

பழமையும் புலமையும்
புகர்வது பூமியிலே...
இளமையும் முதுமையும்
இனிப்பது பூமியிலே...

மரங்களும் மழையும்
களிப்பது பூமியிலே
வரங்களும் வசந்தமும்
வார்வது பூமியிலே

காதலும் காமமும்
முயங்குவது பூமியிலே
சாதலும் சரிதமும்
தயங்குவது பூமியிலே

பூட்டனும் பூட்டியும்
ஆடியது பூமியிலே
பாட்டனும் பாட்டியும்
பாடியஃது பூமியிலே.

நீயும் நானும்
வாழ்வது பூமியிலே
தீயும் நீரும்
தீண்டுவது பூமியிலே

மக்கள் ஆட்சி
நடப்பது பூமியிலே
மாக்கள், ஆட்சி
நடப்பதும் பூமியிலே

புவேந்தி - திலீப்காந்த் - லிபியா.

இலங்கை



இது உன் மனத்தில் இருக்கட்டும். மனிதன் பயனின்றி அழியக்கூடாது - காரல் மார்க்ஸ்.

தக் கதைகள் உள்ளிட்ட நெடும்பாக் களையும் பக்திப் பனுவல்களையும் பாடிய சொக்கன், புதிய புதிய பிரயோகங்கள் செய்வதில் வல்லவ ரான பண்டிதர் க.வீரகத்தியும் ஈழத் தின் கவிதை வளர்ச்சிக்குத் தம்மா லான பங்களிப்ப வழங்கியுள்ளனர்.

இசைப்பாடல்கள், தமிர்க் கீர்த்தனைகள், பக்திப் பாடல்கள் என்று யாத்துப் பெருமை பெற்றவர் இயலிசை வாரிதி இணுவில் ந.வீர மணி ஐயர். நல்லூரரான் வெண்பா தந்த வித்துவான் சி. ஆறுமுகம்.

கௌரியம்மை பிள்ளைத்தமிழ் பாடிய சதா சிவம்பிள்ளை, அற்புத மான சில கவிதைகளைக் காணிக்கை செய்ததார். இராமலிங்கம், மட்டு நகர் திமிலைத் துமிலன் சோ. பத்மநாதன், ஜின்னா ஷரிபுத்தீன் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள்.

வளர்ந்தோர் கவிதைகயிலும் வல்லவர்களான 'அம்பி' என்ற அம்பிகைபாகன் பா. சத்தியசீலன் ஆகியோர் சிறுவர்களுக்கென நிறை யப்பாடியுள்ளார்கள். கிராமியமான சொற்பிரயோகங்களை கவிதைக்குச் சிறப்பெனக்கொண்டு, தமிழ்மக்கள் படும் இன்னல்களை குறியீடாகச் சொல்லும் ஆற்றல் கவ்வயல் வே.குமார சாமியின் கவிதைகளுக்கு உண்டு. தமிழர் பிரச்சனையை வெளிப் படையாகவே வேகம் மிக்க கவிதை களைப் படைத்த புதுவை இரத்தின துரை, சேரன், வில்வரத்தினம், ஆகி யோருடன் சோலைக்கிளி, ஜெய பாலன், சு.முரளிதரன், வாசுதேவன் ஆகியோரும் குறிப்பிடத்தக்க பங்க ளிப்பை வழங்கியுள்ளனர்.

பொருளாதாரப் பின்னணி காரணமாக சுரண்டப்பட்ட வித்தி யாசமான வாழ்வியலைக் காட்டும் மலையகத் தமிழரிடமும் தோன்றி யிருந்த கவிதைப் பாரம் பரியம் எழுச்சி பெற்றிருப்பதையும் காணமுடிகிறது. எஸ்.எஸ். நாதன், பெரியசாமி பெரியம்பிள்ளை, கோவிந்தசாமி தேவர் முதலானோர் தோட்டத் தொழிலாளர்களின் வேதனையுடனான பல்வேறுபட்ட பிரச்சனைகளையும் தொட்டு ஆக்ரோசமான கவிதைகளைப் படைத்துள்ளனர். வேலுப்பிள்ளை, குறிஞ்சித் தென்னவன், சக்தி பாலையா குமரன், தமிழோவியன், சீ.எஸ். காந்தி ஈழக்குமார், வழுத்தூர் ஒளியேற்றி, உடுதெனிய ஒளியேந்தி எனப் பலர் மலையகத்துக்கான கவிதை இலக்கியத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

அறுபதுகளின் பிற்பகுதியில் மஹாகவி, முருகையன் கவிப்பணி வழியில் மற்றுமோர் தலைமுறை யினர் தோன்றி கவிதை இலக்கியத் திற்கு மெருகூட்டினர். எம்.ஏ.நுஃ மான், சண்முகம் சிவலிங்கம், மு.பொன்னம்பலம், சுபத்திரன், சி.சிவசேகரம், மௌனகுரு, சடாட் சரன், ஜீவா ஜீவரட்ணம், கருணை யோகன், எம்.எச்.எம். கமல், தாமரைத் தீவான், மருதூர்க்கனி, அன்பு முகைதீன், சாருமதி, ஆகசி கந்தசாமி, ஷெல்லிதாசன், அ.யேசுராசா என ஒரு பரந்த கவிஞர் வட்டத்தினைக் காணமுடிந்துள்ளது.

மேற்கூறியவர்களின் கவிதை ஆளுமைகள் தனித்தனியாக நோக்கப் பட வேண்டியன. இருந்தபோதிலும் ஒட்டுமொத்தமாக அவர்களின் நிலைப்பாடுகளை நோக்குவோமா



ஆர்வமில்லாத இடத்தில் மாபெரும் புதுமைகள் பிறப்பதில்லை. - ராக்மேன்.

யின் சாதியம், சீதனம், பெண்நிலை, கல்வி, இளைஞர்கலை, வர்க்க முரண்பாடு, சுரண்டல் முதலான பல்வேறு கோணங்களில் முகிழ்ந் தெழும் கவிதை வார்ப்பில் பிரதேச சொல்லாட்சிகளும் பாட்டு அம்சங் களும் இயல்பாக அமைந்துள்ளது. மேலும் சமூகப் பலவீனங்களை எள்ளல் சுவையோடு கிண்டல் செய்தலும் அவதானிக்க முடிகின்றது.

எழுபதுகளில் அன்பு ஜவகர்சா, தில்லையடிச் செல்வன், கலைவாதி கலீல், மேமன்கவி, திக்வல்லை கமால், செந்தீரன், நல்லை அமிழ்தன் ஆகிய கவிஞர்கள் வெளிவருகின்றார்கள்.

புதுக்கவிதைகளின் வரவு ஆதிக்கம் பெற்றதும் பல கவிஞர்கள் தினமும் தோன்றிக் கொண்டிருக் கின்றார்கள். இவர்களுக்கு இலங்கைச் சஞ்சிகைகளும், தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளும் மட்டுமன்றி இலங்கை யில் வெளிவந்து கொண்டிருக்கின்ற பத்திரிகைகளும் காத்திரமான பங்க ளிப்பை வழங்கிவருகின்றன. இத் தகைய நிலையில் இலங்கையின் கவிதை வளர்ச்சி ஆரோக்கியமுடை யதாகவே அமைந்துள்ளது. ●

# கவிதை முழக்கம்

**நல்லை அமிழ்தன் யாழ்ப்பாணம்**

சூரியனை நோக்கிட
நான்
வளர்ந்தேன்.

என்னை வீழ்த்திட
என் சுற்றம்
நெருப்பு மூட்டினர்

மூட்டிய தீயினில்
என்னை
என் சுற்றம்
தூக்கி எறிந்தனர்.

எரிந்த நெருப்பு
என்னை எரிக்கவில்லை
மாறாக
என்னை
தோழில் தூக்கி
கவிதை முழங்கியது.

குடிசைக் கிளியாகிப்
பறந்த நான்
இன்று

கோபுரத்தின் ஒளியாகி
பறக்கின்றேன்
பத்து வயதில்

மூளையில் பதித்த
உண்மைகளை
அறுபத்தைந்து வயதில்
கனனியாக்குகின்றேன்.

முத்துக்கள் குளிக்க
ஆழியில்
இறங்கினேன்
இன்று
முகவரி எழுதிடும்
முகத்துடன்
நிமிர்கின்றேன்.

தீயின் சிவப்பு
என்னிடம்
எனது தூரத்தை அளந்தது.

காகக் கூட்டம்
கரைக்க, கரைக்க
பறந்தது


அதனால்
சுற்றத்தின் களிப்பு
எனக்கு
சுதந்திரத்தை அளித்து
சுயத்தையும் அளித்தது.



நீங்கள் நீங்களாக இருங்கள்; முகமூடி வேண்டாம் - இசுடீவன்சன்.

# மறக்க முடியாத இலங்கை இலக்கிய பயணம்!

தலைநகர் க.கண்ணன், மலேசியா-




கலைஞர் கலைச்செல்வனுடன் தலைநகர் க.கண்ணன்

தமிழர்கள் தங்களது தாய் மண்ணை விட்டு கடல் கடந்து பலநாடுகளில் வாழ்ந்து வந்தாலும், தங்கள் முன்னோர்கள் கட்டிக்காத்து வந்த கலை, கலாச்சார, பண்பாடுகளை இன்றுவரை தொடர்ந்து கடைப்பிடித்து தமிழர்களாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதை அண்மையில் இலங்கை சென்றபோது கண்டு மணம் மகிழ்ந்து குளிர்ந்து போனேன். எங்கள் நாட்டின் பிரபலமான பெண் எழுத்தாளரான திருமதி மார்கரெட் செல்லத்துரை அம்மையார் அவர்கள், ஓவியர், கவிஞர், எழுத்தாளர் எனமுப் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரே பெண் எழுத்தாளர் என்ற சிறப்புக்குரியவர். இவரது, 'போதும் உங்கள் ஜாலமே' எனும் பல்சுவை நூலின் அறிமுக விழாவிற்கு அண்மையில் இலங்கைவுக்கு பயணமானோம். இலங்கை விமானத்தளத்தை அடைந்ததும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களான இனிய நந்தவனம் ஆசிரியர் த. சந்திரசேகரன், கொழுந்து சிற்றிதழின் ஆசிரியர், எழுத்தாளர் அந்தனி ஜீவா, கலைஞர்



துணிவோடு செயல்படாத காரணத்தால் உலகில் பல திறமைகள் சிதறிப் போகின்றன. - சிட்னிசுமித்



ஈழத்து எழுத்தாளர் நீ.பா. அருளானந்தம், முத்தமிழ் படிப்பகச் செயலாளர் பொன் முனியாண்டியிடம் நூலை வழங்குகிறார். அருகில் தொழிலதிபர் செல்லத்துரை மற்றும் புலவர் முருகையன்

கலைச்செல்வன் ஆகியோர் இனிய முகத்துடன் என்னையும், எழுத்தாளர் அம்மையார், அவரது கணவர், மகன், நண்பர்களையும் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

கொழும்பு தமிழ் சங்கத்தின் ஆதரவுடன் நூல் அறிமுக விழாவை மிகச் சிறப்புடன் நடை பெறவும், "தினக்குரல்" நாளிதழுக்கும், தொலைக் காட்சி நேர்க்காணலுக்கும் ஏற்பாடு செய்து கெளரவிப்பதில் மூவரும் தணிக் கவனம் செலுத்தினர். அதே வேளையில் கண்டித்தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் நூல் அறிமுகம் செய்வதிலும் பெரும் சிரத்தை எடுத்துக் கொண்டனர்.

நகரின் பல இடங்களை சுற்றிப் பார்க்க அழைத்தச் சென்ற அந்தனி ஜீவாவும், கலைஞர் கலைச் செல்வன் அவர்களும், சாலைத் தடுப்புச் சாவடியில் காவல் புரிந்த இலங்கை இராணுவத்தினரிடம் மிகத் திறமையாக சிங்கள மொழியில் பேசி எங்கள் பயணத்தை தடையின்றி தொடரச் செய்தனர்.

எங்கள் பயணத்தின் போது தினசரி உடன் இருந்து காலைமுதல் இரவுவரை முகம் சுளிக்காமல் அன்புடன் உரையாடி மகிழ்ச்சியுடன் உபசரித்த அந்த தமிழ் உள்ளங்களை இன்று நினைக்கும் போது கூட எங்கள் உள்ளம் எல்லாம் இனிக்கச் செய்கிறது. என்றுமே மறக்கமுடியாத அனுபவமாகும்.

இலங்கை தமிழ் இலக்கிய வாதியும், இருமுறை அரசின் சாகித்ய அகடாமி விருது பெற்ற ஈழத்து இலக்கிய வாணர் நீபா. அருளானந்தம் அவர்கள் அன்மையில் மலேசியாவுக்கு குறுகிய பயணம் மேற்கொண்ட போது, தாம் எழுதிய நூற்களை, செந்நூல் முத்தமிழ்ப் படிப்பகத்திற்கு வழங்கினார். இலங்கை தமிழ் இலக்கியத்துக்கும், மலேசியத் தமிழ் இலக்கியத்துக்கும் நல்ல தொரு உறவுப்பாலத்தை ஏற்படுத்திய இனிய நந்தவனம் ஆசியரிருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.



மனிதனுக்குத் துணிச்சலைப் போல உண்மையான நண்பன் யாருமில்லை - சாணக்கியன்.

# அம்மாவின் அழகான மனசு

**–ஏ.எஸ்.எம். நவாஸ் கொழும்பு இலங்கை–**

**கா**கங்களின் எச்சங்கள் படிந்த பெயர்ப்பலகை....

கொழும்பு அரச மருத்துவமனை என்றிருந்தது. கட்டிலில் அசையாமல் படுத்தபடி ஆதித்தின் அம்மா. அம்மாவை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான்! விழிப்பூவை சற்றுமலர்ந்து ஆதித்தை ஏறிட்டுப் பார்த்த அம்மாவின் கண்களில் பிரகாசம் இல்லை. கண்ணீர் வழிந்தன.

"ஆதித்துக்கு என்னை விட்டா இந்த உலகில் யாரிருக்கா... அவனை யார் கவனிச்சுக்குவா...?" என்ற ஏக்கத்தின் எதிர்முனையே அந்தக் கண்ணீர்.

கண்ணீரைத் துடைத்து விட்டான்!

"ஆதித்... நீ நேற்றெல்லாம் தூங்கலையாப்பா...! சாப்பிட்டியா மகா... ஆதி... த்..." அதற்கு மேலும் பேச்சு சக்தியற்று வாய் இழுத்துக் கொள்ள... போர்வையை இழுத்தப் போர்த்திக் கொள்ள தவிக்க... ஆதித் இழுத்துப் போர்த்தி விட்டான்!

அவள் கண்ணயர்ந்தாள்!

ஆதித் அன்னையருகே கண்ணீர் வடித்தபடி நின்றிருந்தான்! நேற்று முன்தினம் வரை பணிப்பெண் வராததால் தாயருகே தவித்தபடி அருகிலிருந்தே அவளைக் கவனித்து பணி விடைகள் செய்ததான் தூக்கமதையும் நீக்கம் செய்தான்!

நித்திரை நிமிஷங்கள் விழிகளை மூடவில்லை. ஆதித்தின் விழித்த கண்கள் விடியும் வரை தொடர...

இன்றும் அப்படியே! பணிப்பெண் வரவுமில்லை.

இரவும் வந்தது...

நித்திரை நேரமும் வந்தது. ஆனால்-

அவனுக்கு நித்திரை வரவில்லை.

அந்த இரவிலும் -

விழித்திருந்த நிமிஷங்களில் அம்மாவின் அழகான மனசு -

அவன் கண்கள் முன்னே வந்துநின்றது!

★★★

வறுமைக்கோடுகள் வாசல் திறந்த நேரம் அது!



அதிகம் பேசுபவன் செயல் புரிவதில்லை - மாசின்.

அப்பா கொழும்பும்,

அம்மாவும், ஆதித்தும் யாழ்ப் பாணமுமாய் வாழ்ந்த காலம்...

வரண்ட காலம். வசதிகள் குறைந்த வாழ்க்கை.

அப்பா அம்மாவுக்கு மணி யோடரில் பணம் அனுப்பிவைத்தால் மட்டுமே சில நாட்கள் அடுப்பெரியும். புது உடுதுணியும் கிடைக்கும். மாதம் ஒருசினிமா என்ற பட்டியலில் ஆதித்தனின் சிறு ஆசையும் நிறைவேறும்.

அம்மாவுக்கு சில வேளைகளில் உடுத்திக் கொள்ள நல்ல சேலை கூட, இருக்காது!

தபால்காரன் மணி மந்திரம் பொழிய ஆதித் துள்ளியோடியபடி அம்மாமுன் நிற்பான்! அப்போது மனோகரா திரையரங்கில் எம்.ஜி.ஆரின் 'இதயக்கனி' ஓடிக் கொண்டிருந்தது. அழைத்துப் போகும் படி அம்மாவிடம் அடம்பிடித்தான்! சினிமாப் படம் பிடித்த வயதல்லவா அது!

ஆதித் ஒரே மகன்.

அம்மாவும் ஆமோதிப்பாள்!

கழுவிய உடை முழுதும் காய்ந்திருக்காது. மாற்றுடைய இல்லாததால் மனமின்றியே அதைச் சமாளித்து ஒருமாதிரியாக உடுத்திக் கொண்டு எம்.ஜி.ஆர். சினிமாபார்க்க ஆதித்தை அழைத்துச் செல்வாள்!

ஆதித்துக்கும் அவ்வேளை அம்மாவின் அழகான மனசு தென்படும்.

## எழுத்தாளர் ஏ.எஸ்.எம். நவாஸ் பற்றி...

**1986**இல் எழுத்துலகில் கால்பதிப்பு. சிறுசிறு கவிதைகள் மூலம் இலக்கிய உலகில் இனம் காணப்பட்ட இவர் - தனது முதல் குறுங்கதையாக 1988இல் "கொல்லத்துடிக்குது மனசு" என்ற கதையை இலங்கையின் "மித்திரன்" நாளிதழுக்காக எழுதினார். 'சிக்கனம்' குறுங்கதை சிந்தாமணியில் 1990இல் பிரசுரமானது. 'வறுமைச் சந்திப்புகள்' எனும் சிறுதையே இவரைப் பேச வைத்தது. இக்கதை வீரகேசரி வாரவெளியீட்டில் 1991ல் பிரசு மானது.



மித்திரன், சிந்தாமணி, மித்திரன் வாரமலர், வீரகேசரி வார வெளியீடு, இலங்கை வானொலி, ஜனனி வார இதழ், தினகரன் வார மஞ்சரி, மல்லிகை, இருக்கிறம், உட்பட வானொலி தினசரி, மற்றும் சஞ்சிகைகளில் ஏ.எஸ். எம். நவாஸின் குறுங்கதைகள், சிறுகதைகள், தொடர்கதைகள் என எண்ணிக்கை 49 ஐத்தொடுகிறது. 50வது சிறுகதையாக 'இனிய நந்தவனம்" சுமக்கிறது இவரது 'அம்மாவின் அழகான மனசு. இவர் இலங்கையில் பிரபல பத்திரிகையாளராகவும், கவிஞராகவும், கட்டுரை யாசிரியாகவும் திகழ்கிறார். பிறப்பிடம்: யாழ்ப்பாணம். வயது 44.

தொலைபேசி: 044-1897550 ஈ. மெயில்: asm.nawas@yahoo.com

கொழும்பில் ஆதித்தின் அப்பாவின் வருவாயும் சிறிதாகவே இருந்தது. ஐந்து இடியப்பம், ஒரு வடையுடன் தினசரி பகல் சாப்பாட்டுடன் அவரது வயிறு நிறுத்திக் கொள்ளும்! கோல்டன் கபே அதற்கு சாட்சி சொல்லும்!

அதில் மிகுதிபார்த்து மாதாமாதம் 150 ரூபாயை அப்பா அம்மாவுக்கு அனுப்பிவைப்பார் மணியோடரில்.

அச்சிறிய தொகை வட்டத்துக்குள் அம்மாவின் கனவுகள் கரைந்துபோவதுண்டு. ஆசைகள் மடிவதுண்டு. 'ஆதித்' என்ற மகனின் தேவைகளே அவளின் மூச்சாய் இருந்தது.

மானிப்பாய் வீதியில் சீக்கோ ஹோட்டலுக்கு அருகே இருந்த சைக்கிள் கடையில் வாடகைக்க சைக்கிளை எடுத்துக் கொண்டு தெருக்களை வட்டமடிப்பது ஆதித்தின் பொழுது போக்கு. ஒரு மணி நேரத்துக்கு ஐம்பது சதக்காசை சைக்கிள் கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு ஆதித் வீடு திரும்புவான்! அவனது விரும்புதலுக்கு மாற்றமாக அம்மா நடந்ததில்லை. அவனைக் கண்டபடி அடித்ததும் இல்லை.

அம்மாவின் அழகான மனசு எவ்வேளையிலும் அவனுக்குத் தென்படும். அசிங்கம் பிடித்த சினிமா நடிகனுக்கு ரசிகனாக - இருப்பதை விட நல்ல தாயின் மனதை ரசிக்கும் மகன் மேல். அவ்வாறே ஆதித் இருந்தான்! அம்மாவின் மனதுக்குள் மறைந்திருந்ததைக் கூட அவனால் ரசிக்க முடிந்தது.

மாதத்தில் பதினைந்து நாட்கள் அம்மாவின் கைகளால் ருசியான சமையலை அமைதியாக சாப்பிடும் ஆதித் அடுத்த பதினைந்து நாட்கள் வெறும் மரவள்ளிக் கிழங்கும், தேங்காய்ப்பூவுமாக அவன் உண்ணுகிற போதெல்லாம் அம்மாவின் அழகான மனசு அதை உற்று கவனிக்கும்.

விரக்தி அவள் மனதில் மேலெழும்.

விம்மல் தானாய் வந்து கண்ணீருடன் மோதும். ஆதித் அறியாதபடி துடைத்துக் கொள்வாள்!

அன்புடன் மகனை அணைத்துக் கொள்வாள்!

ஒருநள் பாடசாலைக்கு ஆதித் புறப்படுவதற்கு முதல்நாள் ஆதித்துக்கு தமிழ்ப்பாடம் எழுதக் கொப்பிஇல்லை. வாங்க காசும் இருக்கவில்லை.

கொப்பி கொண்டு போக வில்லை என்றால் ஆசிரியர் அடிப்பார் என்பது ஆதித்தின் அழுகை. அந்த அழுகை உரத்து வெளிப்பட்டிருந்தால் எவராவது ஒருவர் காதில் விழுந்திருக்கக் கூடும். அதன்மூலம் எவரினாவது கரங்கள் அவனது படிப்பிற்கு உதவியிருக்கும். மானம் பெரிதென எண்ணியதால் மௌனமாய் அழுகை வெடித்தது.

கொப்பி கொண்டு போகவில்லை என்றால் வகுப்பாசிரியர் ஆதித்தை அடிப்பார் என்பதும் அம்மாவின் அழகான மனசுக்குத் தெரியும்! மகன் அடிபட்டு விடக் கூடாதே என்பதினால் அம்மாவிக்கித்து நிற்க



சுறுசுறுப்புடன் வேலை செய்து வரும் தேனீக்களுக்கு அழுவதற்கு நேரமில்லை. - வில்லியம் பிளேக்

ஆதித் அருகில் அழுது
கொண்டிருந்தான்!

மாதம் முடிவு தேதி.

மணியோடரும் வரவில்லை.

பதைக்கும்மனதில் உதைக்கும்
சில சிந்தனைகள்...

ஒரு சில பழைய வெள்ளைத்
தாள்களைச் சேமிப்பது அவளது
வழக்கமாய் இருந்து வந்தது. அதைக்
கொப்பிக் கட்டாக மடித்து
நடுப்பக்கத்தை விரித்து
நடுக்கோட்டில் நூலேற்றி ஊசியால்
தைப்பாள்! மேலுரை ஒன்று
போடுவாள்! கொப்பியாகிவிடும்!

அதை ஆதிட்டம்
கொடுப்பாள்!

ஆதித்திற்கும் வெட்கமாக
இருக்கும். பாடசாலைக்கு அதைக்
கொண்டு போனால் பக்கத்தில்
உள்ள வகுப்புப்பிள்ளைகள்
தன்னைக் கேலி செய்ய
மாட்டார்களா?

வேலி தாண்டி எழும் கேள்வி...
நியாயமானதே!

"மாஸ்டரிடகையால அடிபடக்
கூடாது என்கிறதுக்காக ராசா இத
நான் ஒனக்கு தச்சுத் தந்திருக்கேன்.
நாளைக்கே அப்பாவுடைய
மணியோடர் வந்ததுமே புள்ளைக்கு
புதுக் கொப்ப வாங்கித்தாரேன்!"
என்பாள் அழகான மனசுடன்
அம்மா.

அம்மா சொல் தட்டாத
அவனும் அதை மறுநாள்
பாடசாலைக்கு கொண்டு

# சின்னச் சின்ன கவிகள்...

**தெருவோர மாடுகள்**
**கொழுத்தன**
**இது தேர்தல் காலம்!**

★★★

**இரவு அமைச்சர் வந்தார்!**
**எத்தனை வெடிகள்...**
**பாவம் நகர சுத்தித் தொழிலாளி!**

★★★

**பிழைகள்**
**அதிகம் எடுத்துப்**
**பாஸான மாணவன்**
**அரசியல் வாதி.**

★★★

**எங்கள் வீட்டுக்குத்**
**தொலைபேசி எடுத்தோம்!**
**அடுத்த வீட்டுக்கு**
**அடிக்கடி -**
**அழைப்பு வருகிறது.**

★★★

**தூக்கம் வரவில்லை**
**காலையில்**
**'கட்டில்' காசு**
**கொடுக்க வேண்டும்!**

★★★

**கோலாகலமாகத்**
**திறந்து வைக்கப்பட்டது**
**பூட்டுக்கடை.**

★★★

**தாயும் மகளும் சண்டை.**
**இரு வீட்டுப் பூனைகளும்**
**ஒரு வீட்டில்!**

**-கிண்ணியா அமீர் அலி இலங்கை-**



**கோபம் என்பது தற்காலப் பைத்தியம். - கோரெசு.**

சென்றான்! அதை ஒரு தினம் கவனித்து விட்ட தலைமை ஆசிரியர் ஆதித்தை வரும்படி சைகை காட்டினார். எங்கே ஆசிரியரின் பிரம்பு தன்னைப் பதம் பார்க்கப் போகிறதோ என்ற அச்சத்தில் மெல்ல மெல்ல நடந்து தலைமை ஆசிரியர் அருகே சென்றான் ஆதித். உள்ளே அழைத்த அவர் மெல்ல அவனது தோளைத் தொட்டபடி ஈரம் கசிந்த கண்களுடன் ஆதித்தைப் பார்த்தார். மெல்ல நகர்ந்த அவர்தனது காரியாலயத்தில் இருந்த பீரோவைத் திறந்து அதிலிருந்த புத்தம் புதிய கொப்பிகளை ஆதித்திடம் கொடுத்தார்!

அடுத்தகணம் ஆதித்திடம் சந்தோஷம் பீறிட்டது. அவனுக்குப் புதிய அப்பியாசக் கொப்பிகள் கிடைத்தன. அம்மாவின் அழகான மனசு செய்த பிரார்த்தனைதான் தனக்கு கொப்பிகள் கிடைத்தன என ஆதித் எண்ணினான்!

பட்டினியில் சில நாட்கள் கடக்கும்.

பக்கத்து வீட்டு பாட்டியின் உணவு வரும், "இந்தாம்மா இதைப் புள்ளைக்கு கொடு" என்பாள் ஆதித்தின் அம்மாவிடம் அந்தப்பாட்டி. சில வேலைகளில் வீட்டக்கு வந்து "பட்டினியில புள்ளையப் போடாதே... பேசாம என் வீட்டுக்கே அனுப்பிவை புள்ள... அவனுக்கு அமிர்தம் நான் கொடுக்கிறேன்!" என்பாள் அந்தப்பாட்டி.

இப்படிக் கடந்த நாட்களில் கனவுப்பாத்திரங்களாய் வந்து நிற்கும் தலைமை ஆசிரியர், பக்கத்து வீட்டுப்பாட்டி, என்று சிலர்...

ஆதித்தின் அப்பாவுக்கு நாட்கள் செல்லச் செல்ல காச நோய் வந்து கட்டிலில் படுத்துவிட... சில நாட்களில் இறந்தும் போனார். இளமையில் கொடிய வறுமையை ஆதித்தும் அனுபவித்தான்! ஆனாலும் அம்மாவின் பாசத்தின் அரவணைப்பில் அவைகளை மறந்தான்!

அதுதான் அம்மாவின் அழகான மனசு.

மீண்டும் புது ஞாபகங்களுக்குள் ஆதித்.

மீண்டும் மருத்துவமனைக் கட்டில்.

கிட்னி செயலிழப்பு நோயாளியாக அவனது அம்மா. டயலிஸஸ் என்ற ரத்தச் சுத்திகரிப்பு பண்ணி வேதனைகளோடு முணங்கிக் கொண்டிருந்தாள் அவனது அம்மா.

இப்போது அம்மாவின் அழகான மனசையும் உடல்கூறு களையும் அவதிப்படுத்தும் சிறுநீரக நோய். வேதனையில் அவள் நெளிந்து கொண்டிருக்க அதை ரசிக்க முடியாதவனாய் ஆதித். அவளது உடல் நிலை ஆபத்தை அழைத்துக் கொண்டிருந்தது. கடைசி நாட்களில் அம்மா வாழ்ந்து கொண்டிருப்பதை ஆதித்தும் அறிவான்.

இரவு ஏழுமணி நெருங்க இன்னும் ஒரு மணிநேரம். பணிப்பெண் ஆஸ்பத்திரி வந்து

அம்மாவை கவனிப்பதாக
தொலைபேசி தகவல் வந்தது
அவனுக்கு.

யோசித்தான் ஆதித்!

"எத்தனையோ இரவுகள்
தூங்காமல் என்னை வளர்த்து
அளாக்கிய அவளை ஒரு
பணிப்பெண்ணை வைத்துக்
கொண்டா கவனிப்பது...? என்னைத்
தாலாட்டியதும், பாலூட்டியதும்,
பாராட்டியதும் அவளல்லவா...?
நாலுபேர் என்னை மதிக்க கற்றுத்
தந்ததும் அவள் மனமன்றோ...?
பணத்துக்காக பணிப்பெண்
அம்மாவைக் கவனித்துக்
கொள்வாள்! பாசத்துக்காக...?
பாசம்பேச என்னால் மட்டும்தானே
முடியும்..! கடைசி நாட்களில்
அம்மாவுக்கு நான் செய்யப்போவது
இது மட்டுமே காணிக்கை"

என்று யோசித்தவனாய்...

செல்போனில் ஏதோ
எண்களைத் தட்டியவன்..

"மிஸிஸ் சரஸ்வதியா..?
ஆதித்பேசுறேன்..! நீங்க இனி
வரத்தேவையில்லை...! பரவாயில்ல...
அம்மாவ நானேபார்த்துக்கிறேன்...!"
என்று நிறுத்தியவன் "தொழிலை
விட அம்மாவின் உயிரு பெரிது"
என்ற போக்கில் சிறிதும்
மாற்றமில்லாதவனாய்... அங்கேயே
அவன் நிற்க...

அம்மாவின் அழகான மனசு

விழியோர விளிம்பில் வந்து
நிழலாடி நின்றது.

# உலகம் உனதாகும்

முடியாதென்ற
முக்காட்டுக்குள்
முகம் புதைத்து

விடியாத ஒரு இருளில்
விழுந்து தூங்கும் இளைஞனே...

வேண்டாத அந்த விபரீதத்தை
கூட்டிலிட்டு வெளியே இறகடி...

உனது தாழ்வு மனக்குரங்கு
உனக்குள்ளே
தாராளமாய் குந்தியிருந்து
தலை நிமிராமல்
உன்னைக் குட்டியபடி

ஒரு தூங்கணாங் குருவி
எங்கே கற்றது ஆற்றங் கரை
மரக்கிளையில் அழகான தொரு
கூடுகட்டி தொங்கவிட!

தேனீ அதன் சுறுசுறுப்பை
எந்த தேகப்பயிற்சி நிலையத்திலும்
பயிற்சியெடுத்து
பழகிக் கொண்டதில்லை.

தேடல் உன்னிடம் குட்டைக்குள்
தேங்கிய
சேற்று நீராக தேங்கிக் கொண்டதால்
ஊடலாய் உனக்குள்ளே
புகுந்து கொண்டது
சோம்பேறித் தேவாங்கு!

உச்ச அழுத்தத்தை
உள்வாங்கியதால்
உருவானது ஒரு வைரக்கல்!

உலையிலிட்ட தங்கத்தான்
உலா வருகிறது உலகச் சந்தையின்
மதிப்பின் உச்சத்தில்!

தாழ்வுச் சிக்கலை
சிதையிலிட்டு நீமுட்டு

கொதித்தெழட்டும்
கொதி நீர்கலத்து நீராக
உனது ஆற்றலின் வெளிப்பாடுகள்!


குறை குடங்கள் சில உன்னை
சீண்டிப் பார்த்தாலும்
சாம்பலை உதிர்த்தெழும்
பீனிக்ஸ் பறவையாய்
சிலிர்த்து மேலெழு
உனது காலடியில்
உலகம் நாளை!

வெல்லிதாசன்-திருகோணமலை.



எந்தச் செய்கையையும் துணிவோடு துவக்குங்கள்; பாதி வெற்றி உறுதி. - பிரான்சு.

# நூல் நயம்




-பொன்முருகேசன்-

நிகழ்வுகளை அசைபோடும் நிஜமான கவிதைகள் அங்கங்கே நெஞ்சைச் சுடுகின்றன.

**யுத்தமும் சிறுவர்களும் - தலைப்பால்**
**எங்கள் குரல் கேட்கின்றதா?**
**ஏனிந்த நிலைமை பார்த்தீர்களா?**
**தூங்கக் கூட இடமில்லை**
**ஏங்கி வாழ்வைக் கழிக்கின்றோம்.**
**கண்ணீர் கலந்த வாழ்வினிலே**
**கருணை வேண்டி நிற்கின்றோம்**
**போரில் இருந்து காப்பாற்றி**
**பாரில் உதவி புரிவீர்களா...?**

இந்த வரிகள் உயிர்களின் அவலங்கள் மட்டுமல்ல... நாட்டின் அவலமும் கண்முன் வந்து நிற்கிறது, சிந்திக்கவும் வைக்கிறது.

அடுத்து இருட்டு முகங்கள் - தலைப்பில் ஓர் கவிதை... அதில் உள்ள ஓவியமே ஆயிரம் கதை சொல்கிறது... நீ என் தெய்வம் - தலைப்பில் உள்ள கவிதைகயில் விட்டுச் சென்ற தாயை பாராட்டும் சேய் 'உன் தரிசனம் தாராயோ' என கேட்கும் வரிகளில் தாயின் மகத்துவத்தை உலகறியச் செய்திருக்கிறார் இந்தக்கவிஞர்

**'பூக்களை ஒருநாள் வாழவைத்தால்**
**புன்னகை தேசத்தை புதுப்பிக்கலாம்'**

- என்றும் கூறுகிறார் எதையும் விட்டு வைக்கவில்லை இவர்... நூல் முழுக்க உள்ள கவிதைகளும் அதற்கேற்ற ஓவியங்களும் கவிதை களுக்கு உயிர் தருகின்றன... அருமை யான வடிவமைப்பு பக்கத்தை நகர்த்த முடியாமல் கரங்களைக் கட்டிப் போடுகிறது. குறிப்பிடப் படக்கூடிய கவிஞர்களில் இந்நூல் ஆசிரியர் ஜோ.ஜெஸ்ரின் ஒருவராவார்.

சரியான நேர்த்தியான நூலை வெளியிட்டமைக்காக புரவலர் புத்தகப் பூங்கா பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

வெளியீடு: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா ரோடு கொழும்பு - 16, இலங்கை. விலை - 150




கதவைத் தட்டாத காரணத்தால் எத்தனையோ வாய்ப்புகளை இழக்க நேரிடுகிறது. - பல்கேரியா.

வாழ்வியலின் எதார்த்தங்களைப் பதிவு செய்யும் படைப்புகளே காலம் கடந்தும் நிலைத்து நிற்கும். அந்த வகையில் எதார்த்தங்களின் பதிவாய் வெளிவந்திருக்கிறது வவுனியூர் இரா. உதயணனின் "மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள்" சிறுகதை நூல். உதயனன் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இலண்டனில் வாழ்வியலை அமைத்துக் கொண்டவர், புலம்பெயர்ந்த தமிழர்களின் கலாச்சார சீரழிவுகளையும் அதனால் ஏற்படும் மன உளைச்சலையும் சிறுகதையாக்கியிருப் பதை வாசிக்கும் போது இதயம் கணத்து விடுகிறது. நம் தமிழ்ச் சமூகம் இப்படி மாறிப்போனதே என்று.

சந்தர்ப்ப சூழ்நிலையால் கற்பை இழந்த ஒரு பெண்ணின் போராட்டமான வாழ்க்கையை "அப்பா எப்ப வருவார் அம்மா" என்ற கதைமூலம் மிக நேர்த்தியாக பதிவு செய்திருக்கிறார். அதேபோல பணம் மட்டுமே குறிக்கோள் அதை எப்படியாவது சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் அரபு நாட்டுக்கு வீட்டு வேலைக்காக செல்லும் ஒரு பெண் பாலியல் தொல்லைக்கு எப்படி ஆளாகிறாள் என்பதை "பாலைவனத்து பேதையவள்" என்ற கதை மூலம் அரபு நாடுகளில் வேலை என்றக் கனவுடன் இருக்கும் பெண்களுக்கு எச்சரிக்கையாக தந்திருக்கிறார்.

"மோதிரம்" என்ற கதைமூலம் நகைக்கடை பட்டறையில் வேலை செய்யும் சிறுவன் படும் அவலத்தையும் தொழிலாளி முதலாளி இடையே உள்ள பிரச்சனைகளையும் கதையில் புரியும்படி விளக்கியிருப்





சந்திரன்

பது பாராட்டை பெருகிறது. மேற்கண்ட கதைகளைப்போல பன்னிரெண்டு கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையிலும் சமூக சிந்தனையோட்டம் நிறைய இருப்பதை காணமுடிந்தது. நூலாசிரியர் இரா. உதயணனின் "விதி வரைந்த பாதையில்" என்ற நாவலுக்கு இலங்கை சாகித்திய விருது கிடைத்திருக்கிறது. அதேபோல இச்சிறுகதை நூலுக்கும் சாகித்திய விருது கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் நிறைய இருக்கிறது. நூலை மிகநேர்த்தியான கட்டமைப்புடன் தரமான தாளில் வெளியிட்டிருப் பதை அவசியம் பாராட்டியாக வேண்டும். வெளியீடு: அருணா வெளியீட்டகத் A.151/1 மனிங் ரவுண் வீடமைப்பு தொகுதி மங்கள விதி கொழும்பு - 08 இலங்கை. தொ.பே. 011.2688466, விலை ரூ.200



நாம் எச்சரிக்கையுடன் இருப்பதால் நம்பிக்கை பெறுகிறோம் - கிரீசு.



இலக்கியத் துறைகளிலும் தனது ஆதிக்கத்தினைச் செலுத்தியுள்ளார். இருப்பினும் கவிதைத் துறையிலேயே இரவது பெயர் நிலைபெற்றுள்ளது. கவிதைகளைப் பல்வேறு புனை பெயர்களிலும் படைத்தளித்துள்ள போதிலும் தன் ஊரின் பெயரான 'நீலாவணை' எனும் பெயரையே தனது பெயராக 'நீலாவணன்' எனக்கொண்டார். இதுவே இரவது பெயராக பின்னரும் நிலைத்து நின்றது. இவரது கவிதைப் பங்களிப்பு பல்வேறு பரிமாணங்களை ஈழத்துக் கவிதைத் துறையில் ஏற்படுத்தியுள்ளது. இதில் இவரது தமிழுணர்வு சம்பந்தப்பட்ட கவிதைகள் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றன.

# கவிஞர் நீலாவணனின் தமிழுணர்வு

-இலங்கை பேருவளை நபீக் மொஹிடீன்-

ஈழத்து நவீன கவிதைத் துறையின் முன்னோடிகளுள் ஒருவராகவும் கிழக்கிலங்கையின் மட்டக் களப்பு மாவட்டத்தின் கவிதைத் துறைப் பிரதிநிதியாகவும் போற்றப் படுபவர் கவிஞர் நீலாவணன். இவர் கிழக்கிலங்கையின் மட்டக்களப்ப மாவட்டத்தின் நீலாவணை என்னும் ஊரில் 1931.03.31ம் தியதி பிறந்தார். இவரது தாய் தங்கம்மா தந்தை கேசவப் பிள்ளை. இவரது இயற்பெயர் சின்னத்துரை.

ஈழத்துக் கவிதைத் துறைக்கு பல்வேறு விதமான பங்களிப்புக்களையும் செய்துள்ள நீலாவணன் பிற

இளமையிலேயே தமிழுணர்வு மிக்க கவிதைகளைப் படைத்துள்ள கவிஞர் நீலாவணன், 'சுதந்திரன்' பத்திரிகைப் பேட்டியின் போது, "இறுதி மூச்சுவரை எழுதி வியர்த்து இறப்பில் அமைதி காண வேண்டும்" எனக் கூறியிருப்பதானது அவரது இளமை வேகத்தை, தமிழிலும் கவிதையிலும் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாக உள்ளது. கவிஞர் நீலாவாணனின் கவிதைகளில் தமிழ் மணம் கமழும். இவர் கவியுலகில் காலடி எடுத்து வைத்த காலத்திலிருந்தே இவரிடம் தமிழுணர்வு மேலோங்கியிருந்தது.



எல்லோரும் சொல்கிறார்கள் என்பது ஒரு அழகான பொய். - நைசீரியா.

இலங்கையிலே தமிழர்களுக்கெதிரான சில நடவடிக்கை களை சிங்கள அரசுகள் மேற்கொண்டு வந்தன. இதனால், ஈழத்திலே சிங்களத் தேசிய எதிர்ப்புக் கவிதைகள் மிகவும் பரவலாக எழுந்தன. இதில் கவிஞர் நீலாவணனின் கவிதைகளின் பங்கு மகத்தானது.

1950களில், திராவிட முன்னேற்றக் கழகத்தினது (தி.மு.க) தீவிரத் தமிழுணர்வு நீலவாணனைப் பெரிதும் கவர்ந்தது. அக்காலத்தில், தமிழ் மொழி எப்போது தோன்றியது? அதன் பெருமை எத்தகையது? அதனாலேற்படும் சிறப்புக்கள் என்ன? என்பது போன்ற தமிழின் தொன்மைக்கும் அதன் சிறப்புக்கும் சவால் விடுகின்ற பல நஞ்சுக் கருத்துக்கள் பரப்பப்பட்டன. வட மொழியின் மேலாதிக்கமே இத்தகைய நச்சுக் கருத்துக்கள் பரவக் காரணமானது. வடமொழி தேவமொழி என்றும் தமிழ்மொழி நீச மொழி என்றும் அம்மக்களிடையே போதிக்கப்பட்டன. இதன்போது தமிழ்ப்பற்று மிகுந்த தமிழறிஞர்களால் தமிழின் தொன்மையும் அதன் சிறப்புக்களும் நிரூபிக்கப்பட்டன. தமிழறிஞர்களான சூரிய நாராயண சாஸ்திரியாரும், வேதாசல சுவாமிகளும் தம் வட மொழிப்பெயர்களை முறையே பரிதி மாற் கலைஞர், மறைமலையடிகள் எனத் தமிழ்ப்படுத்திக் கொண்டனர். மேலும், மறைமலையடிகள் 'தனித் தமிழ் இயக்கம்' என்றொரு மொழி இயக்கத்தையும் நிருவி தமிழ் மொழியை வளம்பெறச் செய்தார். பாரதியின் அடியொற்றி வந்த பாரதிதாசனும் தமிழ் மொழியின் சிறப்புக்கள் குறித்து பல கவிதைகளையும் எழுதி வந்தார். இவை யாவும் இலங்கையில் நீலாவணனையும் பாதித்தன. தி.மு.க.வின் கருத்துக்களாலும் தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளினாலும் அதன் செயற்பாடுகளினாலும் பாரதிதாசனின் கவிதைகளினாலும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்த நிலாவணன், அதே பாணியில் சுதந்திரனில் பல கவிதைகளை எழுதினார். அவற்றுள், 'தமிழே எழுவாய்' என்ற தலைப்பில் 8.7.1957இல் எழுதிய கவிதை பிரசித்தமானது. அதில் அவர்,

**"என்று நீ பிறந்தாய் என்றுனை**
**யாரும்**
**எழுதி வைத்திலர் இனி எழுதவும்**
**ஒண்ணா"**

எனத் தமிழின் தொன்மையை பறை சாற்றுகிறார். இதன் மூலம் அவர் தமிழின் மீது அவர் கொண்ட பற்று புலப்படுகிறது. நீலாவணன் தன் குழந்தையைக் கூட தமிழின் சிறப்பாகவே கண்டு உருவகித்துப் பாடியிருக்கின்றார். திருக்குறள், சிலப்பதிகாரம். முதலான இலக்கியங்கள் தமிழின் இனிமை யினையும் அதன் சிறப்பினையும் உணர்த்தும் இலக்கியங்களாகும். இத்தகைய இலக்கியங்கள், அனைத் தையும் தமிழாகக் கண்ட உணர்வின் வெளிப்பாடாக தன் குழந்தைக்காக அவர் பாடிய பாடலில் தன் குழந்தையை தமிழ் இலக்கியங் களாவே உருவகிக்கிறார். நீலாவணன் 'கண் மலராய்' எனும் கவிதைகயில் இதனைக் கண்டு தெளியலாம்.

**"எழிலரசி**
**செந்தமிழ்க் கொஞ்சும்**
**சிலம்பே திருக்குறளே..."**

என இக்கவிதை தொடர்கின்றது. பல



மடையன் அலைவான். புத்திசாலி பயணம் செய்வான். - இத்தாலி.

கவிஞர்களும் குழந்தையை சின்னஞ் சிறு கிளியே, மானே, தேனே, முத்தே, மரகதமே, கனியே, கற்கண்டே, கரும்பே, பேசும் சித்திரமே எனப்பாட நீலவணனோ தன் குழந்தையை சிலம்பே, திருக்குறளே, செந்தமிழ்க் காவியமே எனப் பாடியிருப்பதானது அவரது தமிழுணர்வினை எடுத்தியம்புவதாகவே உள்ளது. இத்தகைய தமிழுணர்வின் தர்க்க ரீதியான வளர்ச்சி தமிழர்களுக்கென்ற தனித் தமிழ்ப்பண்பாடு, தனிப்பிரதேசம், தனிநாடு, தனி மொழி எனச் சிந்திக்கும் நிலைக்குத் தள்ளியதால் 'தமிழ்க் குரல்' எனும் பத்திரிகையில், நீலா வணனின் 'நன்மானம் தந்த நாள்' என்ற கவிதையானது தமிழினம் குறித்தும். தனியரசு குறித்தும் பேசுகின்ற ஒரு கவிதையாக மிளிர்கின்றது. அதில் அவர்,

**"நலமிக்கு வாழ்ந்திட்ட**
**தமிழினம்தான் இன்று**
**நாயினும் கடையராய் வாழ்ந்திடுதல்**
**நன்றோ**
**சலமிக்கு ஈழமதில் தனியரசு**
**பெறுநாள்**
**தன்மானம் காத்திட்ட**
**நாளாகுமன்றோ"**

எனப் பாடுகின்றார். தமிழினம் ஒரு காலத்தில் சிறப்பாக வாழ்ந்தது. இன்று சிறப்பின்றி வாழ்கிறது. சிறப்பாக வாழ தனியரசு தேவை என்ற அவரது அரசியற்பார்வை கவிதையில் தெரிகிறது. இது அன்று அரும்பிய தமிழ்த் தேசியவாதத்தின் பாதிப்பாகும். தமிழரசுக் கட்சி மேடைகளில் தீவிரமான பேச்சாளராகவும் கவிஞர் நீலாவணன் திகழ்ந்தார். இவரது சில கவிதைகள் தமிழரசுக் கட்சியில் சேரும்படி தொண்டர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கு ஆதாரமாக "சேனையில் சேர்" எனும் கவிதையைக் குறிப்பிடலாம். இது "சுதந்திரன்" பத்திரிகையில் வெளி வந்தது.

**"இணைப்பரசு பெற்றெங்கள்**
**இன்பத் தமிழை**
**அணையேற்ற வேண்டின் அதோ**
**துணையாவான்..."**

எனும் கவிதையில் இவ்வழைப் பினைக் காணலாம். இதனால் இவர் 'கட்சிக் கவி' எனவும் அழைக்கப் பட்டார். கட்சி முன்னெடுத்த அறப் போராட்டம், ஆவணிப் போராட்டம் என்பவற்றறைப் பற்றியெல்லாம் கவிதை களை எழுதியுள்ளார். ஆவணிப் போருக்கு செல்லும் முன் தன் மனைவிக்கு கூறுவதைப் போல் பின்வருமாறு கூறுகின்றார்.

**"எந்தன் மகன் எழில் வேந்தனை**
**என்னுயிர் ஏகிய தென்றவுடன்..."**

எனத் தொடங்கும் கவிதையில், தான் இந்த அறப் போராட்டத்தில் இறந்தால் தனது மகனை அதே வழியில் போராடச் செல்லுமாறு கூறுவது போல் பாடுகின்றார். இதன் மூலமும் நீலாவணனின் தமிழ்ப்பற்றும் தமிழுணர்வும் எந்தளவு தூரம் மேலோங்கியுள்ளது என்பதை உணரலாம்.

இலங்கையில், சிங்கள எழுத்தான 'ஸ்ரீ' (ஸ்ரீ) எனும் எழுத்தை மோட்டார் வாகனங்களில் பொறிக்க வேண்டும் என்ற ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்போது தமிழ்க் கட்சிகள் பலவும் பெரும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தின. 'சுதந்திரன்' பத்திரிகையில் கவியெழுதிய நீலாவணன் இவ்வெழுத்து குறித்து (ஸ்ரீ),

**"நண்டெழுத்து நமக்கெதற்கு..."**



**கேள்வி கேட்கப் பயப்படுகிறவர்கள் எதையுமே தெரிந்து கொள்ள முடியாது. - டானிசு.**

என எழுதினார். மேலும் அவர், 'எழில் காந்தன்' என்னும் பெயரில் 'எவர் வேண்டும்' எனும் தலைப்பில் ஒரு கவிதை எழுதினார். அதில் அவர் சிங்கள அரசியல் கட்சிகளோடு கைகோர்த்த ஒரு தமிழ்க் கட்சியைச் சாடி எழுதினார். இத்தகைய தீவிர தமிழுணர்வும் தமிழ்ப் பற்றும் ஒரு கவிஞனின் அகன்ற சிந்தனை, மனிதாபிமானம் மிக்க சிந்தையை மழுங்கடித்தமையையும் காட்டுகின்றன. ஓர் இனத்தின் மீது வைத்த தீவிரப் பற்று மற்றுமொரு இனத்தின் மீது கண்டிப்பாகவும் வெறுப்பாகவும் மாறுவது தர்க்க ரீதியான வளர்ச்சியாகும்.

**"உரிமைக் குரலைத் திருகத்**
**தகுமோ?"**

எனும் கவிதையில் நீலாவணன்,

**"களிமண்டைகளே**
**செவிகொண்டிடுவீர்**
**விழி தேவையில்லை வழிகாட்டிகள்**
**நாம்..."**

எனக் கூறுகிறார். அத்தோடு, 'சிங்களக் கூலிகள்' எனும் மற்றுமொரு கவிதையில்'

**"சிங்கள மொழி என்னும்**
**சிறுநரி உன்னைத்**
**தின்ன வந்ததோ..."**

எனக் கேட்கின்றார். இது சிங்கள மொழிமீது கொண்ட கோபத்தின் காரணமாக எழுதப்பட்டதாகும். மேலும், தீவிர தமிழ் உணர்வும் தமிழின் பெருமை பேசும் காவியங்களே சிறந்த காவியங்கள் எனக் கூறுவதுடன் ஆரியர் பெருமை பேசும் கம்பராமாயணம் போன்றவற்றைக் காவியமல்ல எனவும் கூறுகிறார். இவையாவும் நீலாவணனுக்கிருந்த தமிழுணர்வின் பிரதிபலிப்புக்களாகும். ●

# ஈழத்தமிழினம்

**ஈழவள நாட்டுப் போர்**
**ஈனப் பட்டுப் போனது**
**வாழவழி கேட் டிருந்தோர்**
**வாழ்வு கேள்வி ஆனது!**

**மான முள்ள மறத்தமிழர்**
**மாற்றான் கால் பிடிப்பரோ**
**தானஞ் செய்து தன்னினத்தை**
**தவிக்க விட்டுச் செல்வரோ!**

**வான்; கடல்; தரை சுழன்று**
**வளம் சேர்த்து வைத்தாரே**
**தான் வாழ வழியின்றி**
**தனிநாடு கேட்டாரே!**

**ஏன் என்று கேட்டவர்க்கு**
**இன்னுந் தான் புரியாதோ**
**வீண் ஆகிப் போய்விடுமோ**
**விழலுக்கு நீர் இறைத்தோமா?**

**ஆனாலும் விட மாட்டோம்**
**அடையும் வரை ஆறாது**
**போனாலும் போக விடோம்**
**பொறுத்துக் காத் திருப்போம்**

**தேனாக வாக்கு ரைத்து**
**தேளாக கொட்டி விட்டு**
**சானேற முழம் சறுக்கி**
**சாய்ந்த தையா தமிழீழம்!**

**கவிஞர் சே. ஞானராசா**
**திருகோணமலை இலங்கை**



நன்மை செய்யுங்கள்; அது யாருக்கென்று மட்டும் கேட்காதீர்கள். - யூதப் பழமொழி.

# வரலாறு கண்டிராத நூறாவது பரதநாட்டிய அரங்கேற்றம்:

ஒரு இனத்தின் அடையாளங்களாக இருப்பவை மொழி, கலை கலாசாரம், பண்பாடு ஆகியவையேயாகும். மொழியை நோக்கும்போது, எமது தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாகச் சங்ககாலம் தொடக்கம் பெருமையுடன் போற்றப்பட்டு வருகின்றது.



தமிழினத்தின் கலைகளில் மரபு வழிவந்த நடன வகைகளுள் முக்கியமானதோர் இடத்தை பரநாட்டியம் பெற்றுள்ளது. இக்கலை வடிவமானது தமிழர்தம் பாரம்பரியக் கலைச் சொத்தாகும்.

பழைய காலத்தில் கூத்து இருந்தமைக்கான சான்றுடன் இருந்துள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம் ஆகிய பழந்தமிழ் நூல்களில் கூத்து ஆடியவர்களைக் கூத்தர், விரலியர் என்ற பெயர்கொண்டு விழிக்கப்பட்டுள்ளனர். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள அரங்கேற்று காதையில் ஆடற்கலை பற்றிக் கூறப்பட்டுள்ளது. பண்டைய மன்னர் காலத்தில் கோயில்களில் சேவகம் செய்த தேவதாசிகள் நாட்டியம் ஆடிவந்தார்கள். அக்காலத்தில் சதிர் ஆட்டம்,



அறிவை வெறுக்கும் அறியாமையைவிட உலகில் மிகக் கொடியது வேறொன்றுமில்லை. - கலிலியோ.

சதிர்க் கச்சேரி, சின்ன மேளம் என்று சுட்டப்பட்ட பரதநாட்டிய மானது தமிழகத்துக்கே உரித்தான தொல்சீர் கலைவடிவமாகும்.

பரதமுனிவரால் எழுதப்பட்ட 'நாட்டிய சாஸ்திர' என்னும் நூல் கூறும் பரதநாட்டியம் இந்தியத் துணைக்கண்டத்தில் ஆடப் பட்டு வருகின்ற சகலவிதமான நடன வடிவங்களுக்கும் பொது வானதாக இருக்கின்றதென ஆய்வாளர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் குறிப் பிட்டுள்ளார். மேலும் 'பரதசாஸ்திர' என்னும் வடமொழி நூலுக்கு இணை யாகத் தமிழ்மொழியிலும் எழுதப் பட்ட நூல் ஒன்று சிதம்பரத்தில் இருந்ததாகவும் சொல்லப்படுகின்றது.

வராற்றுப்பிரகாரம் தமிழகத்தில் காலங்காலமாக ஆடற்கலை, 'பரத நாட்டியம்' என்று அழைக்கப்பட்டு வந்ததாகவும் அதற்குச் சான்றாக பாரதியாரின் "பரத நாட்டியக் கூத்திடுவீரே" என்ற கவிதை யிலிருந்தும், 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓலைச் சுவடி ஒன்றில் காணப் பட்டு "பரதவி நாட்டியம் பயில்கின்ற பல மாதர்" என்ற சொற்றொடரும் சான்றாக இருக்கின்றன என்று 'வரலாற்றில் பரதநாட்டியம்' என்ற தமது நூலில் டாக்டர் இரா.நாகசாமி குறிப்பிட்டுள்ளார்.

பரதநாட்டிய மரபினைப் பேணிப்பாதுகாத்த தேவதாசிகள் பற்றிக் கூறுகையில், அவர்களுக்கு நடனம் கற்பித்த ஆசிரியர்கள் நட்டுவனார் என்று அழைக்கப்பட்ட னர். நட்டுவனாரின் செயற்பாட் டினை 'நட்டுவாங்கம்' என்று அழைத்தனர். ஆலயங்களிலும் அரச



அவைக்களத்திலும் நடன ஆசிரிய ரின் பணி இவ்வாறு சுட்டப்பட்டது. இன்றுவரை 'நட்டுவாங்கம்' பரத நாட்டியத்துடன் நிலைத்துவிட்டது.

கோயிலில் தேவதாசிகளால் ஆடப்பட்டுவந்த சதிர் நாட்டியத்தை மக்கள் மதிக்கும் கலையாக மேடைக் குக் கொண்டு வந்து சமூக அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமைக் குரியவர் ஸ்ரீமதி ருக்மிணி தேவி அருண்டேல் ஆவார். பரதநாட்டியக் கலைக்குப் புத்துயிர் கொடுத்தவர் என்றவகையில் அவரின் நாமம் பரதநாட்டியக்கலை வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. மரபு வழி வந்த நாட்டியக் கலைஞர்

அபிநய அரசி பாலசரஸ்பதியும் அன்று போற்றப்பட்டார்.

மரபுவழிவந்த பரதக் கலையின் உயிர்நாடியாய், காவலாய் வாழ்ந்து மறைந்த நட்டுவனார்களும், தம் உடல் பொருள் ஆவி ஆகியவற்றை நடனக் கலைக்காகவும் ஆண்டவனின் சேவைக்காகவும் பூரணமாக அர்ப்பணித்த தேவதாசிகளும் வரலாற்றில் இடம்பிடித்துள்ளனர். பரநாட்டியம் மதிக்கப்படும் கலையாக இன்று வளர்ந்து நிற்கின்றது. இப்பரத நாட்டியக் கலையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் டாக்டர் திருமதி ருக்மணிதேவி அருண்டேல் ஆவார்.

இலங்கையில் சதிர் ஆட்டம் என்றும் சின்னமேளம் என்றும் கூறியும் ஆடுபவர்களைச் சதிராட்டக் காரி என்று ஒருவகையான தாழ்வு மனப்போக்குடன் மக்கள் நோக்கிய காலத்தில், தமிழகம் சென்று முறையாகப் பரதநாட்டியத்தைப் பயின்று இலங்கை திரும்பிய இணுவில் ஏரம்பு சுப்பையா அவர்கள் எதிர்நீச்சல் போட்டு பிரபல்யமான கலையாக இலங்கையில் நிலைத்திடப் பெரும் பணியாற்றினார். அவரிடம் பரதம் பயின்ற மாணவிகள் இலங்கையின் பல பாகங்களிலும் நடன ஆசிரியர்களா மிளிர்கின்றார்.

இலங்கையின் புகழை உலகறியச் செய்த மேதை பல நாட்டிய நாடகங்களை ஆக்கி மேடையேற்றிவரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடனவிரிவுரையாளராகக் கடமையாற்றியவருமாகிய இணுவில் இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர் அவர்களால் பரத நாட்டியம் பெருமை பெற்றிருந்தது. இலங்கையில் பிரபல்யம் பெற்ற குறவஞ்சி நாட்டிய நாடகங்களான 'மயிலைக் குறவஞ்சி', 'நல்லைக் குறவஞ்சி,' 'திருக்கேதீஸ்வரர் குறவஞ்சி' ஆகிய வற்றை உருவாக்கிய பெருமையும் என். வீரமணி ஐயரையே சாரும்.

பாடசாலைகள், ஆசிரிய கலாசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்று பரந்த அளவில் கற்றல் பாடவிதானத்தில் பரதநாட்டியமும் சேர்க்கப்பட்டுள்ளமையால், பலர் அக்கலையைப் பயிலும் ஆர்வத்துடன் முன்வந்துள்ளார்கள். அதே வேளை சமூக அந்தஸ்தைப் பெற்ற நிலையில் தனியார் நடனப்பள்ளிகள் இலங்கையின் பல பாகங்களிலும் தோன்றிப் பெரும் சேவையை ஆற்றிவருகின்றன. அங்கு பயிலும் மாணவர்களின் அரங்கேற்றங்களும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இணுவிலைச் சேர்ந்த பிரபல மிருதங்க வித்துவான் சண்முகம் பிள்ளை நடன ஆசிரியை திருமதி விஜயலட்சுமி சண்முகம் பிள்ளை ஆகியோரின் மகளான கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் கடந்த முப்பதான்டு களாகப் பரதநாட்டியத் துறையில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறர். தமது தாயாரிடம் சிறுவயது முதல் பரதம் கற்ற வாசுகி அவர்கள், தமிழ்நாடு சென்று அடையாறு கே.லக்ஷ்மணன், திருமதி கௌரி முத்துக்குமாரசாமி, தஞ்சாவூர் ஸ்ரீமதி ஜெகதாம்பாள், கலைமாமணி ஸ்ரீ இராஜரத்தினம் பிள்ளை, ஸ்ரீமதி சாந்தா தனஞ்சயன் ஆகிய வல்லமை படைத்த பரத நாட்டிய மாமணி




தயங்கித் தயங்கி நிற்பவனை வாழ்க்கை ஒரு போதும் திரும்பிப் பார்ப்பதில்லை.

களிடம் முறையாகக் கற்று கலைத் துறையில் நிபுணத்துவம் பெற்றார்.

கலைத்துறைக்காகவே தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் சேவை யாற்றிவரும் கலாசூரி திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் 'நாட்டிய கலா மந்திர்' பல மாணவர்களுக்கு 'அரங் கேற்றம்' செய்துவைத்து புகழின் உச்சியில் உயர்ந்து நிற்கின்றது. அந்த

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் 06-03-2010 அன்ற மிகப் பிரமாண்டமான அளவில் செல்வி பிரண்ணியா ஜெயநாயகத்தின் அரங்கேற்றேம் நடைபெற்றது. இந்த 1000ஆவது அரங்கேற்ற நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக தமிழகத்தின் பிரபல நாட்டியமேதை பத்மபூஷணம் கலாநிதி பத்மா சுப்பிரமணியம் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.



**பிரதம அதிதி பத்மா சுப்பிரமணியம் கௌரவிக்கப்படுகின்றார்.**

வகையில் வரலாறு காணாத பெரு விழாவாக அண்மையில் 100 ஆவது அரங்கேற்றத்தை நிறைவேற்றி யுள்ளது. அந்தச் சிறப்புமிகு அரங் கேற்றத்திற்கு உரியவராக ஜெயநாகம் - சசிகலா தம்பதியினரின் செல்வப் புதல்வி செல்வி பிரண்ணியா பேறு பெற்றுள்ளார்.

கௌரவ அதிதிகளாக கொழும்பு பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலய தர்மகர்த்தா திரு.டி.எம். சுவாமி நாதனும் அவரது பாரியாரும் வருகை தந்திருந்தனர். சிறப்பு அதிதிகளாக கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் தந்தையார் கே.சண்முகப்பிள்ளை அவர்களும், அரங்கேற்ற நாயகி



**நாகரீகம் என்ற சொல்லுக்கு குசராத்தி மொழியில் நல்ல நடத்தை என்று பொருள்.**

செல்வி பிரண்ணியாவின் பேத்தியார் திருமதி கே. மனோன்மணி அம்மா ளும் பங்கேற்றமை விசேட அம்ச மாகும்.

'அரங்கேற்றம்' என்பது ஒரு நடனமாது தான் கற்கவேண்டிய பரத நாட்டிய உருக்கள் யாவற்றையும் கற்றபின் முதன்முதலாக அவையோர் முன் தனது ஆற்றலை வெளிக் காட்டுகின்ற நிகழ்வாகும். இந்த வகையில் செல்வி விரண்ணியாவின் அரங்கேற்றம் புஷ்பாஞ் சலியுடன் ஆரம்பமாகியது. குரு கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் நட்டுவாங்கம் செய்ய அணிசேர் கலைஞர்களாக, பாட்டு - சங்கித வித்துவன் அ.ஆரூரன், மிரு தங்கம் - இசைக்கலைமணி வி.ஜம்பு நாதன், வயலின் - இசைக் கலைமணி எஸ். திபாகரன், புல்லாங் குழல் - குமார லியனவத்த, தாளதரங்கம் ரட்ணம் ரட்ணதுரை ஆகியோர் செயற்பட்டனர்.

தொடர்ந்து விசேட அதிதியாக வருகைதந்திருந்த கொழும்பு பொன் னம்பல வாணேஸ்வரர் ஆலய தர்ம கர்த்தா திரு.டி.எம். சுவாமிநாதன் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். "ஆரம்பத்தில் இருந்து இந்த நட னத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிறேன். இந்தக் கலையில் முதன்மை பெற்றவராகிய பத்மா சுப்பிரமணியம் அவர்கள் இங்கு வருகை தந்திருப்பது மகிழ்ச்சி. இந்தியாவில் பல கோயில் களில் இந்த நடனம் ஆடப்பட்டு வந்தது. முதலில் தேவதாசிகள் கோயில்களில் ஆடிவந்தனர். அரசர் களும் இந்தப் பரதநாட்டியத்தை ஆதரித்து வந்தனர். தற்பொழுது இந்த நடனத்தை மேடைக்குக் கொண்டு வந்து பெருமைப்படுத்திக் கொண்டு வருகின்றனர். சிவதாண்டவத்தின் மூலம் அவர் உலகத்தை ஆட்டி வைக்கிறார். இங்கு சிவ வந்தனத் திற்குப் பெருமை சேர்க்கிறார்கள். இன்று நாட்டிய அரங்கேற்றம் செய்யும் பிள்ளை எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகிறார். திருமதி வாசுகி குருவாக இருந்து நடனத்தைச் சொல்லிக் கொடுக்க, அதற்குப் பிள்ளையின் பெற்றோர்களும் ஆதரவு கொடுக்கின்றனர்' என்றார்.

பத்மா சுப்பிரமணியம் அவர்கள் தமது உரையில் "நம் எல்லோரையும் அசத்திவிட்டார். அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அவருடைய முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் அவரின் பெற்றோர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இந்த அரங்கேற்ற நிகழ்ச்சியை மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்கமைத்துத் திறம்பட நடத்திக் கொண்டிருக்கும் குரு திருமதி கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் அவர்களை உங்கள் சார்பிலும், என்சார்பிலும் மனமார வாழ்த்துகின்றேன். இன்று நடைபெறும் 100ஆவது அரங்கேற்றம் சிறப்பாக அமைவதற்கு நல்ல முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். கலைத்துறை வல்லவரான தந்தையாரின் பாரம்பரியத்தில் வளர்ந்த வாசுகியை நினைக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. அவர் நூறு ஆண்டுகள் வாழ்ந்து, பல மாணவர்களுக்க அரங்கேற்றம் செய்ய வேண்டும். என்று வாழ்த்துகின்றேன்.

செல்வி பிரண்ணியாவுக்கு கடவுள் எல்லாம் வல்ல சக்தியையும் கொடுக்க வேண்டும். அரங்கேற்றத் துடன் மட்டும் இல்லாமல் தொடர்ந்து நடனத்தில் ஈடுபட்டப் பெருமை

யுடையவராக இருக்க வேண்டும்.

இலங்கையிலுள்ள திறமையான கலைஞர்களுக்கு முதல் முதலாக எமது நிறுவனம் பரிசில்கள் வழங்கத்தீர்மானித்துள்ளது என்ற செய்தியை இந்த மேடையில் அறிவிக்க விரும்புகின்றேன். இந்தியாவுக்கும் இலங்கைக்குமான பரிவர்த்தனை சிறப்பாக அமைய வேண்டும். எல்லோரும் ஒன்று சேர்ந்து நல்ல மாதிரியான முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். திருமதி வாசுகியை இலங்கையின் அமைப் பாளராகக் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள எண்ணியுள்ளோம். எல்லோருக்கும் நல்ல சமாதானத்துடனான எதிர்காலம் தோன்ற வேண்டுமென்று வேண்டுகின்றேன்” என்று தமது அதிதி உரையில் தெரிவித்தார்.

கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் உட்பட எல்லாக் கலைஞர்களுக்கும் கௌரவத்தையும் கேடயத்தையும் பிரதம அதிதி வழங்கிச் சிறப்பித்தார். நன்றியுரையை நடனமணி செல்வி பிரண்ணியா வழங்கினார். அதைத் தொடர்ந்து இறுதி நிகழ்ச்சியாக தில்லானா இடம் பெற்றது. ஒரு சிறப்பான அரங்கேற்றத்தைக் கண்டு களித்த மனநிறைவு எனக்கு ஏற்பட்டது.

-ராதா சிவசுப்பிரமணியம்.



## ‘தேசத்தின் பாச விழா’

மன்னர் மாநகரில் எல்லோர் மனதையும் தொட்ட விழா. தேசத்தாய் அறக்கட்டளையின் முதலாமாண்டு உலா. தேசத்தாயின் நேசமிகு இதயங்கள் திருமதி. M. வைரவமூர்த்தி MABL அவர்கள் (தலைவர். தேசத்தாய் அறக்கட்டளை) திருமிகு.B. சரவணன் B.Com அவர்கள் (நிர்வாக இயக்குனர்)

இவர்களின் மனிதநேய மகிழ்வால் ஏழைகளுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்த தங்கவிழாவில் தென் திரைவானின் இமயங்கள்,

திருமிகு. பாரதிராஜா அவர்கள், திருமதி P. சுசிலா அம்மா அவர்கள், திருமதி கவிச்சிற்பி சினேகன் அவர்கள், திருமிகு “வாழும் வள்ளல்” டாக்டர் A. ரவிச்சந்திரன் அவர்கள், திருமிகு “இளம் தொழிலதிபர்” A.D. பிச்சைமணி அவர்கள்.

இவர்களின் நிகழ்வால் புதுகை வரலாற்றில் பொன் எழுத்துக்களை பதித்துக்கொண்டது.



ஏமாற்றப் பழகத் தொடங்கும் போதே நம்பத் தகுந்த பொய்களைச் சொல்கிறோம்.

**கே.ஜி.மகாதேவா**

# ஈழப் பத்திரிகை உலகில் முத்திரை பதித்த 'ஈழநாடு'

ஈழத்தில், கொழும்புக்கு வெளியே தமிழ் சஞ்சிகைகள், சிற்றிதழ்கள், கையெழுத்துப் பிரதிகள் அவ்வப்போது தோன்றி மறைந் தாலும், ஒரு தமிழ்ப் பத்திரிகை தமிழ்ப் பகுதியில் ஆரம்பித்து தொடர்வதென்பது விஷப் பரீட்சை யாகவே நீடித்தது. இதனைத் தகர்த் தெறியும் நோக்குடன் முதலில், 'உதயதாரகை', 'இந்து சாதனம்' புறப்பட்டு, பின்னர் 'ஈழகேசரி' தொடர்ந்தாலும், வாரமாகப் பிறந்து, வாரம் இருமுறையாகி, இரண்டு ஆண்டுகளுக்குள் தினசரியாக மலர்ந்து, பத்திரிகை உலகில் காலடி பதித்த 'ஈழநாடு' ஒரு சகாப்தமாகும். இவ் வருட கால பயணத்தில் நடுநிலை செய்திப்பணியுடன் இலக்கிய சேவை யையும் வெற்றிகரமாகச் செய்து முடித்தது. 1929-ல் திருமகள் அழுத் தத்தை யாழப்பாணம் சுன்னாகத்தில் ஆரம்பித்து அடுத்த ஆண்டே 'ஈழ கேசரி' எனும் வாரம் இதழைத் தொடங்கி, அதன் ஆசிரியராகவும் பொறுப்பேற்ற நா. பொன்னையா அவர்கள் சைவத்திலிருந்து தமிழைப் பிரிக்க முடியாது என்ற நிலைப் பாட்டில் சமயக் கட்டுரைத் தொடர் களுடன் இலக்கியப் பணியையும் ஆரம்பித்து வைத்தார். இவரைத் தொடர்ந்து ஆசிரியர் பொறுப்பேற்ற சோ. சிவபாத சுந்தரம் அதனைத்

வகையில் வடக்கிலிருந்து முதலில் இலக்கியப் பணிக்கு தளம் அமைத்துக் கொடுத்த பெருமை, யாழ் சுன்னாகம் திருமகள் அழுத்தகம் 'ஈழகேசரி' நா. பொன்னையா அவர்களையே சாரும் என்றால், வடபகுதி மக்களின் இலக்கிய வளர்ச்சியுடன் அன்றாட செய்திப் பசியையும் தீர்த்து வைத்த புகழ், யாழ். தங்கராசா - சண்முக ரத்தினம் சகோதரர்களையே சென்ற டையும்.

'ஈழகேசரி' தனது இருபத் தெட்டு வருட சேவையில் ஒரு இலக் கியப் பாரம்பரியத்தை வளர்த்தது என்றால், 'ஈழநாடு' தனது முப்பது

தொடர்ந்து இராஜ அரியரத்தினம் (1944) ஆகியோர் தங்களது பார்வை யை இலக்கியத்தில் கூடுதலாக பதித்தன் பலனாக, ஈழத்தில் தரமான எழுத்தாளர்கள் அறிமுகமாக வழி பிறந்தது. எனது பத்திரிகை எழுத்தின் ஆரம்பமும், 'ஈழகேசரி' யில்தான் 1951-ல் தொடங்கியதை பெருமை யுடன் இங்கு குறிப்பிட வேண்டும். 'ஈழகேசரி' தனது பயணத்தை 1958-ல் முடித்துக்கொண்ட காலப்பகுதியில் தான் யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' உதயமாயிற்று. இதன் (வாரமலர்) ஆசிரியராக, முன்னாள் 'ஈழகேசரி' ஆசிரியர் இராஜஅரியரத்தினம்




பிறர் நாவை அடக்க முடியாது. ஆனால் அவர்களின் பேச்சுக்களை அலட்சியம் செய்ய முடியும்.

பொறுப்பேற்றுக் கொண்டார்.

பத்திரிகைத்துறைக்கு கௌரவமான வேறு இரண்டு பெயர்களும் உண்டு. ஒன்று மூன்றாது வகண், மற்றையது நான்காவது தூண்.

மனிதனுக்கு ஆறு அறிவு இருந்தாலும், பார்ப்பதற்கு, படிப்ப தற்கு கண்கள் இரண்டுதான். ஆனால், பத்திரிகைத்துறைக்கு மூன்றாவது கண்ணும் உண்டு. இதனை ஞானக்கண் என்றோ அல்லது நெற்றிக்கண் என்றோ சொல்லலாம். காரணம் (இந்தக் கண்,) விசேஷ தன்மை உடையது. சமுதாய நலனில் முக்கிய அக்கறை கொண்ட இந்தக் கண், எதனையும் ஊடுருவிப் பார்த்து இரகசியத் தகவல் களை வெளியிடுவதால், பத்திரிகைத்துறைக்கு மூன்றாவது கண் எனும் சிறப்பு உண்டு. இது தவிர, இத் துறைக்கு 'நான்காவது தூண்' என்ற பெருமையும் உள்ளது. எப்படி என்றால், ஜன நாயகத்தின் காவலர்களான, மக்கள் ஆட்சி அரசாங்கம், மக்கள் (நாடாளு) மன்றம், நீதி மன்றம் ஆகியவை முதல் மூன்று தூண்களாகவும், பத்தி ரிகைத்துறை நான்காவது தூணாகவும் அமைந்துள்ளது. ஜனநாயகக் கட்டிடத்துக்கு இந்த 'நான்காவது தூண்' மிகவும் சிறப்புடையது. பத்தி ரிகையாளனே, வரலாற்றை எழுதும் முதல் ஆசிரியன் என்று கூறப்படுகிறது. அதாவது ஒரு நிதிபதியின் பொறுப்பை, ஒரு பத்திரிகையாளன் மேற்கொள் கிறான் எனலாம்.

'நமது ஊரில் நமது மக்க ளுக்காக ஏன் ஒரு தமிழ்த் தினசரிப் பத்திரிகையை நாம் ஆரம்பிக்க கூடாது?' - கொழும்பு தலைநகரில் தொழில் பார்த்த ஓரிரு தமிழ் நெஞ்சங்கள் இப்படிப் கனவு கண்டன. காலத்தின் கட்டாயமாக, தமிழ்த் தினசரியை வடபகுதியில் ஆரம்பித்தே ஆகவேண்டிய அவசிய அவசரம் அன்று இருந்தது. கொழும்பில் கிழக்கிலங்கை காகித உற்பத்தி கூட்டு ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் - தலைவர் திரு.கே. சி. தங்கராசா அவர்களிடம் 1956-ல் துளிர்விட்ட இக்கனவு பலிக்க வித்திட்டது; 1958-ல் திட்டமிடப் பட்டு சிங்களவர்களால் தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட இனக்கல வரம்தான்!





கோபத்திற்குச் சிறந்த மருந்து தாமதித்தல்.

பத்திரிகை ஆரம்பிக்கும் விஷப் பரீட்சைக்கு கே.சி. தங்கராசா அவர்கள் தயாரானபோது அவருக்கு முக்கிய ஆலோசகராகவும் உறுதுணையாகவும் இருந்தவர் 'மலையக காந்தி' அமரர் கே. இராஜலிங்கம் என்பதை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். ஐம்பத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் - 1958-ல் தான் யாழ்ப்பாணம் வண்ணை சிவன் கோவில் மேற்கு வீதியில் சொந்தக் கட்டிடத்தில் 'ஈழநாடு' அச்சகம் நிறுவப்பட்டது. 'ஈழநாடு' முதல் (வார) இதழ் 1959 பெப்ரவரி மாதம் பதினொராம் திகதி வெளி வந்தது. இவ்விதமாகத்தான் 'நான்கா வது தூண்' என்ற பெருமையைப் பெற்றது யாழ். 'ஈழநாடு' தினப் பத்திரிகை.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்றான் வள்ளுவப் பெருந்தகை. ஈழத்தமிழரின் நாடித் துடிப்பறிந்து, அவர்தம் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்து தமிழர் பகுதியில், தமிழர்களால் ஒரு தமிழ்த் தினசரியை நடத்த முடியும் என்று சாதித்துக் காட்டியவர்கள், யாழ். வண்ணை. கே.சி. (தங்கராசா, சண்முகரத்தினம்) சகோதரர்கள்.

ஈழத்தின் மூத்த - முதல் தமிழ் வார இதழ் 'உதய தாரகை'யும் பின்னர் 'ஈழகேசரி'யும் தவழ்ந்துவந்த யாழ். மண்ணில்; 1959 பெப்ரவரி 11-ம் திகதி குழந்தையாக - வார இதழகாப் பிறந்து 1960-ல் வாரம் இருமுறையாக மலர்ந்து, 1961-ல் நாளேடாகப் பரிணமித்த 'ஈழநாடு'வுக்கு வரலாற்றுப் பதிவில் 2010-ல் ஐம்பது வயதாகிறது!... 'ஈழநாடு' ஆசிரியர் பகுதியில் நான் சேர்ந்ததும் 1961-ல் தான்.

செய்திகளில் மட்டுமின்றி, அரசியல், கலை, கலாசாரத்துறைகளிலும் தனித்துவமாக நின்று கட்சி சார்பின்றி சகல கருத்துக்களுக்கும் இடமளிக்கும் நடுநிலை பத்திரிகையாகப் பவனி வந்து, தமிழ்த் தேசிய இனத்தின் அபிமானத்தைப் பெற்று, அவர்களின் மேம்பாட்டையே இலட்சியமாகக் கொண்டு பணியாற்றிய 'ஈழநாடு'; குறுகிய காலத்துக்குள் கொழும்புக்கு வெளியிலிருந்து வெற்றிகரமாக பிரசுரிக்கப் படும் ஒரு தேசிய தினசரியாக முத்திரை பதித்தது. மக்கள் எதனை விரும்புகின்றார்கள் என்பதிலிருந்து விடுபட்டு, சமூகநலனுக்காக எதனை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று எழுதியது 'ஈழநாடு'! வெறும் விற்பனைக்காக 'மூன்றாம்தர' செய்தி இடம் பெறுவதை தவிர்த்து, ஒரு பண்பாட்டை அது வளர்த்தது.

'ஈழநாடு'வின் ஆரம்பகாலம் புதுப்பொலிவுடன் பத்திரிகை பவனி வந்தது, கொழும்பு தேசிய பத்திரிகை ஸ்தாபனங்களின் 'வயிறை' மட்டும் கலக்கவில்லை; சில சிங்கள அரசியல் வாதிகள் மத்தியில் சந்தேகங்களையும் உருவாக்கியது. 'ஈழம்' எனும் பெயர் தனி நாட்டைக் குறிப்பதாகவும், வடபகுதித் தமிழர்கள் முன்கூட்டி திட்டமிட்டே இந்தப் பெயரை பத்திரிகைக்கு சூடியிருப்பதாகவும் பல வியாக்கியானங்கள் அவர்கள் மத்தியில் எழுந்து, பாராளுமன்றம் வரை சென்று விட்டது. இந்த விஷயம் திரு. கே.சி. தங்கராசாவின் கவனத்துக்கு



மரணம் வருமுன்னே ஒரு கோழை பலமுறை இறந்து விடுகிறான்.

கொண்டுவரப்பட்டது. 'ஈழநாடு' வளர்ச்சிப் பணியில் அவ்வப்போது மாலை நேரங்களில் தங்கராசா வீட்டில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டங்களில் சேர்.கந்தையா வைத்தியநாதனின் மருமகன் பொன்னா விக்கினராசா, 'மலையக காந்தி' கே.இராஜலிங்கம். ஒரு நிறுவன முகாமையாளர் கணபதிப்பிள்ளை ஆகியோர் முக்கியம் இருப்பார்கள். இவர்களில் கே.இராஜலிங்கம் 'ஈழநாடு' முக்கிய ஆலோசகராக, தங்கராசாவுக்கு பக்கபலமாக இருந் திருக்கிறார். இதனை சில சந்தர்ப் பங்களில் 'தங்கர்' வெளிப்படை யாகவே சிலருக்கு கூறியிருக்கிறார். இந்த ஆலோசனையின்போது புதி தாக உருவான 'ஈழநாடு' பெயர் பற்றி இலக்கிய, சரித்திர ஆதார விபரங்கள் திரட்டப்பட்டு, 'ஈழம்' என்பது இலங்கையைத்தான் குறிக்கும் என்று நிரூபிக்கப்பட்டு, ஒரு தமிழ் எம்.பி. மூலமாக பாராளுமன்றத்திலும் விளக்கப்பட்டது. இதன் பின்னரே சிங்கள இனவாத எம்.பி.க்கள் 'ஈழ நாடு' பெயரை அடக்கி வாசித்தனர் என்பது பதிவு! 'மலையக காந்தி' அமரர் கே.இராஜலிங்கத்தின் 'ஈழ நாடு' பங்களிப்புத்தான்; 'ஈழநாடு' உதவி ஆசிரியராகப் பணியாற்றிய என்னை 1967-ல் நிறுவனர் ரா.மு.நாக லிங்கம் அவர்களின் மலையக 'செய்தி' வார இதழுக்கு (கண்டி) சில வருடங் கள் ஆசிரியர் பதவியில் அமர்த்தி, மலையகத்துக்கு சேவையாற்ற என்னை பணித்ததோ என்று இன்று எண்ணிப் பார்க்கின்றேன்.

அங்குமிங்குமாக சில செய்தி யாளர்களையும், அவர்கள் குரல் வரும் தொலைபேசி தகவல்களையும், வானொலியையும் மட்டுமே தொடர்பு சாதனங்களாக ஆரம்பத்தில் பெற்றி ருந்த 'ஈழநாடு' என்றதச் சேவை சீர் குலைந்தாலும், கொழும்புத் தினசரி களுக்குச் சவாலாக மக்கள் குரலாக எதிரொலித்தது.

திரு. ஹரன் ஐயாவின் அருமை யான 'ஈழநாடு' ஆசிரிய தலையங்கம் மற்றும் 'ஐயாறன்' பத்தியும் (கலம்) பாடசாலை, கல்லூரிகள் மட்டுமின்றி முக்கியமான அரசு உயர் அதிகாரிகள் மத்தியிலும் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தது. ஒரு நாள் யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியர் - மாணவர்க ளிடையே சந்தேகம் தலைதூக்கியது! தலையங்கத்தில் காணப்பட்ட ஒரு வார்த்தையில் எழுத்துப்பிழை ஏற் பட்டுவிட்டதாக சர்ச்சை. ஆனாலும் 'ஈழநாடு' பத்திரிகையின் ஸ்திரத் தன்மையைக் கருத்தில்கொண்டு அந்த வார்த்தை சரிதான் என்று உறுதி செய்து, 'ஈழநாடு' வின் நம்பகத் தன்மைக்கு சான்றிதழ் கொடுத்தனர். உண்மையில் 'அச்சுப்பிசாசு' தனது ஆதிக்கத்தைச் செலுத்தி அந்த எழுத்துப்பிழையைத் தோற்றுவித் தாலும், 'ஈழநாடு' பிழைவிடாது என்ற நம்பிக்கை மக்கள் மனதில் அன்று வேரூன்றி இருந்தது என்ப தைச் சுட்டிக்காட்டவே இதனைக் குறிப்பிடுகின்றேன்! இப்படியான எழுத்துப்பிழை 'ஈழநாடு' வில் மாதத்துக்கு ஒருமுறை ஏற்படுவது கூட அபூர்வம். ஆனால் இன்றையத் தினசரிகளில் எழுத்துப்பிழை 'அவசி யம்' எனும் நிலைக்குத் தள்ளப்பட்டு, வார்த்தையையும் அனர்த்தமாக்கி விடும். 'ஈழநாடு' நீண்டகால சேவைக் குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் தாய்த்

தினசரியைத் தொடர்ந்து பல பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கால வெள்ளத்தை தாக்குப்பிடிக்க முடியாமல் மூன்று தினசரிகளே இன்றும் யாழ்ப்பாணத்தில் தொடராக வந்து கொண்டிருக்கிறது.

குறுகிய காலத்தில் 'ஈழநாடு' துரிய வளர்ச்சிகண்டு, கொழும்பு பத்திரிகைகளுக்கே சவாலாகி, முதன்மை செய்திகளை வெளியிட்டு வாசகர்களின் நிரந்தர இடத்தைப் பிடித்துக்கொண்டதை மறைக்க முடியாது. 1961-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசு கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில், 'ஈழநாடு' பல பதிப்புகளை தினசரி வெளியிட்டு வாசகர்களின் செய்திப் பசியைத் தணித்தது ஒரு வரலாற்றுப் பதிவு என்றால்;

1981-ல் ஐ.தே. கட்சியின் இரண்டு அமைர்களின் நேரடி மேற்பார்வையில் 'கமண்டோ'க் கள் 'ஈழநாடு' அலுவலகத்தை 'பெற்றோல்' குண்டுகள் வீசி முற்றாக எரித்து சாம்பலாக்கிய நிலையில், அடுத்த ஒரு வாரத்திலேயே யாழ். கே.கே.எஸ் வீதியிலுள்ள கலாநிலைய பதிப்பகத்திலிருந்து 'பீனிக்ஸ்' பறவை மாதிரி 'ஈழநாடு' புனர்ஜென்மம் எடுத்ததும், 1988ல் விடுதலைப் புலிகளின் குண்டுவைப்பில் 'ஈழநாடு' மீண்டும் தரைமட்டமாகி ஓராண்டின் பின்னர் வெளிவந்ததும், தினசரிப் பத்திரிகை எதற்கும் ஏற்பட்டிராத அனுபவம் என்று வரலாறு சொல்லும்.

11-2-1959 திகதியிட்டு வெளியான 'ஈழநாடு' முதல் (வார) இதழை யாழ் கொழும்புத்துறை யோகசுவாமிகளிடம் வழங்கி ஆசிபெற 'சே.சி.' சகோதரர்களுடன் ஆசிரியர் இராஜ. அரியரத்தினமும் அதிகாலை நான்கு மணியளவில் சென்றபோது யோக முனிவர்..." ஏசுவார்கள், எரிப்பார்கள், உண்மையை எழுதுங்கள். உண்மையாக எழுதுங்கள்..." என்று சொன்னார். அப்படியே நடந்துவிட்டது. ●


**இனிய நந்தவனம் மாவட்டப் பொறுப்பாளர்கள்**

**திருச்சி**
**கவிஞர் தமிழ்பாலா**
**93452 94645**

**தஞ்சாவூர்**
**இராம. சந்திரசேகரன்**
**90943365644**

**கிருஷ்ணகிரி**
**கதிர்பாரதி**
**98497 24673**

**திருவாரூர்**
**விஜயபாலன்**
**98659 41344**

**இதேபோல மற்ற மாவட்டங்களுக்கும் பொறுப்பாளர்கள் தேவை ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்:**
**96003 63511**




**சகோதரர்களாக இருங்கள், ஆனால் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள்.**

# சந்ததி நோக்கிய சிந்தனை



ஐக்கியத்தில் - நாம்
ஐக்கியம் வைப்போம் - அதன்
சௌக்கியத்தை - பின் உணர்வோம்!
வேண்டும் சகோதர..
சகோதரியே - வேண்டும்!
எம்மில் ஐக்கியம் - அதில்
மாண்டிடச் செய்வோம் பேதமையை!

ஒன்றுபட்டால் - தான்
உண்டு வாழ்வென்று
தினம் தினம் ஓதினாலும் - அது
சாத்தானின் - குரலாக
எண்ணியோ - என்னவே
தொலைக்கப் பட்ட தொன்றாகவே
எம்மவரில் - உள்ளது
இஃதுவினால்
ஐக்கியமென்ற - வஸ்த்து
எட்டாக் கனியாகவே!
உள்ளது இன்று - வரையில்

இல்லங்களில் இல்லையே!
முதலில் - நல்லுறவு!
உள்ளமதில் வரவேண்டும்
உறவுகளுடன் புரிந்துனர்வு
குறை குற்றங்கள்
மன்னித்து கபளீகரம்
செய்யப் படவேண்டும்
அப்போது எழுமே
மனையில் ஆனந்தமே - நிதம்
தாண்டவ மாடுமே!

அயலவர்களையும்
அரவணைத்து
செயற்படுவோம்
அதில் கூட்டுறவு
கொப்பளிக்குமே!
குதூகலமாக - உயிரோடு
ஒன்று சேர - தங்க
தேரோடுமே
இங்கிதமாக!

திசை வாழ்வோர்
வசை பாடாத
இசைவாக - நம்மோடு
இணைந்தால் - பிரதேச
வாதமென்ற வாதநோய்
களையப் பெற்று
தரணியில் திடமாகவே
கால்பதிப்போம்

'ஓரினத்தான்'என்று
சங்கநாதம் - செய்து
சகலரும் ஒன்றாய்!
கரத்தோடு கரங்கள்
பிணைப்பில்
கசிந்துருகி கனிவாக
உறஉணர்வோடு!

பின்னர் நிசமாகவே (நிஜமாகவே)
"ஒற்றுமையில்லா
இனத்தான்" -என்ற
வரையப்படாத
வசைமொழி
திசை தெரியாமல்
தூர ஓடிடுமோ!

இங்கு, அங்கு
எங்கு சீவித்தாலும்
கன்னல் மொழி பேசும்
நாமெல்லாம்
ஒரு தாய் தொப்புல்
கொடி உதித்த
இரத்தத்தின் - இரத்தங்களே!
என்ற எண்ணம்!
மெதியத்தில் - ஆணி
கொண்டு அடித்து
அடித்திட்டால்
தேடி வருமா?
பிரிவினை வாதம்
அகிலம் உள்ள - வரை

"மூத்தக்குடியோன்"
முத்திரைகுத்தப்பட்ட - நாம்
இதய சுத்தியோடு
பிரகாசமான - எமது
எதிர்கால - சந்ததியை
மனதிற் கொண்டு
கருத்தொருமித்து
இணையும் நாளை
எண்ண ஏங்கிக் கொண்டிருக்கிறேன்
சகோதர சகோதரியே!
இப்போதே விதைத்துக்
கொள்வோம் - ஒற்றுமை
விதையை
ஒருவருக் கொருவராய்
ஒன்று பட்டு! அன்பினால்!!
வென்று திகழ,
நன்றே!

செல்வம் விஜயகுமார்.
இலங்கை



வெளியே வருவதற்குரிய வழியைத் தெரிந்து கொண்ட பின் உள்ளே நுழை.

# சவால்களுக்கிடையே வாழும் சமூகம்

ஈழத்து படைப்பாளிகளில் மிக முக்கிய மானவரும் சிறந்த நாவலாசிரியருமான செங்கை ஆழியான் அவர்களுடன் இலங்கைச் சிறப்பிதழுக்காக ஒரு நேர்காணல்.

**உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்?**

நான் 1947 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தவன். எனது தந்தை ஒரு சாதாரன வியாபாரி அதாவது சந்தையில் சாக்குவிரித்து வியாபாரம் செய்யும் வியாபாரி. அப்படிப்பட்ட நிலையில் ஆரம்பத்தில் இருந்தே என்னுடைய தந்தையார் எனது கல்வியில் மிகவும் கவனம் செலுத்தி வந்தார். என்னோடு பிறந்தவர்கள் எட்டுப்பேர் நான்தான் கடைசி. என்னுடைய அண்ணன் ஒரு ஆசிரியர் சிறந்த பேச்சாளரும் கூட. கம்யுனிஸ்ட் கட்சியின் முக்கிய புள்ளியாக இருந்தார். நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்தான் படித்தேன்.




**இலக்கிய ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது?**

என்னுடைய அண்ணன் வந்து ஒரு சிறுகதை எழுத்தாளர். அவர் "ஆனந்தம்" என்ற பத்திரிக்கையையும் நடத்தினார். அதனால் அவரைப் போல எழுத்தில் எனக்கும் ஆர்வம் வந்தது.



எல்லோரும் தம்மை விட்டுவிட்டு எதையெதையோ சீர்செய்ய எண்ணுகிறார்கள். தாகூர்



அதே போல எனக்கு நிறைய வாசிக்கும் பழக்கமும் இருந்தது. தமிழ் நாட்டில் வெளியா கின்ற அத்தனை சஞ்சிகைகளும் எங்கள் வீட்டுக்கு வரும். எனது அண்ணன்தான் அவற்றை எல்லாம் வாங்குவார். எங்கள் வீட்டில் ஒரு நூலகமே இருந்தது. நான் கல்லூரியில் படித்த போது எனது தமிழாசிரியர் ஈழத் துறவி அவரும் ஒரு எழுத்தாளர் ஆனந்த விகடன் நடத்திய நாடகப் போட்டியில் பரிசு பெற்றவர் அவர் எனக்கு ஆசிரியராக வந்ததால் இயல் பாகவே என்னையும் எழுத்தாளனாக்கி விட்டார்.

**➲ நீங்கள் எழுதத்தொடங்கிய சூழல் பற்றிச் சொல்லுங்கள்?**

நான் எழுதத் தொடங்கிய காலம் வந்து ஒரு புத்திலக்கியம் உருவான காலம் என்று சொல்லலாம். 1963க்குப் பிறகு அந்தக் காலகட்டத்தில் உரு வான எழுத்தாளர்கள்தான் ஈழத்து முன்னனி எழுத்தாளர்களாக இருக்கி றார்கள், என்று சொல்லலாம். ஏனென்றால் நாங்கள் தான் முதன் முதலாக சுய மொழியில் அதாவது தமிழில் கல்வி கற்பவர்களாக இருந் தோம். ஆகையால் எங்களின் சிந் தனைத் திறன் வந்து சிறப்பாக இருந்தது. அது ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் இடைப்பட்ட காலமாக இருந்தது. ஆங்கிலத்தில் நல்ல பரிச்சிய மும் இருந்தது. ஆகையால் ஆங்கில நூல்களைப் படித்து பல்வேறு விதமான கருத்துக்களை புரிந்து கொள்ளக்கூடிய நிலையும் இருந்தது. அதனால் அந்தக் காலகட்டத்தில் செம்பியச் செல்வன், யோகநாதன், கதிர்காம நாதன், துருவன், குந்தவை மௌனகுரு இப்படி பெரிய இலக்கிய கூட்டமே உருவானது, இன்றைக்கும் அவர்கள்தான் ஈழத்தின் முன்னனி எழுத்தாளர்களாக இருக்கிறார்கள்.

**➲ நீங்கள் முதன் முதலாக எழுதியது பற்றிச் சொல்லுங்கள்?**

நான் முதன் முதலி உரைநடை யில்தான் எனது எழுத்தைத் தொடங்கி னேன். அதன் பிறகுதான் சிறுகதைகள் எழுதினேன், கவிதைகளில் எனக்கு அவ்வளவு பரிசையம் இல்லை. பிறகு குருநாவல், நாவல்கள் எழுதினேன்.



உண்மையைச் சொல்வதுதான் உலகிலேயே மிகப்பெரிய நகைச்சுவை. - பெர்னாட்சா.

இன்றைக்கும் நான் பல்வேறு சிறு கதைகள் எழுதியிருந்தாலும் ஈழத்தைப் பொறுத்தவரையில் நாவலாசிரிய ராகத் தான் என்னை அடையாளப் படுத்துகிறார்கள்.

**➲ உங்களின் கதைகளை கற்பனையாக எழுதுவீர்களா? அல்லது உண்மைச் சம்பவங்களை மையப்படுத்தி எழுது வீர்களா?**

கற்பனையில் கதை எழுதுவதில் அவ்வளவாக எனக்கு நாட்டம் இல்லை. எங்களுடைய சமூகத்தில் அல்லல் படுகின்ற மக்களின் துயரங் களைத்தான் கதைகளில் முன்வைக்க வேண்டும் என்று ஆரம்பத்திலேயே முடிவு செய்து விட்டதால் எங்களுக்கு ஒரு சமூகப்பார்வை வந்துவிட்டது. 60 களில் இருந்த ஏற்றத்தாழ்வுகளும் எங்கள் கதைகளில் இடம்பிடிக்கத் தொடங்கி விட்டன. அதாவது சாதியம், வறுமை, வரதட்சனை கொடுமை, இவைகள் கதைகளில் இடம்பிடித்தன பிறகு படிப்படியாக எங்களுடைய கதைகளில் இனரீதி யாக அல்லல்படும் மக்களின் துயரங் களை எங்கள் கதைகளில் பதிவு செய்தோம், இலங்கையைப் பொருத்த வரையில் பேரின வாதத்தின் தலையீட்டினால், மார்சிஸ்டுகள் வந்து அதைக் கைவிட்டு தாங்களும் ஒரு இனவாதிகள் என்று காட்டிக் கொண்டதால் நாங்களும் மாற வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதனால் அந்த போராட்ட சூழல்கள் பற்றிய கதைகளை நாங்களும் எழுத வேண்டிய சூழல் ஏற்பட்டது.

**➲ நீங்கள் ஒரு அரசு அதிகாரியாக இருந்து கொண்டு எப்படி இனரீதியான கதை களை எழுத முடிந்தது.**

உண்மையைச் சொல்லப் போனால் நாங்கள் நித்தமும் சவால் களுக்கிடையே வாழக்கூடிய சமூகம் தான் இருந்தோம், ஆகையால் எங்க ளுடைய கதைகளில் சவால்களை எதிர்கொள்கின்ற கருத்துக்கள் வரும் என்னுடைய "இரவு நேரப் பயணி கள்" என்ற சிறுகதைத் தொகுதியில் முற்றுப் முழுதாக எங்களுடைய அவலங்களைத்தான் பதிவு செய்தேன். அதில் போராட்டத்தை கொச்சைப் படுத்தவில்லை, அதே நேரத்தில் போராளிகளுக்கு வலுசேர்க்கிற விதமாகவும் இல்லை. அதை ஒரு சமூக அக்கறையுடன் போராட்டத்தால் தமிழ் மக்கள் பட்ட அவலங் களைத்தான் பதிவாக்கினேன், அதாவது ஆயுதம் தரித்தவர்களால் இது போராளிகளாக இருந்தாலும் சரி இராணுவமாக இருந்தாலும். இவர்களுக்கு இடையில் மக்கள் அவளங்கலைத்தான் எழுதினேன்.

**➲ தங்களின் தற்போதைய நிலைகுறித்து சொல்லுங்கள்?**

தற்போதும் நான் யாழ் பாணத்தில்தான் இருக்கிறேன் யாழ் இலக்கிய, வட்ட தலைவராக இருந்து கொண்டு பல இலக்கிய நிகழ்வுகளைச் செய்து வருகிறேன் வளர்ந்து வரும் இளைய தலைமுறை எழுத்தாளர் களுக்காக என்னுடைய ஆலோசனை களையும் வழங்கி வருகிறேன்.

- சந்திப்பு : நந்தவனன்.

ஆண்டுக் கட்டணம்
ரூபாய் **120** மட்டுமே.
அனுப்பி விட்டீர்களா...




**மிகவும் அபாயகரமான சமயங்கள் வெற்றியின் போதுதான் வருகின்றன. - நெப்போலியன்.**

# ஜேர்மனி மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு விழா

ஜேர்மனி டியூஸ்பேர்க் நகரிலிருந்து வெளிவரும் "மண்" கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு விழாவும் சிறுவர் கலைவிழாவும் கடந்த 17-04-2010 சனிக்கிழமை டியூஸ்பேர்க் நகரில் வெகுசிறப்பாக நடைபெற்றது. ஜேர் மனியிலிருந்து வெளியாகி உலகப் பரப்பெல்லாம் சென்றடையும். "மண்" சஞ்சிகையானது கலை இலக்கிய எழுத்துப் பணிகளுடன் நின்றுவிடாது தாயக நலிவுற்ற மக்களுக்காகவும் சமூகப்பணியைக் கடந்த பல வருடங்களாகச் செய்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கவதால் இவ்விழா ஒரு காலத்தின் தேவை எனக்குறிப்பிடலாம். தமிழர் புலம்பெயர் ஐரோப்பயி நாடுகளிள் 1990 - 1995 காலப்பகுதிகளிள் சுமார் முப்பது சஞ்சிகைகள் வெளிவந்தன. பின்னர் தமிழ் பத்திரிகைகள் வானொலிகள் தோற்றம் பெற்றதாலும் வேறுபல காரணங்களாலும் அனைத்துச் சஞ்சிகைகளும் நின்றுபோகவே "மண்" என்னும் இச்சஞ்சிகை தொடர்ச்சியாக இருபது வருடங்களாக ஐரோப்பாவில் வெளிவந்து சாதனைபடைத்திருப்பது பெருமைக்குரிய விடையமாகும்.

"மண்' சஞ்சிகை 1வது, 3வது, 5வது, 7வது, 10வது 15 வது ஆண்டு நிறைவுவிழாவையும் இந்த மண்ணில் கொண்டாடியதுடன் 20வது ஆண்டு நிறைவு விழாவையும் கடந்த 17-04-2010ல் மண்டபம் நிறைந்த மக்களுடன் ஒரு கலை இலக்கிய விழாவாகக் கொண்டாடி தமிழுக்கும் தமிழினத் துக்கும் பெருமை சேர்த்துள்ளது. மதியம் 1 மணியளவில் மாணவ மணிகளின் பேச்சுப்போட்டி, பாடல் போட்டிகள் நடைபெற்றது. 5 வயதி லிருந்து 18 வயது வரையிலான மாணவமணிகளிடையே ஐந்து பிரிவுகளாக இடம் பெற்ற போட்டிகளில் நூற்றுக்கணக்கான மாணவ மணிகள் பங்குகொண்டு தாய் மொழியாம் தமிழுக்குப் பெருமை சேர்த்தனர். ஏற்கனவே இந்த ஐந்து பிரிவினரிடையே உறுப்பெழுத்துப் போட்டி. ஓவியப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி என்பனவும் இடம் பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடையமாகும்.





எல்லாம் வேடிக்கைதான், உனக்கு நடக்காமல் மற்றவர்களுக்கு நடக்கும் வரை. - வில்ரோசர்சு.

## சிறுகதை...

# கடவுளின் பிள்ளைகள்.

மனோகரன் வாத்தியார் முன் வராந்தாவில் சாய்மனைக் கதிரையில் அமர்ந்து வீரகேசரி பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தார்.

நித்திரையில்லாத சோர்வு அவர் முகத்தில் தெரிந்தது. மனைவி பூப திக்கு 'டெங்கு' காய்ச்சல் வந்து ஒரு வாரத்திற்கு மேலாகிவிட்டது. தனியார் மருத்துவமனையில் ஒரு வாரமாக இருந்து விட்டு வந்த மனைவியை இந்த வயதிலும் நித்திரை கொள்ளா மல் அருகிலேயே இருந்து கவனமாகப் பார்த்து வந்தவர் வாத்தியார்.

ஒரு மாதத்தில் முன்னூற்றி அறுபது பேரைக் காவு கொண்டிருந்தது இந்த டெங்கு காய்ச்சல்.

பூபதியை நேரத்திற்கே தாமத மில்லாமல் டொக்ரரிடம் கூட்டிச் சென்று காட்டியதால் பூபதி அம்மா வைக் காப்பாற்றக் கூடியதாக இருந்த தாகக் டொக்ரர் சொன்னார்.

"காய்ச்சலுடன் மூட்டு உளைவு, உடம்பின் தோளில் எங்காவது சின்னச் சின்ன சொறி மாதிரி அடையாளங்கள் காணப்பட்டால் அதுதான் டெங் ககாய்ச்சலுக்கு அறிகுறி" என்று ஒரு முறை டொக்ரர் சொன்னது வாத்தியாருக்கு ஞாப கத்தில் இருந்தத. அதனால் காய்ச்சல் வந்ததுமே வீட்டில் இருக்க விடாமல் டொக்ரரிடம் கூட்டிச் சென்று காட்டினார்.

ஒரு வார காலமாக மனைவிக்கு அருகிலேயே இருந்து அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தனியறையில் மனை வியை இரவு பகலாக கவனித்த களைப் பும், நித்திரையின்மையும் அவரையும் நன்றாக வாட்டியிருந்தது.

பத்திரிகையை வாசித்துக் கொண்டு இருந்த வாத்தியாரை, பட லையைத் திறக்கும் சத்தம் தடுத்தது. நிமிர்ந்து மூக்கு கண்ணாடியினூடாக படலைப் பக்கம் பார்த்தார் வாத்தி யார்.

அவரது பழைய நண்பன் சிவ லிங்கம் வருவது தெரிந்தது.

"வாங்கோ" என்று வரவழைத்த வண்ணம் வாசற்பக்கம் போனவர் சிவலிங்கத்தின் கைகளைப் பிடித்து உள்ளே கூட்டி வந்து தனக்கு அருகில் போடப்பட்டிருந்த கதிரையில் இருக்க வைத்தார்.

சிவலிங்கத்திற்கு எழுபது வய துக்கு மேலே இருக்கும். ஆனால் இன்னமும் கம்பீரமாகக் காணப் பட்டார்.

"எப்படி மாஸ்டர் இருக்கி றீர்கள்" சிவலிங்கம் கேட்டார்.

மனோகரன் வாத்தியார் சிரித்து விட்டு "காலம் ஓடுகிறது. காலத்துடன் சேர்ந்து நாமும் ஓடிக் கொண்டிருக்



நெருங்கிப் பழகும்போது, வெகு சிலரே மதிப்பிற்கு உரியவர்களாகிறார்கள்.

## வவுனியூர் இரா.உதயணன்

கிறோம். நாட்கள் நிற்காது. ஆனால் நாம் ஒருநாள் இயக்கமற்று நின்று விடுவோம்"

சிவலிங்கமும் சிரித்துக் கொண்டே தலையாட்டினார். "வயது போகப் போக இன்னும் எவ்வளவு காலம் வாழப் போகிறோமோ என்ற ஒரு உணர்வு அடிக்கடி மனதில் தோன்றுகிறது."

"பூபதி அம்மா எங்கே?" சிவ லிங்கம் கேட்டார்.

'அவ இப்பத்தான் டெங்கு காய்ச்சலில் இருந்து விடுபட்டு வரு கிறா" மனோகரன் வாத்தியார் சொல்லிவிட்டு சிவலிங்கத்தைப் பார்த்தார்.

"மாஸ்டர் நீங்கள் டெங்கு காய்ச்சல்பற்றி கேள்விப்பட்டிருப் பீர்கள் என்று நினைக்கிறேன்" சிவ லிங்கம் இழுத்தார்.

"ஓம் சிவலிங்கம் அதன் விளைவு களும், பாதிப்புகளும் பற்றி எனக்குத் தெரியும்"

மனோகரன் வாத்தியார் எழுந்து சிவலிங்கத்தைக் கூட்டிச் சென்று பூபதி அம்மாவைக் காட்டினார். பூபதி அம்மா சிரித்து விட்டு படுத்திருந் தாள்.

"என்ன சிவலிங்கம் நீண்ட காலத்தின் பின் இந்தப் பக்கம்?" மனோகரன் வாத்தியார் கேட்டார்.

"மாஸ்டர் நான் இந்தச் சிவன் கோவில் பக்கம் போன இடத்தில், அருகிலைதான் அநாதைப் பிள்ளை களை வளர்க்கிற ஆசிரமம் இருப்ப தாக சொன்னவையள். நானும் போய்



அந்தப் பிள்ளை களைப் பார்ப் பம் என்று போனனன். இந்தப் போர் நடந்து கொண்டி ருக்கேக்கை தப்பி வந்த பிள்ளைகளில் கன பிள்ளைகளை அங்கதான் வளர்க் கினம்"

"பாவங்கள் இந்த உலகமறியாத சின்னஞ் சிறுசுகள் வாழ்க்கையின் துவக்கக் கட்டத்திலேயே இந்தப் பிள்ளைகளின்ரை வாழ்க்கை கேள் விக்குறிகளாக..." சிவலிங்கத்தின் குரலில் சோகத்தின் அதிர்வை உணரக் கூடியதாக இருந்தது.

"என்ன சிவலிங்கம் ஏறக்குறைய எத்தனை வயதுப் பிள்ளைகள்?"

"எப்படி மாஸ்டர் சொல்கிறது. ஒரு மாதக் குழந்தையிலிருந்து ஏறக் குறைய பதினைந்து வயதுப் பிள்ளை கள் வரை அங்கே இருக்கிறார்கள். இந்த உலகத்தை மறந்து ஓடித் திரிந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கை என்பதன் அர்த்தத்தை புரிந்துக் கொள்ள முடியாத வயதுப் பிள்ளைகளுக்கு, இந்தப் போர் உளரீதியாக அவர்களைப் பாதித்தி ருக்கும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. தாயிடம் பால் குடிக்காத எத்தனை சின்னஞ் சிறுசுகள். நான் அவர்களைப் பார்க்கப் போனபோது சில பிள்ளைகள் என்னிடம் ஓடி வந்தார்கள்."

"மாமா சொக்லேட் கொண்டு வந்தீங்களா" என்று கேட்ட வண்ணம் ஒரு பையன் என் கைகளைப் பற்றிக் கொண்டான்.

அப்பொழுதுதான் கையிலே



மனிதன் பறக்கக் கற்றுக்கொண்டான். பசி, பட்டினியின்றி வாழக் கற்றுக் கொள்ளவில்லை.

அந்தப் பிள்ளைகளுக்கு கொடுக்க ஒன்றும் கொண்டு செல்லாமல் போய் விட்டோமே என்ற உணர்வு என்னைத் தாக்கியது. மனது வெறும் கையுடன் வந்ததை நினைத்து அழுதது. "தம்பி நாளைக்கு பிள்ளைக்கு சொக்லேட் வாங்கிக் கொண்டு வாறன்" என்று சொல்லி திருப்திப்படுத்தினேன்.

"ஏறக்குறைய எத்தனை பிள்ளை கள் அங்க இருப்பினம்" மனோகரன் வாத்தியார் ஆவலுடன் கேட்டார்.

"ஆண்பிள்ளைகள், பெண் பிள்ளைகள் எல்லாமாகச் சேர்த்து ஏறக்குறைய இருநூற்றி ஐம்பதைத் தாண்டும் மாஸ்டர்"

"எல்லா பிள்ளைகளுமே பெற் றோரை இழந்த பிள்ளைகளா?"

"ஓம் மாஸ்டர், எல்லாம் பிள்ளைகளும் பெற்றோரை இழந்த அநாதைகள்தான். அநாதைகள் என்று சொல்வதை விட கடவுளின் பிள்ளை கள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் பிள்ளைகளைப் பார்க்க வென்று பணியாட்கள் வேலை செய் கிறார்கள். அவர்கள் மிக அன்பாக இந்தப் பிள்ளைகளைப் பார்த்து வருகிறார்கள்"

அந்தச் சிவன்கோயிலில் இருந்து வரும் வருமானத்தில்தான் இந்தப் பிள்ளைகளைப் பராமரிப்பதாகக் கேள்விப்பட்டேன். அதைவிட பல வியாபார ஸ்தாபனங்களும் உதவி செய்வதாகச் சொன்னார்கள்.

"மாஸ்டர் எனக்கு அந்தப் பிள்ளைகளை விட்டிட்டு வர முடிய வில்லை" சொல்லும் போது சிவ லிங்கத்தின் கண்கள். கலங்கிவிட்டன.

"அந்தப் பிள்ளைகளில் ஒரே குடும்பத்தைச் சேர்த் சகோதரனும், சகோதரியும் அங்கே இருக்கிறார்கள்." மனோகரன் வாத்தியார் பார்வையை சிவலிங்கத்தின் மேல் செலுத்திய வண்ணம் ஆவலாக சிவலிங்கம் சொல் வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"நான்கு வயது சிறுமியின் பெயர் துவாரகா. மூன்று வயதுச் சிறுவனின் பெயர் துவாரகன். அந்த இரண்டு பிள்ளைகளையும் பணி யாட்களில் ஒருவர் எனக்கு அறி முகப்படுத்தினார். நல்ல விவேகமுள்ள சகோதரர்கள்" என்று அவர் எனக்குச் சொன்னார்.

"மூத்தவள் துவாரகா எனது கைகளை இறுகப் பற்றிக் கொண் டாள். இளையவன் துவாரகன் என் மடியில் ஏறி இருந்து கொண்டான்"

"ஒரு கணம் எனது நெஞ்சு வலித்தது. இந்தப் பிள்ளைகளுக்கு இப்படி ஒரு நிலை தேவையா? இந்தப் பிள்ளைகளின் பெற்றோரைப் போர் காவு கொண்டு விட்டது. இப்படி இன்னும் எத்தனை அநாதைகள். நமக்குத் தெரியாத அநாதைப் பிள்ளை கள் அந்த வேலிக் கம்பிகளுக்குப் பின்னால் நின்று இதுதான் உலகம் என்று நம்பும், சின்னஞ்சிறு கடவு ளின் பிள்ளைகள்"

துவாரகனைப் பார்த்து "அம்மா எங்கே" என்று கேட்டேன்.

"சாமியிட்டை போயிட்டா"

"அப்பா எங்க"

"அவர் அம்மாவோட போயிட் டார்"

என் உடம்பு வியர்த்து நடுங்கி யது. இதுவரை நடுக்கம் காணாத எனது கால்களில் ஒரு நடுக்கம். வாழ்க்கையை முழுமையாக அனுப வித்து விட்ட எனக்கு இந்தப்



மண்ணால் செய்த சாமி ஆற்றைக் கடக்கும்போது தன்னையே காத்துக் கொள்ள முடியாது.

பிள்ளைகளின் வார்த்தைகள் ரண மாக எனது இதயத்தை தைத்தது.

"மாமா" துவாரகா என்னைக் கூப்பிட்டாள்.

"என்ன பிள்ளை" நான் கேட் டேன்.

"மாமா நானும் தம்பியும் உங்க ளோட வரட்டா"

என் கைகள் அவளை இறுக அணைத்துக் கொண்டன. கண்கள் கலங்கிவிட்ட நிலையில் அழ முடி யாத துர்ப்பாக்கியசாலியாக நான் அமர்ந்திருந்தேன்.

வாழ்க்கையே எனக்கு வெறுத்தது. கையாலாகாதவன் போன்ற உணர்வு என்னை வதைத்தது.

"பிள்ளை நான் இப்ப கிழவன். உங்களை நான் எப்படி பார்க்க முடி யும்?"

"நாங்கள் உங்களைப் பார்க்கிறம் மாமா" துவாரகா சொன்னாள்.

நான் அழுதே விட்டன். பூட்டி வைத்திருந்த உணர்ச்சிகள் என்னை யறியாமல் கண்ணீர்த் துளிகளாக காதோரம் வழிய ஆரம்பித்தன.

"கடவுளே இது நியாயமா?" என் மனம் கடவுளைக் கேட்டுக் கொண் டது. பணியாட்கள் வந்து நேரம் போய் விட்டதாகச் சொன்னார்கள்.

நான் மடியிலிருந்த துவாரகனை எழுப்பி துவாரகாவின் பிடியிலிருந்து விலக, "மாமா நாங்களும் உங்களோட வரப்போறம்" துவாரகன் என் கால் களை இறுகப் பிடித்துக் கொண் டான். துவாரகா நான் போட்டிருந்த சேர்ட்டின் தலைப்பை பிடித்துக் கொண்டாள் இருவரும் அழுதார்கள்.

"மாமா நாங்களும் வரப் போறாம்" நானும் அழுதேன். பாசத் திற்காக ஏங்கும் அவர்களைப் பார்த்து நானும் அழுதேன்.

"நாளைக்கு உங்களைப் பார்க்க சாக்லேட்டோட வாறன்" நான் சொல்ல அவர்களின் அழுகை மெது வாகக் குறைய. அவர்களின் பிடி தளர, மெதுவாய் நான் வாசலை நோக்கி நடந்தேன்.

"இந்த வயது போன காலத்தி லும் இன்னமும் வாழ வேண்டும் என்ற உணர்வும் ஆசையும் அப்போது எனக்கு உண்டானது. என்னை நேசிக்கும் அந்த அறியாப் பருவ குழந்தைகளுக்காகவாவது வாழ வேண்டும் என்ற உணர்வு.

வீதியோரமாக உங்களின் வீட்டை நோக்கி நடக்கும் போது எனக்குள் நான் ஒரு முடிவு எடுத்துக் கொண்டேன்.

மனைவியை இழந்து ஐந்து வருடங்களாகிவிட்ட நானும் ஒரு வகையில் அநாதைதான். நாளை முதல் நானும் இந்தப் பணியாட்களில் ஒருவனாக அந்த அநாதைப் பிள்ளை களைப் பராமரிக்கும் ஒரு அநாதை யாக நான் உயிரோடு இருக்கும் வரை அவர்களுக்காகவே ஒரு பணியாள னாக..." மனோகரன் வாத்தியார், சிவலிங்கத்தைப் பார்த்து ஒன்றும் சொல்லாமல் தலையாட்டினார்.


அவர் மனதிலும் நானும் ஒரு பணியாளனாக, அந்த அநாதை களுக்கு உதவி செய்தால் என்ன என்ற எண்ணம் வேரூண்டத் தொடங்கி யிருப்பதை அவர் முகம் காட்டிக் கொடுத்தது. ●



நாவில் எலும்புகள் இல்லை. ஆனால் அது எலும்புகளை நொறுக்குகிறது.

# பிரபாகரனை நான் சந்தித்த வேளை...

தமிழின உணர்வை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர், தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் தான். அவரது அழைப்பின் மீது 2008-ல் வண்ணியில் அவரைச் சந்தித்து



உரையாடியதன் பின்னர் உண்டான மாற்றங்கள், மறுமலர்ச்சிப் பாதைக்கும் வித்திட் டது. அந்தத் தலைவனை சந்தித்த பின்னர்தான் எனக்குள் இனவிடுதலை உணர்வு வேரூன்றியது" என்று மனம் திறந்தார் திரைப்பட இயக்குநரும், தமிழுணர்வாளருமான சீமான்.

'நாம் தமிழார் இயக்க'த்தின் தலைவரான சீமான், தமது இயக் கத்தை அரசியல் இயக்கமாக மது ரையில் நடைபெறும் மாநாட்டில் பிரகடணப்படுத்த இருந்த கால கட்டத்தில் நான் சந்திக்க நேர்ந்தது.

தமது கடந்த கால கதையைக் கூறி; பட்ட கஷ்டங்களை - வலிகளை சுகமாக சுமந்து, போராட்டங் களை எதிர்நோக்கி, தடைக் கற்களை யெல்லாம் படிக்கற் களாக மாற்றிய சம்பவங் களை தெரிவித்த இயக்குநர் சீமான், 'இனிய நந்தவனம்' வாசகர் கள் மூலமாக உலகத் தமிழர் களுக்கு செய்திவிடுத் தார்.

"எந்த நாளில் நாங்கள் முழுவதுமாக வீழ்த்தப் பட்டோம் என்று கொக்க ரித்தார்களோ, அவர்களை எச்சரிப்பது போல் அதே நாளில் - மே 18ல் வீறு கொண்டெழுகின்றோம் என்பதை அவர்களுக்கும் உலகுக்கும் பறை சாற்ற உதயமாவதுதான் 'நாம் தமிழர் அரசியல் இயக்கம்" என்று சூளு ரைத்த சீமான்;

"நாம் தமிழர் இயக்கத்தின் இன எழுச்சி மாநாடு உலகத் தமிழர்களை நோக்கி ஒற்றுமைக் குரல் கொடுக்



புத்தியுள்ளவன் மனதை மாற்றிக் கொள்வான். முட்டாள் பிடிவாதமாக இருப்பான்.

கிறது. உலகில் எந்த மூலையில் தமிழன் இருந்தாலும், வாருங்கள் ஒரு குடையின் கிழ் என்று அழைக்கிறது. சாதி, மத எல்லைகளைக் கடந்து தமிழன் என்ற ஒரே அடையாளத்தில் ஒன்றிணைவோம். பேரினமாக உயர்வோம். தமிழன் எங்கு அடி பட்டாலும் தட்டிக் கேட்க யாரும் இல்லை என்ற மாயை உடைத்தெறிவோம். நாம் இந்தியர்கள் என்ற நிலைப் பாட்டிலிருந்து விடுபட்டு, நாம் தமிழர் என்ற உணர்வு வர வேண்டும். உலகத் தமிழர்கள், நாம் தமிழர் இயக்கத்தில் இணையவேண்டும். உலகம் தழுவிய இயக்கமாக உருவாக பாடுபடுவோம்" என்று குரல் கொடுக்கும் இயக்குநர் சீமான்;

## கே.ஜி. மகாதேவா.

"ஈழத்தில் தமிழ் இனப்படு கொலை நடந்து, கொத்துக் குண்டு களை பொழிந்து, தள்ளி இன அழிவு நிகழ்த்தியவர்கள்; தமிழர்கள் நிலை இனிமேல் அவ்வளவுதான். எல்லாம் முடிந்துவிட்டது' என்று கோஷ மெழுப்புகின்றனர். இவர்களின் ஆணவச் சிரிப்புக்கு அர்த்தம் காணத் தான் போகின்றார்கள். இவ்விதமாக கூறுபவர்கள் - கருதுபவர்கள் தமிழி னத் துரோகிகள். எனது எதிரிகள்" என்று தனது நிலைப்பாட்டை அடையாளப் படுத்துகின்றார் திரைப்பட இயக்குநர் சீமான்.


## நந்தவனம் ஆண்டுக்கட்டண விபரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 120/- | ரூ. 500/- |
| இரண்டாண்டுக் கட்டணம் | ரூ. 240/- | ரூ. 1,000/- |
| புரவலர் நன்கொடை | ரூ. 2,000/- | ரூ. 10,000/- |

ஆண்டுக்கட்டணத்தை வரைவோலை (DD) பணவிடை (MO) மூலமாக அனுப்பலாம். பண விடையில் அனுப்புபவர்கள் தகவலுக்கான பகுதியில் அவசியம் தங்களின் முகவரி, தொலைபேசி எண்களைக் குறிப்பிடவும். வரைவோலை (DD) அனுப்புவோர் "INIYA NANDAVANAM" என்ற பெயரில் அனுப்பவும். வெளிநாட்டு எழுத்தாளர்கள் ஆண்டுக்கட்டணம் மற்றும் நன்கொடைகளை கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

"INIYA NANDAVANAM"
A/C No. : 30796988329 / Swift Code : SBININ BB 467
Bank : **State Bank of India,** Ramalinga Nagar, Trichy-620 003. TamilNadu, India.

T/ CHANDRASEKARAN
A/c No. 613401513835 / Swift Code: ICICI NBB
Bank: ICICI Bank, Thillai Nagar, Trichy - 620 018. Tamil nadu, S.Inida

மேலதிக விபரகங்களுககு : Iniya Nandavanam, No.18, Periyachetti Street, Woriyur, Trichy - 620 003. Tamil Nadu. S.India. Email : nandavanam04@rediffmail.com, Mobile : 091-94432 84823




**அநேக உண்மைகள் வேடிக்கைப் பேச்சிலேயே வெளியாகி விடுகின்றன.**

மே இதழ் படித்துணர்ந்தேன் ஐ.பி. எல், மட்டைப் பந்து போட்டிகளின் ஊழல் நிலவரங்களைப் பார்க்கிறபோது, மட்டைப் பந்து முட்டாள்களின் விளையாட்டு என்று பெர்னாட்சா சொன்னது உண்மையாகி இன்று அது அனைவரையும் முட்டாளாக்கியிருக்கிறது என்ற தலையங்க முடிப்பு நல்ல முத்தாய்ப்பு




புலவர் ந. ஞானசேகரன்
திருலோக்கி

மே மாத இதழின் முகப்பு அட்டையே துணைவேந்தரின் கம்பீரமான தோற்றத்தை மட்டுமல்ல தமிழ் மொழியின் சிறப்புகளையும் கம்பீரத்தோடு சுட்டி காட்டி கல்வியின் ஆழமான பார்வையை கா.இரா. கப்புதாசு அவர்களும் தமிழை அவசியம் படிக்க வேண்டும் என்று சிங்கப்பூர் பாடத்திட்டம் தயாரிக்கும் குழுவில் இடம் பெற்று பெருமை சேர்க்கும் பொன். சுந்தரராசு அவர்களின் நேர் காணலும் அருமை.

ராக்கி மகசே. கோவை.

வரலாற்று சிறப்பு மிக்க மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் திரு. கற்பககுமாரவேல் நேர்முகம் படித்தேன். தமிழ் மொழிக் கல்வியின் அவசியத்தை இளையகலாம் மயில்சாமி அண்ணாதுரை போல நன்கு விளக்கி யிருந்தார்

இரா. இரவி. மதுரை.

*6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் 22 கோடிபேர்கள், இவர்களில் 42 இலட்சம் பேர்கள் பள்ளிக்குப் போகாதுள்ளனர் என்ற ஆதங்கம் நம் எல்லோரையும் கவலைப்பட வைக்கிற செய்தியாகும் என்று மாணவர்களின் கையில் வல்லரசு இந்தியா என்கிற ஆசிரியரின் கட்டுரை வாயிலாக பெறப்பட்ட தகவல் அதிர வைத்தது.*

ப. தமிழாளி. சேலம்.

பிரேமலதா ரமேஷ் அவர்கள் எழுதிய ரெட்டைப் பணிச்சுமையில் பெண்கள் கட்டுரையை ஒவ்வொரு கணவன் மார்களும் அவசியம் படிக்க வேண்டிய தொகுப்பு - வாள் போட்டியில் 105 பதக்கங்கள் வாங்கிய வாள் வீரன் வி.நித்தின் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.சுப்பிரமணியம்.
பி. கொமார பாளையம்.

இனிய நந்தவனம் மே 2010 இதழ் கிடைக்கப் பெற்றேன் பல்துறைச் செய்திகளும் பயனுள்ள நேர்காணலும், படித்துப் பாதுக்காக்க கூடிய கட்டுரைகளும், கவிதைகளும், இதழினை மிளிரச்செய்கின்றன.

மயிலாடுதுறை இளையபாரதி
சென்னை.

கேடில் விழுச் செல்வம் கல்வி குறித்து சிறப்பு மலர் வெளியிட்ட தங்களுக்கு அன்பான வாழ்த்துக்களும், பாராட்டுகளும் உரித்தாகட்டும். "கல்வி" குறித்து ஒரு சிற்றிதல் பாராட்டும் நலம், பயனுடையார் பட்டுண்டு உலகம் என்பதனை பறை சாற்றியது. ஊழக் குறித்த நுழைவாயிலின் கருத்து சிரிப்புத்தான் வருகுது. தன்மீதான வெட்டுத் தீர்மானம் தோற்றுப் போக ஊழல் மன்னர்கள் மாயாவதி, முலாயம் மீதான சிபிஐ நடவடிக்கைகளை மங்கச் செய்ய, மத்திய அரசு எடுத்த வெட்கங்கெட்ட அரசியல் நடவடிக்கை முன்பு இவைகள் எல்லாம் சர்வ சாதாரணம்.

கா.இர. குப்புதாசு. செஞ்சி.

மே 2010 இதழில் வடுவூர் சிவ. முரளி கவிதைகள் மூன்றும் முத்துக்கள். ஏகலைவனின் கட்டுரை எளிமையான கருத்தோட்டமாக இருந்தது. கட்டுரை முடிவில் கவிஞர் கதேயின் கவிதையை பிரசுரித்தது பொருத்தமான சேர்க்கை. மே இதழ் இதமாக இருக்கிறது.

முசிறி. மலர்மன்னன். முசிறி

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்வுகளும் கற்பனையே. படைப்புகளைத் திருத்தவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

Owned & Publisher : T. Chandrasekaran, No.8, Vellala Street, Woraiyur, Trichirappalli-620 003. Printed by : R. Ravichandran at New Chitra Printers, No.5, Mission Hospital Road, Woraiyur, Trichirappalli - 620 003. Editor : T. Chandrasekaran



அவசியம் ஏற்பட்டாலொழிய யாரும் புதிய வழிகளைக் கண்டுபிடிப்பதில்லை.

நந்தவனம் - இலங்கை சிறப்பிதழ் சிறக்க வாழ்த்துகிறோம்




Luckyland

# LUCKYLAND BISCUIT
## MANUFACTURERS

NATTERANPPATHA, KUNDASALE, SRI LANKO.
TEL:: 0094-081-2420574, 220217, FAX: 0094-081-2420740

**Postal Regs Number. TRY/020/2009-2011** June 2010

**"INIYA NANDAVANAM"** Tamil Monthly RNI No.: TNTAM - 14613 - 14613 / 2002

